
50வது ஆண்டை நோக்கி...

# மல்லிகை

ஆசிரியர் : டொமினிக் ஜீவா




ஒக்டோபர் 2012

விலை 50/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகையின் 400ஆவது இதழுக்கு வாழ்த்துக்கள்!

# POOBALASINGHAM
## BOOK DEPOT

**IMPORTERS, EXPORTERS, SELLERS & PUBLISHERS OF BOOKS, STATIONERS AND NEWS AGENTS**


**Head office :**

340, 202 Sea Street,
Colombo 11, Sri Lanka.
Tel : 2422321
Fax : 2337313
E-mail : pbdho@sltnet.lk

**Branches :**

309A - 2/3, Galle Road,
Colombo 06, Sri Lanka.
Tel : 4-515775, 2504266

4A, Hospital Road,
Bus Stand, Jaffna.



## பூபாலசிங்கம் புத்தகசாலை

புத்தக விற்பனையாளர்கள், ஏற்றுமதி,
இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்.

**தலைமை :**

இல. 202, 340 செட்டியார் தெரு,
கொழும்பு 11, இலங்கை.
தொ.பே. 2422321
தொ.நகல் : 2337313
மின்னஞ்சல் : pbdho@sltnet.lk

**கிளை :**

இல. 309A - 2/3, காலி வீதி,
கொழும்பு 06, இலங்கை.
தொ.பே. 4/515775

இல. 4A, ஆஸ்பத்திரி வீதி,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதை**

வதிரி சி.ரவீந்திரன்

ஈழவாணி

எம்.கே.முருகானந்தன்

நீலாபாலன்

**சிறுகதை**

இரா. சடகோபன்

காத்தநகர் முகைதீன் சாலி

ஸ்ரீரஞ்சனி

**மொழிபெயர்ப்புச் சிறுகதை**

எம்.எம்.மன்ஸூர் -

கலாநிதி கே.ஜயதிலக

**இரசனைக் குறிப்பு**

மா.பாலசிங்கம் -

வீ.ரி.இளங்கோவன்

**ஞாபகக் குறிப்பு**

அன்பு ஜவஹர்ஷா -

அநு.வை. நாகராஜன்

**விமர்சனம்**

இதயராசன் -

நந்தினி சேவியர்

**ஒப்பியல்**

மேமன்கவி

**ஆய்வு**

பிரியதர்ஷினி

**எதிர்வினை**

நிகழ்வின் அவதானங்கள்

கிடைக்கப்பெற்றவை

தூண்டில்

**சொல்ல மறந்த கதை**

லெ.முருகபூபதி :

ரத்ன வன்ஸ தேரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகை

'ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
ஆதியினைய கலைகளில் உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர்
பிறர் ஈன நிலைகண்டு துள்ளுவர்.'

Mallikai Progressive Monthly Magazine

உலகப் பாராளுமன்ற வரலாற்றிலேயே இலங்கை நாடாளுமன்றத்தில் மாத்திரம்தான் ஓர் இலக்கியச் சஞ்சிகை விதந்து பாராட்டப் பட்ட பெருமதி மிக்க சம்பவம் இடம் பெற்றுள்ளது. அங்கு பாராட்டப்பட்ட சஞ்சிகை மல்லிகை. இதனை நாடாளுமன்றப் பதிவேடான ஹன்சார்ட் (4.7.2001) பதிவு செய்ததுடன் எதிர்காலச் சந்ததியினருக்காக ஆவணப்படுத்தியுமுள்ளது. அத்துடன் முதன் முதலில் சலூனில் இருந்து வெளிவந்த இலக்கியச் சஞ்சிகையும் மல்லிகையேதான்!

50-ஆவது ஆண்டை நோக்கி...

ஒக்டோபர் -2012

400

201/4. Sri Kathiresan St,
Colombo - 13.
Tel : 2320721
MallikaiJeeva@yahoo.com

மல்லிகை அர்ப்பணிப்பு உணர்வுடன் வெளிவரும் தொடர் சிற்றேடு மாத்திரமல்ல, அது ஓர் ஆரோக்கியமான இலக்கிய இயக்கமுமாகும்.

மல்லிகையில் வெளிவரும் எழுத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பானவர்கள்!


## மல்லிகையின் 400வது இதழும் இன்றைய தேவையும்.

மல்லிகையின் முதலாவது இதழுக்கு எத்தகைய மனநிலையுடனும் பொறுப்புணர்வுடனும் ஆசிரியர் தலையங்கம் தீட்டினேனோ, அதே பொறுப்புணர்ச்சியுடனும், மனமுழுமையுடனும், தன்னம்பிக்கையுடனும்தான் இந்த மல்லிகையின் 400வது இதழுக்கும் தலையங்கம் தீட்டுகின்றேன்.

இந்த இடைக் காலகட்டத்தில் - சுமார் 47 ஆண்டுகளுக்கு இடையே எத்தனை எத்தனையோ இலக்கிய அநுபவங்களையும், தாக்கங்களையும் பெற்று மல்லிகை விடாப்பிடியாக - இடையிடையே சில யுத்த நெருக்கடியின் காரணமாக இடப் பெயர்வுகளையும், சொல்லொணாச் சிரமங்களையும் பெற்றுப் புதிய புதிய அநுபவங்களுடனும், புதுப் புதுப் பிரதேசச் சூழ்நிலையின் தாக்கங்களையும் அடி உரமாகப் பெற்று மல்லிகை புத்தூக்கத்துடன் தொடர்ந்து வெளிவந்து கொண்டே இருக்கின்றது.

அந்த உள்நாட்டு யுத்த அவலத்தின் காரணமாக மல்லிகை புதிய புதிய அநுபவங்களையும், புதிய இலக்கிய நண்பர்களையும் பெற்றுத் தன்னைத் தானே புது மெருகூட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளதை தரமான வாசகர் வட்டம் துல்லியமாகவே நன்கு அறியும்.

300இற்கும் மேற்பட்ட நல்லறிஞர்களினதும், தரமான கலைஞர் களினதும், மதிக்கத்தக்கப் படைப்பாளிகளினதும் உருவங்களை மல்லிகையின் முகப்பில் அட்டைப்படமாகப் பதிவு செய்யப் பட்டு வந்துள்ளது எதிர்காலச் சரித்திர வரலாற்றிற்குப் பதிவுத் தகவலாகும்.

சிற்றிலக்கிய ஏடுகளின் வரலாற்றில் இது ஓர் அசுர சாதனை யாகும்.

இந்தச் சாதனை வெறுமனே அட்டைப்படத்தில் படைப் பாளிகளின், கலைஞர்களின் உருவங்களைப் பதிப்பித்தல் என்பதற்கும் மேலாக படைப்பாளிகளை, கலைஞர்களைப் பற்றிய ஆவணங்களாக ஒவ்வொரு மாத மல்லிகை இதழும் திகழ்ந்திருக்கின்றது என்பதுதான் எனது உழைப்பின் பயனாகக் கருதுகின்றேன்.

* * * *

ஒரு சிறுசஞ்சிகையின் 400வது இதழ் என்பது பெரும் சாதனைதான் என்ற பொழுதும், இது 50வது ஆண்டை நோக்கி பயணிக்கும் பெரும் சாதனையின் ஒரு கூறுதான்.

மல்லிகை என்பது வெறுமனே ஒரு சிறு சஞ்சிகை அல்ல. அது முற்போக்கு இயக்கத்தின் ஆவண வடிவம் என்பதை நாம் அடிக்கடி எடுத்துக்காட்டி வந்துள்ளோம்.

மல்லிகை தனது 52ஆவது ஆண்டு நோக்கிய பயணத்தில் பல போராட்டங்களையும், மாற்றங்களையும் சந்தித்து வந்துள்ளது. அப்போராட்டங்கள், மாற்றங்கள் என்பது ஒரு சஞ்சிகை சார்ந்த போராட்டங்களும் மாற்றங்களும் மட்டுமல்ல. அவை இந்தத் தேசத்தில் ஏற்பட்ட சமூக, அரசியல், கலாசாரம் சார்ந்தவை என்பதனால் அவை தம்மை பிரதிபலிக்கின்ற, ஆவணப்படுத்துகின்ற ஒரு சிறு சஞ்சிகையாக மல்லிகை தன்னைத் தக்கவைக்க முயற்சித்து வந்துள்ளதை கடந்த 399 இதழ்களையும் தொடர்ந்து வாசித்து வந்தவர்கள் இனங் கண்டு இருப்பார்கள் என நம்புகிறோம்.

இன்றைய காலகட்டத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மல்லிகை யின் வடிமைப்பு மாற்றங்கள் மட்டுமே ஒரு சிறு சஞ்சிகையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திரமான சிறு சஞ்சிகையாக மாற்றி விடாது என்பதை யாவரும் அறிவர். இதை நாங்களும் உணர்கிறோம். அதற்கு அப்பால் ஒரு சிறு சஞ்சிகையின் உள்ளடக்கம்தான் அதனை ஒரு காத்திரமான சிறு சஞ்சிகையாக அடையாளப்படுத்தும்.

ஒரு சிறு சஞ்சிகையின் உருவாக்கத்திற்கு படைப்பாளிகளின் உள்ளடக்க வழியான பங்கு என்பது எவ்வளவுக்குத் தேவையோ அதே அளவான தேவை அதற்கான வாசகர்களின் தொடர்பும் அவசியமானதும் முக்கியத்துவமும் வாய்ந்த ஒன்றாகும்.

நமது சூழலில் படைப்பாளிக்கும், அப்படைப்பை வெளியிடு கின்றவருக்கும், அப்படைப்பை ஆய்வு அல்லது விமர்சிக்கிற வருக்குமிடையில் பேணப்படும் உறவும், தொடர்பும் அப்படைப் பாளிக்கும் வாசகர்களுக்கும் இடையிலான உறவும் தொடர்பும் பேணப்படுவதற்கான சூழல் பரவலாக நம் மத்தியில் உருவாக் கப்படவில்லை.

ஒரு படைப்புக்கான வாசகனோ, வாசகியோ அப்படைப்பை பயின்ற பின், அப்படைப்பைப் பற்றித் தமக்குள் ஒரு கருத்தை - ஓர் அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொள்வது உண்டு. அத்தகைய கருத்தை - அபிப்பிராயத்தை அறிந்து கொள்வதில் ஒரு படைப்பாளி ஆர்வம் கொண்டவராகவே இருப்பார். ஆனால், அவை படைப்பாளிக்குப் போய்ச் சேருவதில்லை. அதற்குக் கராணம் அவை தம்மை படைப்பாளிக்கு சேர்ப்பிப் பதற்கான வழிமுறைகளைப் பற்றி படைப்புக்களை வெளியிடும் பிரிவினர் தீவிரமான நிலையில் சிந்திப்பதில்லை. ஏனெனில் வாசக அநுபவம் என்பது ஒரு படைப்பைப் பற்றிய கருத் தொன்றை உருவாக்கத்திற்கு கணிசமான அளவில் செல் வாக்கு செலுத்துகின்றது என்ற கோட்பாட்டையிட்ட சிந்தனை நம் மத்தியில் பரவலாக்கப்படவில்லை.

இன்னும் ஆழ்ந்து கூறினால், வெளியீட்டு ஊடகங்கள் படைப்புக்களை வெளியிடுவதில் காட்டுகின்ற ஆர்வம், அப்படைப்புக்களைப் பற்றிய சுவைஞர்களின் வாசகர்களின் அபிப்பிராயங்களை, கருத்துக்களை வெளியிடுவதில் காட்டுவ தில்லை. இந்த நிலை மாற வேண்டும். படைப்பாளிக்கும், வாசகர்களுக்கும் - சுவைஞர்களுக்குமிடையிலான உறவு - தொடர்பு நெருக்கமாக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நெருக்கமும் கலை இலக்கிய வளர்ச்சிக்கான ஒரு தேவை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும்.

வரும் காலத்தில் இந்த விடயமிட்டு மல்லிகை தனது கவனத்தைக் கூர்மைப்படுத்தும்.

இதற்கு பரந்த அளவான உழைப்புமிக்க பங்களிப்பு மல்லிகையின் வாசகர்களான உங்களிடமிருந்து எதிர்ப்பார்க்கப்படுகிறது.

A. R. R. HAIR DRESSERS

89, Church Road,
Mattakuliya,
Colombo - 15.
Tel : 0112527219

முற்றிலும் குளிரூட்டப் பெற்ற சலூன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



1983, ஜூலை 29ஆம் திகதி.

அந்த நாளை மறந்துவிட வேண்டுமென்று எத்தனை தினங்கள் நான் நித்திரையின்றி உழன்றிருக்கின்றேன். என்னை, என் குடும்பத்தை சின்னா பின்னமாக சிதைத்த நாள். என் நெஞ்சைக் கீறி, என் கனவுகளைக் கலைத்து, என் கற்பனைகளை மண்ணோடு மண்ணாக்கி இப் போதும் என் கனவுகளில் சிவப்பு இரத்தம் கொப்பளிக்க என்னை மீண்டும் மீண்டும் சித்திரவதை செய்து சிறுகச் சிறுகக் கொன்று கொண்டிருக்கும் கரிய நாள்.

# கருஞ் ஜூலை



– ஆரா. சடகோபன்

அந்த நாளை நினைத்துப் பார்க்க நான் ஒருபோதும் விரும்பியதில்லை. அவை நினைத்துப் பார்த்து பூரித் துப் போகும் நினைவு களாக இருக்கவில்லை. ஏனோ தெரியவில்லை, வாழ்வின் வசந்தமயமான நினைவுகளை விட நெஞ்சை வதைத்து வாட் டும் கோர நினைவுகளே மனதில் ஆழப் பதிந்து விடுகின்றன. இந்த நினைவுகளும் அப்படித் தான். மனதின் ஆழத்தில் இறுகப் பதிந்து கொண்டு என் எதிரிகளாக என் தலை மீது அமர்ந்து கொண்டு என் மார்பைக் கீறிக் கீறி ரணகளமாக்குகின்றன. வானுயர செந்நீரைப் பீறியடிக்கச் செய்து கோரக் காட்சிகளையே நினைவுக் குக் கொண்டு வருகின்றன.

இப்போதும் கூட என் சுயநலத்துக்காகத்தான் இவற்றை என் மனதில் இருந்து கொட்டிவிடத் தீர்மானித் தேன். இப்படிப் பலமுறை நான் முயற்சித்திருக்கிறேன். ஆனால் அந்தப் பாழாய்ப் போன நினைவுகள் என் நெஞ்சை விட்டு நீங்க மறுக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❒ ❒ ❒

அப்போது எனக்கு இருபத்து மூன்று வயது முடிந்து இருபத்து நான்கு வயது ஆரம்பமாகியிருந்தது. அப்போதுதான் பல்கலைக்கழகக் கல்வியை முடித்து தனியார் நிறுவனமொன்றில் சந்தைப்படுத்தல் ஆய்வு அலுவலராக உத்தியோகத்தில் சேர்ந்திருந்தேன். வாழ்வில் பல துன்பங்களையும், வறுமையின் கொடுமைகளையும், மேடு பள்ளங்களையும் அச்சிறு வயதிலேயே அனுபவித்து வளர்ந்திருந்த என்னில் ஒரு முரட்டுச் சுபாவமும், அநீதிக்கெதிரான போர்க் குணமும், தைரியமும், துணிச்சலும், உலகின் சகல அதர்மங்களையும் அழித்தொழித்து விட வேண்டும் என்ற ஓர்மமும் என்னை தன்னம்பிக்கையின் சிகரத்துக்கு இட்டுச் சென்றிருந்தன. காலம், இளமைத் துடிப்பு என்ற வெட்டறிவாளையும் என் கைகளில் தந்திருந்தது. அநீதி எங்கு தோன்றினாலும் அதனை அறுத்தெறிந்து விட வேண்டும் என்ற வேகமும் என்னுள் கிளர்ந்தெழுந்திருந்தது.

மத்திய மலைநாட்டின் வளர்ச்சியே கண்டிராத பின்தங்கிய தேயிலைத் தோட்டமொன்றில் பிறந்த எனக்கு சுற்றியிருந்த சிங்களக் கிராமங்களே விளையாட்டுக் களங்களாக இருந்ததால் சிங்கள நண்பர்களே அதிகமிருந்தனர். சரளமாக சிங்களம் பேசும் என்னை சிங்களவனா தமிழனா என்று பிரித்துப் பார்க்கக் கடினமாக இருக்கிறது எனச் சில நண்பர்கள் தெரிவித்திருந்தனர். பல்கலைக்கழகத்தில் என் ஆங்கிலப் புலமையையும் வளர்த்துக் கொண்டிருந்தேன். இந்த மும்மொழிப் புலமையே எனக்குச் சந்தைப்படுத்தல் ஆய்வு உத்தியோகத்தைப் பெற்றுக் கொடுத்தது. எங்கள் சந்தைப்படுத்தல் ஆய்வுக் குழுவில் நாங்கள் பன்னிரண்டு பேர் அங்கம் வகித்தோம். நான் ஒருவன் தமிழன். இன்னுமொருவன் முஸ்லிம். ஏனையவர்கள் சிங்கள இளைஞர்கள். நாங்கள் ஒரு நல்ல நண்பர்கள் குழுவாக இயங்கினோம். எனினும் எனது யதார்த்தமான திறமைகள் ஏனையோர் மத்தியில் பளிச்சிட்ட போது எங்கள் முகாமைத்துவப் பணிப்பாளர் அதனை அடிக்கடி சிலாகித்துப் பேசிய போது ஏனையவர்கள் மத்தியில் அது என் மீது பொறாமைத் தீயைத் தூண்டியது. தொடர்ந்தும் முகாமைத்துவப் பணிப்பாளர் என்னுடன் மிக நட்பாக இருந்தமை ஏனையவர் மனதை உறுத்தியது.

கொழும்பு நகரையும், சுற்றுப்புற சிறு நகர்களையும் சுற்றிவந்து எங்கள் ஆய்வுப் பணியில் ஈடுபட எங்களுக்கு விசாலமான, வசதியான வாகனம் ஒன்றும் வழங்கப்பட்டிருந்தது. அநேகமான நேரத்தை நாங்கள் கொழும்பு நகர வீதிகளிலும், தொழிலாளர்கள் திரளாக பணியில் ஈடுபட்ட தொழிற்சாலைகளிலும் வினாக் கொத்துக்களுக்கு விடைதேடி ஆய்வில் ஈடுபடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தோம். வாழ்வில் கிடைத்த முதல் தொழில், குதூகலமான நண்பர் குழாம். அது ஒரு பொற்காலம்.

❒ ❒ ❒

முதல் முறையாகத் தொழில் ஒன்று செய்து, மாதா மாதம் கை நிறைய சம்பளம் வாங்கி, சொந்தப் பணத்தில் செலவு செய்து ஜீவித்த வாழ்வின் அந்த இன்பத் துள்ளல் எத்தனை இனிமையானது. எல்லார் வாழ்விலும் அத்தகைய காலம் ஒன்றிருந்திருக்கத்தான் செய்யும். ஆனால் எனக்கு அந்தச் செங்கதிரோனின் பொற்கிரணங்கள் பரப்பிய பொற்காலம் சுமார் ஏழு மாதங்கள் மட்டுமே நீடித்தது. 1983 ஜனவரி முதலாம் திகதி ஆரம்பமான எனது பொற்காலம் 1983 ஜூலை 23ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகதி முற்றுப் பெற்றது. அன்றுதான் தமிழ் மக்கள் வாழ்வில் பெரும் பள்ளத்தையும், ஆழமான வடுவையும், சிங்கள இனவாதிகளின் சகிக்க முடியாத பேயாட்டத்தின், கருஞ்ஜூலையின் முதல் கரிநாள் ஆரம்பமாகியது.

அன்றைய காலைப்பொழுது எனக்கு வழக்கமானதாகவே இருந்தது. அண்மைக் காலமாகவே நாட்டில் நிலவிய இன முறுகல் காரணமாகவும், வடக்கில் முடுக்கி விடப்பட்டிருந்த இராணுவ நடவடிக்கைகள் காரணமாகவும் நாட்டில் ஆங்காங்கே வன்செயல்கள் வெடித்த வண்ணமே இருந்தன. 1977ஆம் ஆண்டு ஆகஸ்ட் இனக் கலவரம், அதனைத் தொடர்ந்து 1978, 1980, 1981 ஆகிய ஆண்டுகளின் பரவலான இன வன்செயல்கள் கண்டியிலும், இரத்தினபுரியிலும் மற்றும் பல மலையகத்தின் நகர்களிலும் ஏற்கனவே இரத்தக் களறிகளை ஏற்படுத்தியிருந்தன. அவற்றாலெல்லாம் மலையக மக்கள் சொல்லவொண்ணா துன்பங்களை அனுபவித்திருந்தாலும் யுத்த அழிவுகளுக்கு மத்தியில் அவற்றை யாரும் பெரிதாகப் பேசவில்லை. அதன் காரணமாக மலையக மக்கள் இதற்கெல்லாம் பழக்கப்பட்டுப் போனரேயன்றி அதற்கெதிரான குரல்கள் எங்குமே எடுபடவில்லை. இனமுறுகல் கடுமையாக ஏற்பட்டு இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் விவாதிக்கப்பட்ட போதெல்லாம் மலையக மக்களுக்கான தீர்வு பற்றி ஒருவரும் வாய் பேசாதிருந்தனர். யுத்தம் முடிந்த பின்னரும் இன்றும் கூட மலையக மக்களின் மீதான வன்முறைகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

எனக்கும் இத்தகைய சம்பவங்கள் எல்லாம் பழக்கப்பட்டுப் போயிருந்தன. என்னிடமிருந்த துணிச்சல், சிங்கள மொழி வளம் எல்லாம் இணைந்து இவற்றைப் பொருட்படுத்தாத ஒரு தன்னம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தன. அன்று எங்கள் சந்தைப்படுத்தல் ஆய்வுக் குழுவினர் பாணந்துறைப் பிரதேசத்துக்குச் செல்ல ஏற்பாடாகி இருந்தது. நேற்றைக்கு முந்தைய தினம் யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலி என்ற இடத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பால் பதின்மூன்று இராணுவ வீரர்கள் இறந்துபோய் விட்டனரென்றும், அவர்களின் இறுதிக் கிரிகைகள் கொழும்பு பொரளை மயானத்தில் இடம் பெறவிருந்ததால் இன வன்செயல்கள் இடம்பெறலாம் என்ற செய்தி பரவலாக அடிபட்ட போதும் அதனை ஒரு எச்சரிக்கையாகவும், பயப்படத்தக்கதாகவும் நான் எடுத்துக்கொள்ளவில்லை. வழக்கம்போல வேலைக்குச் செல்லத் தயாரானேன். அன்றும் எங்களுக்கென வழங்கப்பட்டிருந்த வாகனமும் காலை எட்டு மணிக்கெல்லாம் வந்தது. நானும் நண்பர்கள் குழாத்துடன் இணைந்து கொண்டேன். நாங்கள் காலி வீதியூடாக பாணந்துறைக்குச் சென்றோம்.

அந்த காலை வேளையில் எல்லாமே வழமை போல்தான் நடந்து கொண்டிருந்தன. வழியில் எந்தவிதமான அசம்பாவிதங்களும் நடைபெற்றதற்கான அறிகுறிகள் காணப்படவில்லை. நாங்கள் வழமை போல் எங்கள் எங்கள் கடமைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது சுமார் பதினொரு மணியளவில் 'நிலைமை சரியில்லை என்றும், பொரளை கனத்தையில் வெடிகுண்டில் இறந்த இராணுவ வீரர்களுக்கு இறுதி மரியாதை செய்யச் சென்றவர்கள் ஊர்வலமாகச் சென்று வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும், பல தமிழ்க் கடைகள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளதென்றும் எங்களை திரும்பி வந்து விடுமாறும்' தலைமையகத்தில் இருந்து எங்கள் முகாமையாளர் பணிப்புரை தந்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் திரும்பி வரத் தீர்மானித்த போதும் என்னிலோ எங்கள் குழுவின ரிடமோ எந்தவிதமான பதற்றமோ கல வரமோ தோன்றவில்லை. இளமையின் உச்சத்தில் இருந்தபோது குழுவினர் ஒரு பயமும் அறியாமல் சிரித்துப் பேசி தமது குரங்குச் சேட்டைகளை செய்த வண் ணமே வந்தனர். எனினும் அதன்பின் தொடர்ச்சியாக ரேடியோ மூலமும், தொலைபேசி வாயிலாகவும் கிடைத்த செய்திகள் எங்களுக்குள்ளொரு அமை தியை ஏற்படுத்தியிருந்தன. வெள்ளவத் தையில் பல தீ வைப்புச் சம்பவங்களும் கொழும்புக் கோட்டை, மெயின் வீதி, ரெக்லமேசன் வீதி என்பன பற்றிக் கொண்டு எரிந்தன. அப்போதும் எனக்கு எந்தப் பதற்றமும் இல்லை. என்னைச் சுற்றிப் பத்து சிங்கள நண்பர்கள் இருக் கின்றனர் என்ற துணிச்சலாக இருக்க லாம்.

இருந்தாலும் என்னை அவர்களுடன் அழைத்துப் போவது சங்கடத்துக்குரியதாக இருந்திருக்கலாம் என்று எனக்குப் பின்னர் தோன்றியது. நாங்கள் கொழும்புக் கோட்டையில் துறைமுகத்துக்கு சற்று சமீபமாக இருந்த வழமையாக தேநீர் அருந்தும் ஹோட்டலான 'கொழும்பு பிளாஸா'வுக்குச் சென்று தேநீர் அருந்தி னோம். அங்கே சுற்றிவர பெரும் கலவரம் நிகழ்ந்து கொண்டிருப்பது வெளிப்படை யாகவே தெரிந்தது. மெயின் வீதி ஆரம் பிக்கும் இடமும், ரெக்லமேஷன் வீதி இரண்டு புறமும் வானளாவ தீ எரிந்து கொண்டிருந்தது. இடையிடையே வெடிச் சத்தங்கள் கேட்டன. யார் சுடுகிறார்கள் என அனுமானிக்க முடியவில்லை. எனக் குள் முதற்தடவையாகச் சற்றுப் பதற்ற நிலை தோன்றியது. அதனை நான் வெளி யில் காட்டிக் கொள்ளவில்லை.

சிறிது நேரம் சென்றதும் நண்பர்கள் நிலைமையை ஆலோசித்துப் பார்த்தனர். வாகனங்களில் செல்வோரை இறக்கி தேசிய அடையாள அட்டையை பரி சோதித்த பின்னர் தமிழர் என்று தெரிந் தால் தாக்கப்படுகின்றனர் எனத் தகவல் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து என்னை அவர்களுடன் அழைத்துச் செல் வது பாதுகாப்பல்ல என்று கூறிய நண்பர் கள் தாங்கள் தலைமையகத்துக்குச் சென்று எனக்கு வேறு பாதுகாப்பான வாகனம் அனுப்புவதாகக் கூறி எங்கேயும் போகாமல் இருக்கும்படி பணித்து விட்டு அவர்கள் சென்று விட்டனர். அந்த இட மும், அங்கிருந்தவர்களும், முகாமையாள ரும் எனக்குப் பரிச்சயமானவர்களாதலால் எனக்கு அவர்கள் தீங்கு விளைவிக்க மாட் டார்கள் என என் மனது கூறியது.

வெளியில் கலவரங்கள் மேலும் அதி கரித்துக் கொண்டிருந்தன. நான் செய்வ தறியாது திகைத்து என்னை அழைத்துப் போக வாகனம் வராதா என்று காத்திருந் தேன். ஏன் இன்னும் வாகனம் வர வில்லை என்று ஒரு கட்டத்தில் சந்தேகம் எழுந்தது. விசாரிக்கலாம் என்று நினைத்து ஹோட்டல் முகாமையாளரின் உதவியுடன் எனது சந்தைப்படுத்தல் ஆய்வு முகாமை யாளருடன் தொடர்பு கொண்டேன். அவர் அதிர்ச்சியும் பதற்றமும் கலந்த குரலில் பேசினார். என்னை பத்து நிமிடம் பொறுக் கும்படியும் தான் வந்துவிடுவதாகவும் கூறினார்.

அவருடன் பேசிய பின் எனக்கு ஒரு விடயம் சட்டென விளங்கியது. நான் என் னுடன் வந்த நண்பர்கள் என்று நினைத் துக்கொண்டிருந்த அந்த பதினொரு பேரும் பாதுகாப்புடன் வீட்டுக்குச் சென்று விட்டார்கள். அதிலும் அத்தகைய ஒரு இக்கட்டான கையறு நிலையில் என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிதாபத்துக்குரியதாக்கிய உணர்வு, அவர்கள் என் நிலைபற்றி தலைமையகத்துக்கு அறிவிக்கவில்லை என்ற விடயமாகும். நான் அதன் பிறகும் பட்ட துன்பங்களை விட அன்று அவர்கள் இழைத்த நட்பின் துரோகம் எப்போதும் என் வாழ்வில் ஆறாத புண்ணாகவும், நட்புக்கு இடமற்றதாகவும் ஆக்கியது.

எனது இரத்தம் பதற்றத்தாலும் அவர்கள் செய்த துரோகத்தாலும் எனது மதிப்புக்குரிய முகாமையாளர் மீதும் சந்தேகம் கொள்ள வைத்தது. அவர் வருவாரா என்று நம்பிக்கையற்ற நிலையில் நான் தவித்துக்கொண்டிருந்தபோது அவர் வந்தார். எனது எல்லாப் பயமும் உடனேயே சூரியனைக் கண்ட பனி போல் விலகிப் போய் விட்டன. எனக்கு பழைய தைரியம் வந்து விட்டது. அவர் என்னைத் தோளைத் தொட்டு அழைத்துச் சென்று தனது வாகனத்தின் பின்புறத்தில் ஏற்றி பயப்பட வேண்டாமென்றும், கூடிய மட்டும் சீட்டுக்கடியில் தாழ்ந்து படுத்துக்கொள்ளுமாறும் கூறினார். அது ஒரு பெரிய விசாலமான ஆடம்பர வாகனம். சுற்றிலும் சாயம் பூசப்பட்ட கண்ணாடிகள். யார் உள்ளே இருக்கிறார்கள் என்று தெரியாது. கீழே படுத்துக்கொள்ள வசதியாக இடமிருந்தது. நான் அடியில் முடங்கிக் கொண்டேன்.

எங்கள் முகாமையாளருக்கு நான் தங்கியிருந்த வீட்டைத் தெரியும். முன்னரும் அங்கு வந்து சில தடவைகள் என்னை அழைத்துச் சென்றுள்ளார். வாகனம் வேகமாக நான் வசித்த ராஜகிரிய நாவல வீதியை நோக்கிச் சென்றது. நான் வசித்து வந்த அந்த இடம் இலங்கையின் மிக மோசமான இனவெறியர் வாழ்ந்த இடம் என்பதை பின்னர் அவர்கள் என் முதுகில் கோடு போட்டுத் தோலுரித்துக் காட்டியபோது உணர்ந்தேன்.

நான் சென்ற வாகனம் இடையிடையே சில தடவைகள் மறிக்கப்பட்டு நிறுத்தப்பட்டது. ''கௌத எத்துலே'' (உள்ளே யார்) என்ற வெறிக் குரல்கள் கேட்டன. ''கௌருத் நே'' (யாரும் இல்லை) என்று பதிலளிப்பதும் "யனவா... யனவா.'' (போ...போ...) என்ற குரல்களும் கேட்டன. எனது மனம் ''திக்...திக்...'' என அடித்துக் கொண்டது. அன்று நான் தப்பித்துக் கொண்டேன். என் நண்பர்கள் எனக்கு இழைத்த துரோகத்தை நினைத்து நான் நொந்து போயிருந்தாலும் எனது முகாமையாளர் என் மதிப்பில் உயர்ந்து நின்றார். அவர் என்னை வீட்டில் சேர்த்து விட்டுச் சில தினங்களுக்கு எங்கும் போக வேண்டாம் என்று எச்சரித்து விட்டுச் சென்றார்.

❒ ❒ ❒

அன்றைய இரவும் அடுத்தடுத்த தினங்களில் வந்த இரவுகளும், ஏன் பகல்களும் கூட இந்நாட்டில் தமிழர் வாழ்வின் மிகக் கரிய, கொடூரமான பொழுதுகளாக பதியப்பட்டுப் போய்விட்டன.

அன்றிரவு முழுவதும் என்னிடமிருந்த சிறு ரேடியோவை காதுக்கருகில் வைத்து சத்தம் வெளியில் வந்துவிடாதபடி உலகின் எல்லா மூலை முடுக்குகளிலிருந்தும் ஒலிபரப்பப்பட்ட எல்லாச் செய்தியலைகளையும் திருகித்திருகிக் கேட்டுக் கொண்டிருந்தேன். பிலிப்பைன்ஸ் நாட்டின் வெரிட்டாஸ் வானொலி தமிழர்கள் மீதான சிங்கள இனவெறித் தாக்குதல்களை விலாவாரியாக அறிவித்திருந்தது. இத்தாக்குதல்களில் அரசியல் பின்னணி இருப்பதாகவும், அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் சிலருக்கும் சம்பந்தம் இருப்பதாகவும் கூறியிருந்தது. இனவெறிக் கலவரங்கள் தொடர்ந்துகொண்டுதான் இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதான் இருந்தாலும் எனக்கு வீட்டில் அடைந்து கிடக்க முடியாமல் இருந்தது. கொழும்பு புறக்கோட்டை பழைய சோனகத் தெருவில் என் அண்ணன் ஒருவர் கடையொன்றின் கணக்காளராகத் தொழில் பார்த்து வந்தார். அவருக்கு என்ன நடந்ததென்று தெரியாது. தொலைபேசிகள் துண்டிக்கப்பட்டிருந்தன. அவரைச் சென்று பார்த்து வரலாமென்று புறப்பட்டேன். வீட்டில் இருந்தவர்கள் போக வேண்டாமென என்னை எச்சரித்தனர். உண்மையில் நான் போடிங் இருந்த வீடு ஒரு சிங்கள வீடாக இருந்த போதும் என்னையும் அவர்கள் தங்கள் பிள்ளை போல் பாசம் வைத்து பழகினார்கள். அவர்களுக்கும் ஒரே பையன்தான். க.பொ.த (உ/த) படித்துக் கொண்டிருந்தான். அவனும் என்னை அண்ணா, அண்ணா என்று ஒட்டிக்கொண்டான். நான் கற்று வைத்திருந்த ஓவியக் கலையை அவனுக்கும் கற்றுக்கொடுத்திருந்தேன். அத்துடன் என்னுடைய கம்யூனிச தத்துவங்களும் அவனில் ஒட்டிக் கொண்டு விட்டன. இவர்களை விட என்னில் அதிக பாசம் வைத்திருந்தவள் அடுத்த வீட்டில் வசித்து வந்த அந்த அனோமா என்ற சிட்டுக் குமரி. அவள் அடிக்கடி தன் காதலை சில சில்மிசங்கள் வாயிலாக வெளிப்படுத்தி "நீ என்ன சொல்கிறாய்" என்று தன் காந்தக் கண்களால் கேட்ட போதும், நான் ஒருபோதும் அவளை அண்மிக்கவில்லை. அவளும் அன்று காலையிலேயே என்னைத் தேடிவந்து "தாங்கள் இருக்கும் போது ஒன்றுக்கும் பயப்படத் தேவையில்லை" என்று கூறி விட்டுப் போனாள்.

நான் எல்லாத் தயக்கங்களுக்கும் விடை கொடுத்துவிட்டுப் பகல்பட்டே வெளியே கிளம்பினேன். பஸ் வண்டிகள் வழக்கம் போலவே ஓடிக்கொண்டிருந்தன. 176ஆம் நம்பர் பஸ்ஸைப் பிடித்து மருதானைக்குப் போய் அப்புறம் கோட்டை பஸ்ஸில் போக வேண்டும். 176 பஸ் ராஜகிரியவுக்கு வந்தபோது என் மனதில் மறுபடியும் திக்கென்ற பயம் எழுந்தது. ஒரு பெருங்கூட்டம். தமிழர் கடைகளை உடைத்துக் கொண்டிருந்தது. பலர் கிடைத்த பொருட்களை தோளிலும் கையிலும் தூக்கிக்கொண்டு ஓடினர். ரோட்டில் பல இடங்களில் டயர்கள் எரிந்து கொண்டிருந்தன. எத்தனை பேர் எரிக்கப்பட்டனர் என்று எண்ணுவதற்கெல்லாம் அவகாசம் இல்லை. பொறல்ளையில் இருந்து மருதானை வரை வீதியின் இரு புறமும் ஒரே சாம்பற் காடாக கிடந்தது.

புஞ்சி பொறல்லைச் சந்தியில் பஸ் செல்ல முடியாத அளவுக்குக் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. நான் சிங்கள மக்கள் மத்தியில் பிறந்து அவர்கள் மத்தியிலேயே வாழ்ந்தவன் என்ற ரீதியில் அவர்களை நன்கு புரிந்து கொண்டவன் என்று கருதிக்கொண்டிருந்தேன். ஆனால் அன்று அவர்கள் என் நம்பிக்கையைப் பொய்ப்பித்தார்கள். அவர்கள் கண்களில் அப்படியோர் கொலைவெறி தாண்டவமாடியது. அன்று நான் சுமார் பதினைந்து பேர் வரை கொல்லப்படுவதைப் பார்த்தேன். கூட்டத்தினரிடம் இருந்து தப்பியோடிய சிறுவனொருவனை நான்கு பேர் துரத்திச் சென்றனர். தடுக்கிக் கீழே விழுந்த அவன் தலையில் ஒருவன் கொங்கிறீட் கல்லைத் தூக்கிப் போட்டான். இன்னொரு சமயம் ஒரு டொயோட்டா ஹைஏஸ் வேனில் இருந்து நான்கைந்து இளைஞர்களை ஜன்னலுக்கூடாக உருவியெடுத்தனர். அவர்களை நான்கு புறமிருந்தும் கால்களையும் கைகளையும் இழுத்துப் பிடித்து நார் நாராகப் பிய்த்துப் போட்டனர். அவர்கள் சிங்கள இளைஞர்களா? தமிழ் இளைஞர்களா என்று எப்படி இனங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு பிரித்துப் பார்த்தனர் என்று விளங்க வில்லை. உண்மையில் அவர்கள் சிங்கள இளைஞர்களாக இருக்கலாம் என்று எனக்குள் எழுந்த சந்தேகம் இன்று வரையும் தீர்ந்தபாடில்லை. அவர்களின் ஒரே ஒரு தாரக மந்திரம் 'கொட்டியா, கொட்டியா மரணவா... மரணவா'' (புலி.. புலி... கொல்லு) என்பதாகும்.

அதற்கு மேலும் அந்த பஸ்ஸில் தொடர்ந்து பிரயாணம் செய்ய என்னால் முடியவில்லை. எனது உடம்பின் சகல இரத்தமும் நீராகி உடலுக்குள்ளேயே கரைவது போன்றதொரு உணர்வு. அடி வயிற்றில் குடல் சுருட்டிக் கொண்டது. ஓங்காளிப்பும் வாந்தி எடுக்கும் உந்துதலும் ஏற்பட்டது. நான் திக்பிரமை பிடித்து பஸ்ஸை விட்டு இறங்கி எதிர்த்திசையில் நடந்தேன். என்னை யாரும் பின் தொடர்கிறார்களா என்று திரும்பிப் பார்க்கும் தைரியம் எனக்கிருக்கவில்லை. வீதியில் கலவரத்தின் இரைச்சல் என் மண்டைக்குள் சென்று என்னவோ செய்தது. சற்றுத் தூரம் செல்லும்போது நான் போக வேண்டிய பாதையில் செல்லும் பஸ் ஒன்று வந்தது. அந்த பஸ்ஸில் இன்னும் ஒருவனையாவது ஏற்றிச் செல்லும் அளவுக்கு இடம் இருக்கவில்லை. கதவிலும், ஜன்னல்களிலும் பலர் தொங்கிக் கொண்டிருந்தனர். நான் எனது சக்தி அனைத்தையும் ஒன்று திரட்டி பல்லைக் கடித்துக்கொண்டு ஜன்னலில் ஒருகையும், கதவில் ஒரு காலுமாகத் தொங்கிக் கொண்டேன். எவ்வாறு நான் வீட்டைச் சென்றடைந்தேன் என்பது இப்போது நினைவுக்கு வர வில்லை.

நான் இந்த இரண்டு நாட்களில் இரண்டு முறை உயிர் தப்பி விட்டேன். இன்னும் எத்தனை முறைதான் செத்துப் பிழைக்க வேண்டுமென்று தெரியவில்லை. ஆதலால் அடுத்தடுத்த நாட்களில் வெளியில் போகும் தைரியம் எனக்கு வர வில்லை. கிடைக்கப்பெற்ற செய்திகளின் படி இன்னமும் வன்முறைகள் தொடர்ந்து கொண்டுதான் இருந்தன. மலைநாட்டின் பல நகரங்களும் தீயிட்டுக் கொழுத்தப் பட்டு அனுமான் எரித்த இலங்காபுரியாகி விட்டது. இங்கே எரித்தவன் இராவணன். எரிக்கப்பட்டவர்களோ சீதையும் ராம லக்ஷ்மணர்களும்.

எத்தனை நாளுக்கு எனது அஞ்ஞாத வாசம் நீடிக்கப் போகின்றதென்று தெரிய வில்லை. பாண்டவர்கள் காட்டுக்கு விரட்டப்பட்டு பதினான்கு வருடகாலம் கானக வாழ்க்கையும் ஒரு வருட அஞ்ஞாதகால வாசத்தையும் கழித்த பின்பு ஊர் திரும்பிய பின்பும் அவர்களுக்கு விடிவு காலம் ஏற்படவில்லை. உண்மையில் அதன் பின்னர்தான் குரு ஷேத்திரப் போரே ஆரம்பமானது. அப்படியானால் அடுத்து வரப்போவது குருஷேத்திரப் போராகத் தான் இருக்கப் போகின்றதோ? உலகத்தின் மீதான மனித பாரத்தைக் குறைக்க போர்களையும் யுத்தங்களையும் இவர்கள் இலகுவான வழிமுறைகளாகப் பயன் படுத்துகிறார்களோ? இருக்கலாம்!

குரூரமான இரவுகள் தொடர்ந்தன. உறங்க வேண்டுமென்று கண்களை மூடிக் கொண்டால் முதல்நாள் பார்த்த கொலைகள் மீண்டும் மீண்டும் நினைவுக்கு வந்தன. என்னை மறந்து சற்றே கண்ணயர்ந்து விட்டாலோ அவர்கள் என்னையும் துரத்தி தலை மேல் கல்லைப் போடுவது போன்ற சொப்பணம் தொடர்ந்து... தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது. நாசமாய்ப்போன சொப்பணம் கூட சித்திர வதை செய்தது.

இவ்விதம் ஆறு நாட்கள் கடந்து போய்விட்டன. டி.வி, ரேடியோவில் செய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் கேட்பதும், டெலிபோன் செய்து அலுத்துப் போவதுமாக இருந்தது. கொழும்பில் இருந்து வடபகுதியைச் சேர்ந்த தமிழ் மக்கள் கப்பல் மூலம் யாழ்ப் பாணத்துக்கு அனுப்பப்பட்டனர். தரை வழிப் பயணம் செய்யமுடியாத நிலை. நான் டெலிபோன் செய்து அண்ணனின் நிலையையும் நண்பர்களின் நிலையை யும் விசாரித்துக் கொண்டிருந்தேன். எனது அண்ணன் ஜிந்துப்பிட்டிக் கோயிலில் அடைக்கலம் பெற்றுள்ளதாக வேறு ஒரு வர் வாயிலாக செய்தி கிடைத்தது. பல நண்பர்கள் அருகருகே காணப்பட்ட அகதிகள் முகாம்களில் தஞ்சமடைந்திருந் தனர். சிவராம் என்ற மொறட்டுவை பல் கலைக்கழகத்தில் இறுதியாண்டு பொறி யியல் கல்வியைப் பூர்த்தி செய்திருந்த எனது நல்ல நண்பன் கத்தி வெட்டுக்கு இலக்காகி களுபோவில ஆஸ்பத்திரியில் அனு மதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப் படாததால் உயிரிழந்திருந்தான். ஆனால், அவனைப் போய்ப் பார்க்கும் சூழ்நிலை இல்லை. அப்போது எங்கள் வீட்டிலிருந்து மிகக் கொடூரமான மற்றுமொரு செய்தி கிடைத்தது.

முதல்நாள் இரவு அவர்கள் வசித்த பிரதேசத்தின் சுற்றுப்புறக் கிராமங்கள் தாக்கப்பட்டதாகவும் அன்றிரவு தாமும் தாக்கப்படலாம் என்ற அச்சம் கருதி அவர் கள் எல்லோரும் அருகிலிருந்த பற்றைக் காட்டிலேயே இரவைக் கழித்துள்ளனர். எங்கள் அப்பாயிக்கு (பாட்டி) வயது தொண்ணூறைத் தாண்டியிருந்தது. அவரை அழைத்துச் செல்ல முடியாமல் வீட்டில் தனியே விட்டுச்செல்ல வேண்டி யிருந்துள்ளது. காலையில் சென்று பார்த்தபோது அவர் இறந்து போய்க் காணப்பட்டுள்ளார். பயம் காரணமாகவே அவர் இறந்திருக்க வேண்டும். அப்படி யானால் அவர் இரவு தன்னந்தனியாக என்ன பாடு பட்டிருப்பார்? இந்தச் செய் தியைச் சொன்ன கையோடு என்னை தயவுசெய்து வீட்டுக்கு வர முயற்சிக்க வேண்டாமென்றும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டனர். என்னால் சுவற்றில் மண் டையை முட்டிக்கொண்டு அழுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடிய வில்லை.

இத்தகைய சோகங்களை எண்ணி நான் மிகச் சோர்ந்து போயிருந்த போது தான் அந்த எமகண்டம் வந்தது. அன்று ஜூலை 29ஆம் திகதி மாலைப்பொழுது, இந்த சில நாட்களில் அநேகமாக கொழும் பில் இருந்த எல்லா தமிழர் வீடுகளும் கடைகளும் சூறையாடப்பட்டு விட்டன. எஞ்சியிருந்தவர்கள் என்னைப் போல் இவ்விதம் மூலை முடுக்குகளில் ஒளிந்து கொண்டிருந்தவர்கள் மட்டுமே.

அன்று காலையில் இருந்தே புலிகள் கொழும்பைக் கைப்பற்றப் போகிறார்கள் என்ற வதந்தி பரவி ஒரே பதற்றமாக இருந் தது. நானும் மிகப் பயந்து அகதி முகாமுக்கு ஓடி விடலாமா என்று தவித்துக் கொண்டிருந் தேன். எனினும் வீட்டினர் எனக்கு ஆறுதல் கூறி 'தம்மை மீறி ஒன்றும் நடந்துவிடாது' என்று சமாதானப்படுத்தினர். அவர்கள் வார்த்தைகள் எனக்குத் தெம்பைத் தந்தாலும் 'ஏதும் நடக்கலாம்' என்று ஒரே தவிப்பாகவே இருந்தது. வீட்டுக்கு முன்னால் இருந்த பிரதான வீதியில் வெறியர் கூட்டம் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு அலைந்து கொண்டிருந்தது.

நானும் அந்த வீட்டுப் பொடியன் லலித், அடுத்த வீட்டு யுவதி அனோமா ஆகி யோரும் சீட்டுக்கட்டை வைத்துக் கொண்டு மூன்று பேர் மட்டும் விளையாடும் விளை யாட்டொன்றை விளையாடிக் கொண்டிருந் தோம். இந்தச் சில நாட்களாகவே சீட்டு விளையாடுவதும், கெரம் அடிப்பதும்தான் எங்கள் பொழுதுபோக்கு. லலித்தும் அநோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவும் நான் படும் அவஸ்த்தையை கொஞ் சம்கூட புரிந்துகொள்ளவில்லை. நான் ஒரு தமிழன் என்பதையும் மறந்து என்னை ஒரு சிங்களவனாகவே அவர்கள் பார்த்தார்கள். ஊரெங்கும் சிங்கள வெறியர்கள் தமிழர் களைக் கொன்று குவிக்கிறார்களே என்ற கவலையும் அவர்களுக்கில்லை. நடப்பது ஒன்றும் நம் கட்டுப்பாட்டில் இல்லாதபோது அதனை 'விதி'யென்று நாம் ஏன் அழைக் கிறோம் என்பதன் உண்மையான அர்த்தம் அப்போது எனக்கு தெளிவாக விளங்கியது.

அப்போது யாரும் எதிர்பார்க்காத விதத் தில் முன்கதவின் கண்ணாடிகளும் ஜன்னல் களின் கண்ணாடிகளும் 'படீர்... படீர்' என உடைந்து வீழ்ந்து நொருங்கின. எங்கள் மனங் களும் திகிலால் திக்... திக்கென அடித்துக் கொண்டன. யாரோ கல்லெறி கிறார்கள் என்று யோசிப்பதற்குள் ஏழெட்டுப் பேர், முன் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்தார்கள்.

"கொட்டியா கோ? கொட்டியா கோ?" (புலி எங்கே? புலி எங்கே?) என்று கத்தியபடி அவர்கள் வெறித்தனமாக வந்தார்கள். அவர் கள்" கண்களில்தான் எத்தனை கொலை வெறி. எல்லா தமிழனையும் இல்லா தொழித்துவிட வேண்டுமென்ற கொலை வெறி. மருதானையில் அந்தச் சிறுவனின் தலைமீது கல்லைத் தூக்கிப் போட்ட அதே கொலைவெறி. இனி நான் தப்பிப் பிழைப் பேன் என்பதற்கான எந்த விதமான உத்தர வாதமும் இல்லை என்று என் மனசுக்குத் தோன்றியது. அவர்கள் நேராக என்னிடம் வந்து என் சட்டையைப் பிடித்துத் தூக்கினர். பின் 'தர...தரவென' என் இரண்டு கைகளை யும் பிடித்து இழுத்துச் சென்றனர்.

என்னுடன் இருந்த லலித்தும் அனோ மாவும் ஓ...வென அலறினர். சத்தம் கேட்டு வீட்டுக்காரர்கள் ஓடி வந்து "எப்பா...எப்பா.. அரயாட்ட கான்ட எப்பா... எயா அஹிங் சகயா.... (அவனை அடிக்காதீர்கள்... அவன் அப்பாவி) எனக் கத்தி தடுக்கப் பார்த்தனர். ஆனால் அவர்களுக்கு அது ஒரு பொருட்டா கத் தெரியவில்லை.

அவர்களில் ஒருவன் தடியுடன் எகிறிக் குதித்தான். தடியைக் காற்றில் விசுக்கி "கவுருத் மெயாவ பேரகண்ட ஹெது வொத்... ஒக்காம லாவ மரணவா..." (யாராவது இவனைக் காப்பாற்ற முயற்சித்தால் எல் லோரையும் கொல்லுவோம்) என்று வீட்டுக் காரர்களை மிரட்டினான்.

அவர்கள் என்னை நாயைப் போல் இழுத்துச் சென்றார்கள். வாசலில் திரளாகக் கூடியிருந்த வெறித்தனம் மிக்க கும்பலொன் றுக்குள் வீசியெறிந்தார்கள்.


என் கதி... பசியோடு காத்திருந்த சிங்கக் கூட்டத்துக்குள் தூக்கிப்போட்ட வெள் ளாட்டுக் குட்டிப்போல் ஆனது. என் உடம் பில் எந்த இடமும் தப்பிப் பிழைக்கவில்லை. அடி, உதை, மிதி என என்னை அவர்களை நிலத்தில் இருந்து எழுந்திருக்க கடைசி வரை விடவேயில்லை. என் உடம்பிலிருந்த திராணியெல்லாம் ஒவ்வொரு அடிக்கும், ஒவ்வொரு உதைக்கும் ஈடுகொடுக்க முடி யாமல் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து போய்க்கொண்டிருந்தது. அவர்கள் என்னை அங்கும் இங்கும் தூக்கி வீசினார்கள். பந் தாடினார்கள். உடலில் இருந்த ஆடைகள் நழுவிக்கொண்டிருந்தன. உடம்பில் இருந்து ஜீவன் மெதுமெதுவாக விடை பெற்றுக் கொண்டிருந்தது.

அதன்பின் என் உடம்பில் எந்த அசை வும் தெரியவில்லை. ஒருவன் ஒரு பெரிய டயரை உருட்டிக்கொண்டு வந்தான். மாற்று மொருவன் பெற்றோல் கேன் ஒன்றைக் கொண்டு வந்தான். தெருவோரத்தில் டயரைக் கவிழ்த்து அதன் மீது என்னைத் தூக்கிப் போட்டார்கள். என்னைத் தீக்கிரை யாக்கும் அந்த நிலையிலும் ஒருவன் கட்டையால் ஓங்கி மண்டையில் அடித்தான். அந்த அடி என் சுய நினைவை பறித்துக் கொண்டது. நான் மீள முடியாத அந்த காரத்துக்குள் தள்ளப்பட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபகக் குறிப்பு



# ஆசான்

# அநு.வை. நாகராஜன்

சகல விடயங்களிலும் எனக்கு ஆசானாக இருந்து அநுராதபுரம் மண்ணுக்குப் பெருமை சேர்த்த இலக்கிய வித்தகர் அநு.வை.நாகராஜன் அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பு என்றாலும் அரை நூற்றாண்டு காலமாக மாணவனான, அவரது வாசகனான, அவரை முன்னோடியாகக் கொண்டவன் ஒருவனாகவும் நினைவுகளை மீட்பது சரித்திரத் தையே திரும்பிப் பார்க்க வைக்கிறது.

1965ஆம் ஆண்டு தொடக்கம் அநுராதபுரம் விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தில் அவரிடம் கல்வி கற்ற இரா.நாக ராஜன், இரா.வி.மூர்த்தி ஆகியோருடன் சேர்ந்து நடத்தி வந்த 'தமிழ்ச்சுடர்' என்ற கையெழுத்துச் சஞ்சிகை 1968ஆம் ஆண்டு அச்சுப்பிரதியான போது, 25 சதம் விலையிடப்பட்ட அதன் முதல் பிரதியை அவரிடம் ஒப்படைத்த போது 2 ரூபா தந்து அளித்த உற்சாகம் ஒரு நிகழ்வு. அந்த 2 ரூபாவின் பெறுமதி இன்று 2000 ரூபாய்கு மேல்.

கடந்த வாரம் 'அநுராதபுரத்தின் முதுசொம்' என்ற நூலைத் தொகுத்த போது 1985.03.23 அன்று அவரை செயலாளராகக் கொண்டு இயங்கிய 'அநுராதபுரம் வாலிப முன்னேற்றக் கழகம்' நடத்திய வெள்ள நிவாரண நிதிக்கான கலை விழா தொடர்பான அறிவித்தலை அந்த நூலில் பதித்தல் இன்னொரு நிகழ்வு. அவரது பண்பையும், இளம் தலை முறையை ஊக்குவிக்கும் வழிகாட்டலையும், சமூக உணர்வையும், கலைநயத்தையும் சுட்டிக் காட்டுவதற் காகவே மேலுள்ள பந்திகளில் இரண்டு, ஒனறோடொன்று தொடர்பற்ற இரு சம்பவங்களையும் குறிப்பிட்டிருந்தேன்.



– அன்பு ஜவஹர்ஷா

ஆசானின் கருத்தும், எழுத்தும் என்ற நூலில் பேரா சிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் இவரைப் பற்றி எழுதி உள்ளவற்றின் சுருக்கம் பின்வருமாறு உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'... இலக்கிய வித்தகர், அநு.வை.நா. இந்நூலிலுள்ள முப்பத்தொரு கட்டுரைகள் ஊடாக தன்னுடைய பல்துறை அறிவையும், திறனையும், ஆற்றல்களையும் புலப்படுத்தியுள்ளார். அவர் கையாண்டுள்ள தமிழ்மொழி நடை எளிமையாகவும், அறிவியல் சார்ந்ததாகவும், கூர்மையானதாகவும் அமைந்துள்ளது...''

இக்கருத்து அவரது நூல் பற்றியதாக மட்டும் இருந்தாலும் அதை இங்கு குறிப்பிடுவது முக்கியமானதாகும். 30, 40 வருடங்களாக இந்த மண்ணில் கல்வி கற்று, கற்பித்து கல்வியறிவை மட்டுமல்ல தமிழ் மொழிக்கும், கலை இலக்கியத்திற்கும் விசேடமாக, சைவ சமய திருப்பணிக்கும் அவர் செய்துள்ள பங்களிப்பை இந்தச் சிறிய குறிப்பில் உள்ளடக்க முடியாது.

இந்த மண்ணை விட்டு அவர் இடம் பெயர்ந்த பின்னர் இலக்கிய வித்தகர், சைவப் புலவர் என்ற விருதுகளையும், பட்டங்களையும் பெற்று ஆன்மீகம், கல்வி, தொல்லியல், வரலாறு, மொழி, இலக்கியம் எனப் பல்வேறு திசைகளில் அவரது பணிகள் வியாபித்து, பிரகாசித்தது. 1990ஆம் ஆண்டு அவர் மல்லிகையில் எழுதிய 'நாணலை வருடும் அலைகள்' என்ற ஆக்கத்தில் அநுராதபுரம் மண்ணில் அவரது சேவைகள் துலாம்பரமாக காட்டப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த பின்னர் மேற்சொல்லப்பட்ட துறைகளில் அவரது ஆழ்ந்த அறிவை வெளிப்படுத்தி தமிழ், கலை, இலக்கிய, சமய, கலாசார உலகில் தனி இடத்தைப் பெற்றுக்கொண்டதை பெருமையாக நினைவு கூர்வதோடு அநுராதபுரம் மண்ணிலும் அவர் உருவாக்கிய வாரிசுகள் மத்தியிலும் என்றும் அவர் மறக்க முடியாத மாமனிதராக உயிர் வாழ்வார் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.


## மல்லிகை விளம்பர விபரம்

| | | |
|---|---|---|
| பின் அட்டை (கலர்) | - | 10,000/- |
| பின் உள் அட்டை (கலர்) | - | 5,000/- |
| முன் உள் அட்டை (கலர்) | - | 5,000/- |
| பின் உள் அட்டை (கறுப்பு/வெள்ளை) | - | 4,000/- |
| முன் உள் அட்டை (கறுப்பு/வெள்ளை) | - | 4,000/- |
| உள் முழு பக்கம் கறுப்பு வெள்ளை | - | 1500/- |
| உள் அரைப் பக்கம் கறுப்பு வெள்ளை | - | 750/- |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரசனைக் குறிப்பு**

# வீ.ரி.இளங்கோவன் நூல் :

# மண் மறவா மனிதர்கள்



**க**டந்த காலத்தைப் புரிந்துகொள்ளாது நாளையை நோக்கிச் செல்ல முடியாதென்பர் பட்டறிவாளர்கள். இக்கருத்துரைப்பை உள்வாங்கியதற்கான சில முன்னெடுப்புகள் தற்போது ஈழத்து இலக்கியச் சூழலில் தலை நீட்டத் தொடங்கியுள்ளன. இதே தடத்திலானதாகவே - நாடறிந்த முற்போக்குக் கவிஞரும், புகலிட இலக்கிவாதியுமான வீ.ரி.இளங்கோவன் வெளியிட்ட **'மண் மறவா மனிதர்கள்'** என்ற கட்டுரைத் தொகுப்பு நூலை வரவேற்கலாம்.




தமிழ் மொழியியல், அரசியல், இலக்கியம், சர்வோதயம், அரச பணி ஆகியவற்றின் ஊடாகத் தமது பெயரை அமரத்துவமாக்கிய பதினேழு யாழ்ப்பாணத்துப் பெரியார்கள் பற்றி நூலில் அசைபோடப்பட்டுள்ளது. உனது நண்பனைப் பற்றிக் கூறு உன்னைச் சொல்வதுக்கு என்பார்கள். இந்நூலுக்குள் வாழும் பதினெழுவரும் தன்னலங் கருதாது தமது காலத்தை, உழைப்பை, பணத்தை மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் அள்ளி இறைத்தவர்கள். அந்த மக்களுள் மாணிக்கங்களால் செதுக்கி எடுக்கப்பட்டவரே வீ.ரி.இளங்கோவன் என்பதை இந்நூல் வெளியீடு வெளிப்படுத்து கிறது. ஆம்! பிறத்தியாரின் மான்மியங்களைப் பேசுவதுக்கு, ஆவணப்படுத்துவதுக்குப் பணம் மட்டுமல்ல மனமும் தேவை! அந்த மனத்தவரே வீ.ரி.இளங்கோவன்.



**– மா.பாலசிங்கம்**

இந்நாட்டின் இனவாதம் யாரைத்தான் விட்டது! இந்தப் பிசாசுக்கு இலக்காகி மனமுடைந்த இருவரை அடையாளப்படுத்துகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல். 'சண்' என ஈழத்து அரசியலில் தோழமையோடு அழைக்கப்பட்டவர் நா.சண்முகதாசன். ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் புலமை பெற்ற மாவோயிசப் புரட்சிவாதி. பீகிங் சென்று நவசீனத்தின் சிற்பி மாசேதுங் கைச் சந்தித்தப் பேறைப் பெற்றவர். இறுதி வரை தடம்புரளாத இந்த மாவோவாதி யிடம் பொதுவுடமையைக் கற்றுக்கொண்ட இவரது சீடர்கள் - ஒரு கட்டத்தில் தேசிய வாதம் கோஷித்த இவரைச் 'சண்' எனத் தோழமையோடு அழைப்பதை விடுத்து, தங்கள் பேரினவாதத்தின் கோர முகத் தைக் காட்டி, 'நாகலிங்கம் சண்முகதாசன்' என அழைத்து அவரையொரு முழுத் தமிழராகக் காட்ட முனைந்தனராம்! இவர் 'தமிழ்த் தேசிய இனம் சொந்தக்காலில் நின்று, சுய நிர்ணய உரிமைக்காக போரா டுதல் தவிர்க்க முடியாது!'' (பக்:17) என மனச்சாட்சியை வெளிப்படுத்தி தமிழ் இடதுசாரிகளுக்கு முன்னுதாரணமாக விருந்தவர்!

தோழர் என்.சண்முகதாசன் இன வாதத்தை இடதுசாரியத்துக்குள் கண்டு சலித்தாரெனில், தொண்டர் க.திருநாவுக் கரசு இலங்கைச் சர்வோதயத்துக்குள் கண்டு தலை குனிந்தார். இலங்கைச் சர் வோதய இயக்கத்தின் தலைவர் ஆரிய ரெத்தினாவோடு ஐரோப்பிய நாடுகள் வரை சென்று சர்வோதயத்தைப் பரம்பல் செய்தவர் 'திரு'. ஆனால் அவரது தலை வர் ஆரியரத்னா காந்தியத்தையும், பஞ்ச சீலத்தையும் கண்டுகொள்ளாது, தமிழ்ப் பேசும் மக்களைச் சக்களத்தியின் பிள்ளைகளாகக் கண்டு ஓரவஞ்சனை காட்டினார். இதைக் கண்டுகொண்ட 'திரு' ஆரியரெத் தினாவோடான தொடர்பைத் துண்டித்தார். இந்த இருவர் கற்றுக் கொண்ட பாடங்களும் இன்று மாற்றலாகி யுள்ளதா? இந்த இருவர் குறித்தும் நூலில் வாசித்தபோது இத்தகைய தேடலொன்று உதயமானது.

இந்நூலில் இரு புத்தகக் கடைக்காரர் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஒருவர் ஆர். ஆர்.பூபாலசிங்கம். மற்றவர் ஆ.சுப்ர மணியம்.

வாருங்கள் மாஸ்டர் உங்கள் புத்தக வகையாற காசு / சேருதற்குண்டு, சற்றே இருங்கள் நான் கணக்குப் பார்த்துச் / சீருறத் தருவேன் என்று முகமலர்வோடு சொல்லிக் / கோருதற் கிடமேயின்றிக் கொடுப்பதற்கினியார் உள்ளார்.'' - இந்த நினைவஞ்சிலியைப் படைத்தவர் தமிழறி ஞர் சொக்கன். புத்தக வர்த்தகர், அச்சக வித்தகர் செம்மல் ஆ.சுப்ரமணியம் பற்றி யது. இந்த நினைவஞ்சலிப் பாவை இன் றைய ஈழத்து நூல் வெளியீட்டாளருக்குச் சமர்ப்பித்தால் பொருத்தமாக இருக்கு மல்லவா!

ஆ.சுப்ரமணியத்தின் ஸ்ரீ சுப்ரமணிய புத்தகசாலையை இன்றைய இளைய சந் ததி அறிந்திருக்காத போதும் பூபாலசிங்கம் புத்தக சலையை நன்கு அறிந்து வைத் திருக்கும்! இதன் நிறுவுநர் தமிழரசுக் கட்சி யிலிருந்து பின் கொம்யூனிசிஸ்டானவர். அந்தக் காலத்தில் இந்தப் புத்தகக் கடை யில் கணிசமான எண்ணிக்கையினர் புத்த கங்கள், சஞ்சிகைகளை தூக்கி வாசித்துக் கொண்டு நிற்பர். புத்தகசாலையின் பணி யாளர்களோ, உரிமையாளர் ஆர்.ஆர். பூபாலசிங்கமோ இவர்கள் வியாபாரத்துக் குத் தடையாக இருப்பதைப் பொருட் படுத்தமாட்டார்கள். இவர்களில் பெரும் பாலோர் கொம்யூனிஸ்ட்களாகவோ, இலக் கியவாதிகளாகவோ இருப்பர். இவர்களில் சிலர் வருவதைக் கண்டுவிட்டால் பூபாலர் பதினைந்து மூண்டுகள் வருகுதுகள்! எனச் சொல்லிச் சிரிப்பாராம்! இதன் அர்த் தந்தான் என்ன? எனச் சிலர் தடுமாறுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாம். OC என்றால் சமகாலத்தில் குஞ்சு குருமான்களும் அர்த்தம் சொல்லும். ஆனால், 15, 3 என்றால் பழசுகளும் முழு சத்தான் செய்யும். தயவுசெய்து ஆங்கில அரிச்சுவடியை எண்ணிப் பார்த்து இதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளவும். இந்தப் 15, 3 களுள்ளும் தானுமொருவராகியதை நூலாசிரியர் வி.ரி.இளங்கோவன் வெளிப் படுத்தத் தயங்கவில்லை.

பக்கம் 63இல் அன்றைய புத்தக சாலைகளின் பட்டியலொன்றும் கிடைக் கின்றது. இன்றைய யாழ்ப்பாணப் பஸ்ரி யாம்பிள்ளை புத்தகசாலையும் பதிவாகி யுள்ளது. அப்போ த.தம்பித்துரை அன் சன்ஸ்! அதுக்கும் வயது ஜாஸ்திதான்!

மறைமலை அடிகளாரின் அன்னை யார் - 'பொன்குடு தீவு' என அழைக்கப் படும், புங்குடு தீவில் வாழ்ந்த பெருமை அதற்குண்டு. இத்தீவின் ஏழு தனித்துவ மான ஆளுமைகளை இந்நூல் இனங் காட்டுகிறது. சர்வோதயத் தொண்டர் க.திருநாவுக்கரசு, தமிழறிஞர்களான சி.ஆறுமுகம், வித்துவான் பொன்கனக சபை, பண்டிதர் வீ.நல்லதம்பி, கலாநிதி க.சிவ ராமலிங்கம் ஆகியோரது தகவல் களையும் பரத்தியுள்ளது.

காலத்துயர் சுமந்த கவிதைகள் தந்த கவிஞர் சு.வில்வரத்தினம் குறித்து நூலாசி ரியர் தோழமையோடு விழித்துச் சொல்லி கவிஞரோடு தனக்கிருந்த நெருக்கத்தை வெளிப்படுத்துகிறார். இத்தீவின் செழு மையை ஸ்ரீலங்கா நிர்வாக சேவை மூலம் பரம்பல் செய்த அரச அதிகாரி சி.சடாச் சர சண்முகதாஸ் பற்றியும் அறிய முடி கின்றது.

மாவோவாதியான பிரபல நாவலாசிரி யர் கே.டானியலின் இறுதி மூச்சுத் தமிழ கத்தில் பிரியும்போது அவரருகே இருக் கும் பேறைப் பெற்ற நல்ல மனிதர் வி.ரி. இளங்கோவன். அவரைச் செதுக்கி எடுத்து ஒரு பூரணமான சோஷலிஸ்ட் ஆக்கியத்தில் கே.டானியலுக்குப் பங்குண் டென உருக்கமாகச் சொல்கிறார்.

தனதெழுத்தாற்றலால் இலங்கையில் அதிக பணந் தேடியவரென்ற சாதனை பல்கலை வேந்தன் சில்லையூர் செல்வ ராசனுக்கேயுரியது. அவரது கவித்துறை ஆளுமை அற்புதமானது. அது மட்டுமன்றி அவர் ஆங்கில சினிமாத் துறையிலும் தனது கலை ஆளுமையை வெளிப்படுத் தியதை இந்நூல் அறியத் தருகிறது. அமெரிக்க, அவுஸ்திரேலிய, பிரித்தானி யாப் படங்களில் இவர் நடித்திருப்பது தெரியவரும் புதிய செய்திதான். இவரது உழைப்பில் தயாரிக்கப்பட்ட 'கமம்' என்ற குறுந்திரைப்படம் பேர்லின் திரைப்பட விழாவில் பாராட்டுப் பத்திரம் பெற்றதாக வும் நூலில் தகவல் கிடைக்கிறது. அந்தக் கலைஞன் பற்றிய முழுத் தகவலுமடங் கிய பூரண நூலொன்று வெளிவருவது காலத்தின் தேவையாகும். சீனத்துச் சின் னத் தம்பியை 'பாரதிநேசன்' சின்னத்தம்பி யென்றால் வாசகருக்குப் பட்டென நினைவு வரும். சீன வானொலியில் அறி விப்பாளராகக் கடமை புரிந்த இலங்கை யர். இந்திய அமைதிப் படையைத் திருப்பி அனுப்ப வேண்டுமென அணி சேர்ந்தவர்களில் இவருமொருவர். உதயன் ஆசிரியப் பீடத்தில் கடமை புரிந்ததோடு கே.டானியலின் 'மக்கள் இலக்கியம்' சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவர். சீனத்துச் சின்னத்தம்பி தனது கண்களை மட்டுமன்றி தனது சடலத்தையும் மரித்த பின் தானம் செய்த கொடையாளர்.

விஞ்ஞானம், பொறியியல், தொழில் நுட்பம் ஆகிய துறைகள் சார்ந்த தமிழ்க் கட்டுரைகளைப் படைப்பதுக்கு அக்காலத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் பெருங் கஷ்டம் இருந்தது. இவ்விடயங்களுக்கான கலைச் சொற்கள் அப்போ மிக அருந்தலாக இருந்ததே இதற்கு மூல காரணமாகும். இந்த விடயங்கள் பற்றிய ஆய்வு ரீதியான கட்டுரைகளை வாசிப்பதற்கு அக்காலத்தில் ஊட்டமாக இருந்தது தமிழகத்துக் 'கலைக்கதிர்' சஞ்சிகைதான். இத்தருணத்தில் 'மருத்துவக் கலையில் இலக்கியத் தமிழ்' என்ற ஆய்வுக் கட்டுரையை இச்சஞ்சிகையில் எழுதியவர் வித்தகன் விஸ்வபாரதி. இதுவும் நூல் தரும் புதினம்தான். அந்தக் காலத்தைப் பொறுத்தமட்டில் இது பெருஞ் சாதனை தான்! ஆனால் இன்று அந்நிலை இலங்கையில் இல்லையெனத் துணிந்து அறை கூவலாம்!

ஈழத்துத் தமிழ்ச் சுருக்கெழுத்துத் தந்தை சி.இராமலிங்கம், பெண்கள் உரிமைக்காகப் பெரிதும் பாடுபட்ட வேதவல்லி கந்தையா, எல்லோருக்கும் இனிய மனிதன் முன்னாள் தினகரன் ஆசிரியர் ஆர்.சிவகுருநாதன் ஆகியோர் பற்றிய தகவல்களும் நூலிலுண்டு.

இப்பதினேழு ஆளுமைகளைப் பற்றியும் சகல தரத்து வாசகர்களும் தடங்கலின்றி வாசித்துக் கிரகிக்கக் கூடிய பத்திரிகை எழுத்து நடையில் எழுதியது மட்டுமன்றி அவர்களது படங்களையும் வெளியிட்டு ஆவணப்படுத்தியிருப்பது நூலாசிரியரின் பெருந்தன்மைக்கு எடுத்துக் காட்டாகின்றது.

கட்டுரைகளில் பண்டித நெடியடிக்கும் 'யான்' என்ற சொல்லைத் தவிர்த்திருக்கலாம்! ஆக, நூலில் தொகுக்கப்பட்டுள்ளவை வெறும் அஞ்சலிக் கட்டுரைகளல்ல! சம்பந்தப்பட்டுள்ள பதினேழு ஆளுமைகளுக்கும் நூலாசிரியர் வீ.ரி. இளங்கோவன் செலுத்தும் காணிக்கை! இப்பணி மேலும் நீட்சி பெற வேண்டும். ஈழத் தமிழ் மண்ணின் விழுமியங்களை மேம்படச் செய்ய - உழைத்த கனவான்களின் ஆளுமைகளை இத்தருணத்தில் எமது இளைய பரம்பரையினர் மத்தியில் பரம்பல் செய்ய வேண்டும். அப்போதுதான் சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவைகளாக ஈழத்தமிழர் விழித்தெழுவர்.

தொடர்புகளுக்கு : **V.T.Elangovan**
**vt.elangovan@yahoo.fr**
**T.P. : 0112341942**


**48ஆவது ஆண்டு மலருக்கான படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்ப விரும்புவோர் மல்லிகையின் மின்னஞ்சல் முகவரிக்கு Ms Word இல் பாமினி எழுத்துருவில் (Fonts) அனுப்பி வைக்கவும். குறுந்தகடு (CD) மூலம் அனுப்ப விரும்புவோரும் இதனைக் கவனத்தில் கொள்ளவும்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்ல மறந்த கதை



# காவி உடைக்குள் ஒரு காவியம்



– முருகபூபதி

இலங்கையில் வடமேல் மாகாணத்தில் அமைதியான ஒரு சிங்களக் கிராமம். பசுமையான வயல் வெளிகளும், தென்னந்தோப்புகளும், பாக்கு, கித்துல், மா, பலா, வாழை மரங்களும் செழித்து வளரும் விவசாயக் கிராமம்.

முன்னாள் பிரதமர்கள் பண்டாரநாயக்கா, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, சந்திரிகா குமாரணதுங்க பண்டாரநாயக்கா ஆகியோரின் பரம்பரை தேர்தல் தொகுதியையும், பரம்பரைக் காணிகளையும் கொண்டு விளங்கும் அத்தனகல்லை என்ற நகரத்துக்கு சமீபமான கிராமம்தான் இங்கு நான் குறிப்பிடும் கொரஸ்ஸ.

மினுவாங்கொடை என்ற மற்றுமொரு ஊரைக் கடந்து உடுகம்பொலை என்ற இடத்தையும் கடந்து சென்றால் இந்த கொரஸ்ஸ கிராமம் வரும். அங்கே ஒரு பௌத்த விகாரை. அதன் பிரதம குரு (விஹாராதிபதி) வணக்கத்துக்குரிய பண்டிதர் ரத்ன வண்ஸ தேரோ.

அவரைப் பார்க்கச் செல்பவர்கள் பெரும்பாலும் அந்தக் கிராமத்திலும் அதனைச் சுற்றியுள்ள ஊர்களையும் சேர்ந்த சிங்கள கிராமவாசிகள்தான். அவர்கள்தான் அந்த பௌத்த பிக்குவுக்குத் தினமும் தானம் (மதிய உணவு) முறை வைத்து கொண்டு வந்து கொடுப்பவர்கள். தினமும் பகலில் மாத்திரம் ஒருவேளை உண்வுண்டு பௌத்த தர்மத்தை மக்களுக்குப் போதித்து வந்த அவரைப் பார்க்க அடிக்கடி தமிழ் எழுத்தாளர்களும் சென்று வந்திருக்கிறார்கள் எனச் சொன்னால் இதனை வாசிக்கும் வாசகர்கள் ஆச்சரியப்படலாம்.

அதிசயம்தான். ஆனால் உண்மை.

தனக்கு நாடும் வேண்டாம், அரசுரிமையும் வேண்டாம், அரசியலும் வேண்டாம், இல்லறமும் வேண்டாம் என்று வனம் சென்று தவமிருந்து பரிபூரண நிர்வாணம் எய்தி உலகம் பூராவும் அன்பு மார்க்கத்தை போதித்த கௌதம புத்தரின் சிந்தனைகளைப் பரப்பி பௌத்த மதத்தை இலங்கையில் சேமமாகப் பரப்பும் ஆயிரக் கணக்கான பிக்குகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர்தான் இந்த ஆக்கத்தில் நான் குறிப்பிடும் ரத்ணவன்ஸ தேரோ. பௌத்த பிக்குகள் மத்தியில் இவரை ஆயிரத்தில் ஒருவர் என்றும் குறிப்பிடலாம். காரணம் அரசியலுக்குள் பிரவேசிக்காத ஒரு இலக் கியவாதி.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா சிங்களத் தேசியத்திற்காகவும், தனது அர சியல் தேவைகளுக்காகவும் இலங்கை யில் பௌத்த விகாரைகளுக்குள் இருக்க வேண்டிய பிக்குகளை அரசியலுக்குள் கொண்டுவந்தார். பின்னர், அவர் ஒரு பௌத்த பிக்குவினாலேயே சுடப்பட்டு இறந்தார் என்பது பழைய செய்தி. அவரது மறைவு வாரிசு அரசியலுக்கும் வித்திட்டது என்பதும் கடந்துபோன செய்தி. இன்று இலங்கை பாராளுமன்றத்துக்குள் ஹெல உருமய என்ற கட்சியின் பிரதிநிதிகளாக பிக்குகள் காவி உடையுடன் பிரவேசித் திருக்கின்றார்கள். இலங்கையின் அர சியல் தலைவிதியைத் தீர்மானிக்கும் பல மான சக்தியாகவும் அவர்கள் விளங்கு கிறார்கள். இப்பொழுது இலங்கையில் பல பௌத்த பிக்குகள் தமிழ் படிக்கிறார்கள். தமிழ் பேசுகிறார்கள். அவர்கள் மட்டுமல்ல நாட்டின் முதன்மை அதிபர் பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்திருந்த போதி லும் அவரும் பொது நிகழ்ச்சிகளில் தமிழ் பேசும் மக்கள் முன்னிலையில் தமிழ் பேசு கிறார். இந்த வரலாற்று முக்கியத்துவ நிகழ்வுகளுக்கெல்லாம் முன்னோடியாக விளங்கியவர்தான் இங்கு நான் குறிப்பிடும் வண.ரத்னவண்ஸ தேரோ.

1970களிலேயே தமிழை மாத்திர மல்ல நவீன தமிழ் இலக்கியங்களையும் படித்துத் தேர்ந்தவர் அவர். நான் பிறந்து வளர்ந்த நீர்கொழும்பில் இலக்கிய வட்டம் என்ற அமைப்பை நான் இலக்கியப் பிர வேசம் செய்த 1972ஆம் ஆண்டு காலப் பகுதியில் தொடங்கியிருந்தேன். இந்த அமைப்புக்கு ரத்னவண்ஸ தேரோவை அறிமுகப்படுத்தியவர் மினுவாங்கொடை யைச் சேர்ந்ர் எழுத்தாளர் நிலாம். (இவர் தற்பொழுது இலங்கையில் பிரபல நாளே டான தினக்குரலில் பத்திரிகையாளராக பணியாற்றுகிறார்.) எங்களிடமிருந்த நூல கத்திலிருந்து தமிழ் நூல்களையும், இதழ் களையும் வாங்கிச் சென்று படித்து தமது தமிழ் இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்ட தேரோ, தமது கொரஸ்ஸ கிரா மத்திலும் அருகிலிருந்த வியாங்கொடை, மினுவாங்கொடை முதலான நகரங்களி லும் தமிழ் கற்பிக்கும் வகுப்புகளை உரு வாக்கினார். பல சிங்கள ஆசிரியர்களும் பௌத்த பிக்குகளும் மிகுந்த ஆர்வமுடன் தமிழ் கற்க வந்தார்கள். வாராந்தம் வெள்ளிக்கிழமை மாலையானதும் நான் நீர்கொழும்பிலிருந்து அந்த கொரஸ்ஸ கிராமத்துக்குச் சென்றுவிடுவேன். வெள்ளி, சனி அங்கே விஹாரையில் தங்கியிருந்து தேரோவுடன் பயணித்து அங்கு தமிழ் சொல்லிக்கொடுத்து வந் தேன். எனக்கும் அந்த ஊர் கிராமவாசி களுக்கும் இடையே தோன்றிய நெருக்கத் தையும், வாராந்தம் பௌத்த பிக்கு மாருடன் அலைந்து கொண்டிருப்பதையும் பார்த்த எனது பெற்றோருக்கும், சகோதரி களுக்கும் எங்கே நானும் பௌத்த மதத் தைத் தழுவி துறவியாகி விடுவேனோ என்ற பயம் வந்து விட்டது. இந்தப் பயம் பற்றி ஒருநாள் ரத்னவண்ஸ தேரோவிடம் வேடிக்கையாகச் சொன்னேன்.

ஒரு தைப்பொங்கல் தினத்தன்று எங்கள் வீட்டுக்கு வந்தவர் எங்களுடன் சேர்ந்து பொங்கலும் கொண்டாடி பெற் றோர், சகோதரங்களின் அர்த்தமற்ற பயத் தையும் போக்கினார். பொங்கலும், வடை யும், கத்தரிக்காய் குழம்புடன் மதிய உண வும் ரசித்து சுவைத்துண்ட தேரோவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர் எங்கள் வீட்டிலிருந்தும் பல சந்தர்ப்பங்களில் அவருக்குப் பிடித்த மான கறிவகைகளுடன் உணவு கொண்டு சென்று கொடுத்திருக்கின்றேன்.

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவையும் அவருக்கு அறிமுகப்படுத்தியதும், மல்லிகையை சந்தா செலுத்தி தருவித்து படித்தார். அப்பொழுது மல்லிகை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியானது. 1976ஆம் ஆண்டு மல்லிகையின் முகப்பில் தேரோவின் படம் வெளியானது. நான் எழுதிய நேர்காணல் இந்த இதழில் பிரசுரமானது. எங்கள் நீர்கொழும்பு இலக்கிய வட்டம் பங்கேற்ற இலங்கை வானொலியில் நடந்த சங்கநாதம் நிகழ்ச்சியில் தேரோ அவர்கள் கலந்துகொண்டு இனிய தமிழில் சிறந்த பேட்டி ஒன்றைக் கொடுத்தார். பேட்டி கண்டவர் : அன்று வானொலியில் குறிப்பிட்ட சங்கநாதம் நிகழ்ச்சியைத் தொகுத்து தயாரித்து வழங்கிய பிரபல வானொலி ஊடகக் கலைஞர் வி.என்.மதியழகன். (இவர் தற்போது கனடாவில்) இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1975இல் பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தேசிய ஒருமைப்பாட்டு மாநாட்டை நடத்திய பொழுது முதல்நாள் காலையில்; தொடக்கவுரையையும் தமிழில் நிகழ்த்தினார். பின்னர் தமது கொரஸ்ஸ கிராமத்திற்கு முற்போக்கு எழுத்தாளர்களை வரவழைத்து ஒரு சிறப்பான கருத்தரங்கையே ஊர் மக்களைக் கொண்டு நடத்தினார்.

தேசிய ஒருமைப்பாடு தொடர்பான குறிப்பிட்ட கருத்தரங்கு பற்றிய செய்தியை அன்று வீரகேசரிப் பத்திரிகை தலைப்புச் செய்தியாக வெளியிட்டதுடன் மறுநாள் அது குறித்து ஆசிரியத் தலையங்கமும் எழுதியது. தினகரன் வாரமஞ்சரி விரிவான செய்தியை வெளியிட்டது. அக்காலப்பகுதியில் தமிழ் - சிங்கள மக்கள் மத்தியில் இந்த கொரஸ்ஸ கருத்தரங்கு பரபரப்பாகப் பேசப்பட்டதற்குக் காரணம், அதில் தேரோ அவர்கள் தமிழில் நிகழ்த்திய கருத்தாழம் நிரம்பிய உரைதான். அப்படி என்னதான் பேசிவிட்டார் என்று வாசகர்கள் கேட்கலாம்.

''ஓர் இனத்தையோ மொழியையோ அடிமைப்படுத்தி வேறு இனமோ மொழியோ சுபீட்சம் பெற முடியாது. தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு ஜனநாயகத் தீர்வு காணப்படல் வேண்டும். அப்பொழுது தான் இலங்கையில் தேசிய ஒருமைப் பாட்டை ஏற்படுத்த முடியும்.

ஒரு தமிழ்ப் பெண்ணை ஒரு சிங்கள ஆடவர் திருமணம் முடித்தால் அல்லது ஒரு சிங்களவரை தமிழ்ப் பெண் மணம் முடித்தால் தேசிய ஒருமைப்பாடு பிறக்காது. பிள்ளைதான் பிறக்கும்.''

அவரது நீண்ட உரை தமிழில்தான் நிகழ்த்தப்பட்டது. கொழும்பிலிருந்து வருகை தந்த தமிழ் எழுத்தாளர்கள் திகைத்துப் போனார்கள். அந்தக் கருத்தரங்கில் எழுத்தாளர் சங்கச் செயலாளர் பிரேம்ஜி ஞானசுந்தரன், மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, சோமகாந்தன், மு.பஷீர், மு.கனகராஜன், உரும்பராய் செல்வம், டொக்டர் வாமதேவன், சுப்பிரமணியன், பாராளுமன்ற மொழிபெயர்ப்பாளர் எம்.கே.இராகுலன் (இவர் தற்போது இலங்கை அதிபரின் மொழிபெயர்ப்பாளர்) ஆகியோர் உரையாற்றினர். ரத்னவண்ஸ தேரோ, இக்கருத்தரங்கின் பின்னர் செங்கை ஆழியானின் வாடைக் காற்று நாவலை சிங்களத்தில் மொழிபெயர்த்தார். அதனை மொழிபெயர்க்க முன்னர் அவர் மொழிபெயர்க்க முயன்றது தமிழக எழுத்தாளர் உமாசந்திரனின் முழுநிலவு நாவல். யார் இந்த உமாசந்திரன்?

கல்கி வெள்ளிவிழா நாவல் போட்டிக்காக முள்ளும் மலரும் எழுதி முதல் பரிசைப் பெற்றுக்கொண்டவர். இந்த நாவல் இயக்குநர் மகேந்திரனின் கைவண்ணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஜினி - ஷோபா நடித்து பெரும் வரவேற்பு பெற்றது.

---

உமாசந்திரனின் நாவல் மொழி பெயர்ப்பைத் திடீரென கைவிட்டு, செங்கை ஆழியானின் வாடைக்காற்றை அவர் எடுத்துக்கொண்டதற்குச் சொன்ன காரணம், ''ஆழியான் இலங்கையில் இருக்கிறார். மொழிபெயர்ப்பில் ஏதும் ஐயப்பாடுகள் நேர்ந்தாலும் தொடர்பு கொள்ள முடியும். ஆனால், இந்தியாவிலிருக்கும் உமா சந்திரனை நான் எங்கே போய்த் தேடுவது? வாடைக்காற்றை சிங்களத்தில் மொழிபெயர்க்கும் போதும் அவருக்குச் சிக்கல்கள் தோன்றின.

அக்கதையில் காதலும் இருக்கிறது. சில காட்சிகளைக் கிறக்கம் ஏற்படுத்தும் விதமாகவும் செங்கை ஆழியான் சித்திரித்திருந்தார். வாடைக்காற்று திரைப்படமாக்கப்பட்டபொழுதும் அந்தக் காட்சிகளை இயக்குநரால் தத்ரூபமாக காண்பிக்க முடியவில்லை.

ஒருநாள் என்னிடம் தமக்குள்ள சிக்கலையும் சொன்னார், "பூபதி, நான் ஒரு துறவி. இந்தக் காதல் காட்சிகளை எப்படி மொழிபெயர்ப்பது. பிறகு பெரிய விவகாரமாகி விடுமே...''

"உங்களால் முடிந்தவாறு செய்யுங்கள்'' என்றேன்.

அவர் திக்குவல்லை கமாலின் எலிக்கூடு என்ற சிறிய கவிதை நூலையும் சிங்களத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்.

1977, 1981, 1983ஆம் ஆண்டுகளில் அடுத்தடுத்து இனவாத வன்செயல்கள் தலைதூக்கின. தமிழர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள சொந்த நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்தனர். அகதிகளாயினர். இலங்கையில் ஒருமைப்பாட்டை உருவாக்கத் தமிழ் இலக்கியவாதிகளுடனும், முற்போக்குச் சக்திகளுடனும் கை கோர்த்து வந்த ரத்னவண்ஸ தேரோ மிகவும் மனம் கலங்கிய நாட்கள் அவை. நீர் கொழும்பில் நாம் பாதுகாப்பாக இருக்கின்றோமா என்று தேடித்தேடி வந்ததுடன் மினுவாங்கொடை என்ற சிங்களப் பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லிம் எழுத்தாளர்களான மு.பஷீர், நிலாம் ஆகியோருடன் அடிக்கடி தொடர்புகொண்டு தமிழ் எழுத்தாளர்களின் குடும்பங்களின் நிலைமைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

செங்கை ஆழியானின் வாடைக் காற்று சிங்கள மொழிபெயர்ப்பு பிரதியை பார்வை யிடுவதற்காக எடுத்துச் சென்ற ஒரு சிங்கள அன்பரையும் பின்னர் அவரால் தொடர்பு கொள்ள முடியாத அளவுக்கு நெருக்கடிகள் உக்கிரமடைந்தன. அந்தப் பிரதி தொலைந்த சோகத்திலேயே அவர் நோயாளியுமாகி விட்டார். இந்த இனிய சுபாவம் கொண்ட துறவியை இனிப்பே கொஞ்சம் கொஞ்சமாக அழிக் கத் தொடங்கிவிட்டன. அவர் தீராத நீரிழிவு நோயாளியாக மாறினார்.

நானும் 1987இல் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்து விட்டேன். தொடர்ந்தும் கடிதத் தொடர்பைப் பேணிக்கொண்டிருந்தேன். அவரது ஒரு கடிதத்தில், தாம் பார்வையை இழந்துவிட்டதாகவும், தன்னிடம் தமிழ் கற்ற அவ்வூர் பெண்ணான பத்மசீலி குணதிலக்க என்பவரிடம் தான் சொல்லிச் சொல்லித்தான் இதனை எழுதி அனுப்புகின்றேன் என்று குறிப்பிட்டிருந்தார். அவர் எனக்கு எழுதிய கடிதமும், நான் 2001ஆம் ஆண்டு தொகுத்து வெளியிட்ட 'கடிதங்கள்' நூலில் 80 கடிதங்களுடன் இடம்பெற்றுள்ளது. இலங்கை சென்ற சமயம் அவரைப் பார்ப்பதற்காகப் புறப்பட்ட பொழுது சில எழுத்தாளர்கள், பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் என்னுடன் இணைந்து கொண்டார்கள்.

அவர்கள் : திக்குவல்லை கமால், மு.பஷீர், நிலாம், செ.யோகராசா, சட்டத்தரணி சிவபாலன். (சிவபாலன் தற்போது நோர்வேயில் இருக்கிறார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட நாட்களின் பின்னர் அவர் என்னை எனது குரலிலிருந்தே அடையாளம் கண்டுகொண்டார். அவரது கண்கள் பார்வையை இழந்திருந்தன. கண்கள் திறந்திருந்தன. ஆனால் பார்வையில்லை. அன்றுதான் ஒரு துறவி கண் கலங்கியதைப் பார்த்தேன். தம்மை செங்கை ஆழியானும், டொமினிக் ஜீவாவும் வந்து பார்த்துச் சென்றதாக மிகவும் பெருமையுடன் சொன்னார். செங்கை ஆழியானின் சில கதைகள் சிங்களத்தில் தனி நூலாக வெளியாகியுள்ளது. அந்த நூலை வண. ரத்னவண்ஸ தேரோ அவர்களுக்கே அவரது படத்துடன் சமர்ப்பணம் செய்திருந்தார் செங்கை ஆழியான். அதன் பிரதியை அவர் தம்மிடம் தந்ததாக பெருமிதத்துடன் சொன்ன தேரோ, தன்னால் அதனைப் பார்க்கத்தான் முடியவில்லை என்றார். இந்த வேதனையைச் சித்திரிக்க நாம் வார்த்தைகளைத்தான் தேட வேண்டும்.

நான் அவுஸ்திரேலியா திரும்பிய பின்னரும் தொலைபேசி ஊடாக அவருடன் தொடர்புகளைப் பேணிக்கொண்டிருந்தேன். திடீரென்று ஒருநாள் அவர் கடும் சுகவீனமுற்று கொழும்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக அறிந்தேன். தொடர்ந்தும் தினசரி அந்த விகாரைக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவரது சுகநலன் விசாரித்துக் கொண்டிருந்தேன். ஒருநாள் தொடர்பு கொண்ட போது, மறுமுனையில் பேசிய மற்றுமொரு இளம் பௌத்த துறவி சொன்னார், ''மஹத்தயா (ஐயா) இதோ இப்பொழுதுதான் அவரது பூதவுடல் விஹாரைக்குள் வாகனத்தில் வந்துகொண்டிருக்கிறது.''

நான் இனி இலங்கை சென்றால், அவரது கொரஸ்ஸ கிராமத்தில் அவரது அஸ்தி கலசம் வைக்கப்பட்டிருக்கும் கல்லறையைத்தான் தரிசிக்க முடியும்.


# Happy Photo

**Excellent Photographers**

**Modern Computerized Photography For Wedding Portraits & Child Sittings**

***Photo Copies of Identity Cards (NIC), Passport & Driving Licences Within 15 Minutes***

**300, Modera Street, Colombo - 15.**


**Tel : 2526345**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை


# சிரிப்பின் அர்த்தம்



தினம் புன்னகை பூத்துகொள்ளும்
நீயும் நானும்...
நட்புக்கரம் கோர்த்து
ஒன்றாக மகிழ்வோம்.

கல்வியின்
கருத்துகளையும் புரியாமையையும்
நீ கேட்கும்வேளை
நான் உனக்கு குருவாகிறேன்.
பேச்சுக்கலையை
வளர்ப்பதற்கு நீ
எனக்கு குருவாகிறாய்.

- வதிரி. சி.ரவீந்திரன்




நீயும் நானும்
எங்கும் எப்போதும்
ஒன்றாக ஒட்டிக்கொள்வோம்
எமது நட்பை எல்லோருமே
புதுமையாய் நோக்குவர்!

உயிர்கொடுக்கும்
நல்ல நட்பாய் நாமிருவர்
ஆனாலும்
உன் ஆலயத் திருவிழாவில்
தேர் இழுக்கிறாய்.
என்னைக்கண்டு நீ
சிரிக்கிறாய்.
ஆனால் நீயோ என்னை
அழைக்கவில்லை.
உனக்கருகில் தேரிழுக்க இடமிருந்ததை
நீயும் அறிவாய்.
உன் சிரிப்பின் அர்த்தம்
இப்போதே எனக்கும் புரிந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொழிபெயர்ப்புச் சிறுகதை



சிங்களத்தில் :

கலாநிதி கே.ஜயதிலக



தமிழில் : எம்.எம்.மன்ஸூர்

கலாநிதி கே.ஜயதிலக்க நவீன சிங்கள இலக்கிய முன்னோடிகளில் ஒருவர். மாட்டின் விக்ரம சிங்கவைப் போன்றே சிங்கள இலக்கிய உலகில் போற்றப்படுபவர். 1926ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27ஆம் திகதி இலங்கையின் தென் மாகாணத்திலே சியனா கோறளையில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை ரதாவான கலவன் பாடசாலையில் கற்று வித்தியோதய பல்கலைக்கழக விரிவுரையாளராகக் கடமையாற்றியவர். லண்டன் பல்கலைக்கழகப் பட்டதாரியுமாவார்.

மேலும், ஸ்ரீஜயவர்தன பல்கலைக்கழகத்தால் பேராசிரியர் பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்ட ஒரு கல்விமானுமாவார். தமிழ், சிங்கள, முஸ்லிம் எழுத்தாளர் மத்தியில் இவருக்கு ஓர் அலாதியான இடம் உண்டு.

இவர் அரை நூற்றாண்டுக்கும் மேலாக நாவல், சிறுகதை, விமர்சனம், கவிதை, நாடகம், காவியம் எனும் சகல படைப்புத்துறைகளிலும் ஈடுபட்ட சிங்கள இலக்கியத்தைப் போஷித்தவர். இவரது படைப்புக்கள் வெறுமனே வாசித்து விட்டுத் தூர எறிந்து விடக் கூடியதல்ல. அவை, யதார்த்தம் பொருந்தியதாகவும், மனதிலே ஒரு சலனத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும், சில கவலையை வரவழைக்கக் கூடியதாகவும் உள்ளன.

இன்னும், கலாச்சார அமைச்சில் நீண்டகாலமாக கலாமண்டல சபையின் தலைவராகவும், இலக்கிய மன்றத்தின் உபதலைவராகவும், நூல் வெளியீட்டுச் சபையின் தலைவராகவும் இருந்து சிங்கள இலக்கியத்துக்கும், மொழிக்கும் அரும்பெரும் சேவையாற்றியவர். சிறந்த கல்விமானான இவர், படைப்பாளியாகவும் இருந்து கொண்டு ஒரு காலத்தில் ஏரிக்கரைப் பத்திரிகைகளின் தினமின, சிலுமின போன்ற சிங்கள நாளாந்த வாராந்த வெளியீடு களின் பிரதம ஆசிரியராகத் திகழ்ந்தார். 16 நாவல்கள், 8 சிறுகதைத் தொகுதிகள், 12 சிறுவர் நூல்கள், ஒரு நாடக நூல், கவிதை நூல் என்பனவற்றை எழுதி இந்நாட்டுச் சந்ததியினருக்கு விட்டுச் சென்றுள்ளார்.

தமிழ்ப் பேராசிரியர் கா.சிவத்தம்பியை இழந்த தமிழ் இலக்கிய உலகம் அதனை நிரப்ப முடியாமல் எப்படி இருக்கிறதோ அதேபோல் தனது 85ஆவது வயதில் காலமான கே.ஜயதிலக பேராசிரியரதும் இடத்தை நிரப்ப முடியாமல் சிங்கள இலக்கிய உலகம் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கடமை வேலை வெளி மாவட்டம் ஒன்றுக்கு மாற்றமாகியதை யடுத்து மனைவி பிள்ளைகளுடன் வாடகை வீடு ஒன்றை அமர்த்திக் கொண்டு அப்பிரதேசத்துக்குக் குடியேறினேன்.

அங்கு எனது மனதைக் கவர்ந்தவற்றில் பொதுமக்கள் பாவனைக்காக மாகாண சபை மூலமாகப் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த விளையாட் டரங்கமே பிரதான இடத்தைப் பிடித்தது. கற்பாறை ஒன்றின் மீது வழிந்து வரும் நீரூற்றுக்கு அருகாமையில் அமைந்திருக்கும் மைதானத்துக்கு அப்பால் காணப்படும் வயல்வெளி மிகவும் அழகாகக் காட்சியளித்தது. ஓய்வு கிடைக்கும் மாலை வேளைகளில் எனது ஆறுவயது நிரம்பிய மகனையும், ஐந்து வயது நிரம்பிய மகளையும் அழைத்துக்கொண்டு உலாவுவதற்காக நான் அங்கு செல்வேன். எனது மனைவி எங்களுடன் அங்கு வருவது குறைவாகவே இருந்தது. அநேகமாக அவள் வீட்டு வேலைகளுடன் தங்கி விடுவாள்.

ஒருநாள் நான் பிள்ளைகள் இருவருடனும் மைதானத்தில் மெதுவாக நடந்து சென்றுகொண்டிருந்தேன். மகன் உதேனி ஒரு கையிலும், மகள் லலிதா மறுகையிலும் தொற்றிக்கொண்டு அர்த்தமற்ற கேள்விகளைத் தொடுத்த வண்ணம் நடந்தனர். கீழ் வயல்வெளியில் மாலைச் சூரியனின் கதிர்கள் பட்டதனால் ஓர் அலாதியான அழகு அங்கு காணப்பட்டது. தூரத்தே மைதானத்தில் ஆண், பெண் சிறுவர்கள் ஒன்றுகூடி சப்தமிட்டபடி ஒவ்வொரு விளையாட்டிலும் ஈடுபட்டிருந்தனர். சோகம் நிரம்பிய வாழ்க்கை யின் நினைவுகளை சிறிது நேரம் மறந்திருப்பதற்கு அச்சூழ்நிலை மிகவும் ஏற்றதாக இருந்தது.

நான் பல விடயங்களைப் பல்வேறுபட்டக் கோணங்களில் வைத்து நினைத்துப் பார்க்கப் பழக்கப்பட்டிருந்ததால் ஒரு சிறு விடயத்தைக் கூடப் பெரிதாகச் சிந்தித்து மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டு திருப்தி காண்பேன். மனம் இலகுவாக இருப்பது உடம்புக்குச் சௌகரியத்தையும், இனிமையையும் தந்தாலும் கூட, சிந்தித்துப் பழக்கப்பட்ட மனிதனுக்கு அது இல்லாது போனால் அபினுக்கும், போதைப் பொருளுக் கும் அடிமைப்பட்ட மனிதனுக்கு ஏற்படும் மனநிலையை ஏற்படுத்தி விடுகிறது. வேண்டும் என்றே பிரச்சினைகளைக் கட்டிப்பிடித்துக் கொள்ள மனித மனம் துடிக்கின்ற விதம், சிறிது நேரம் ஒரு நிலைப்படாத உள்ளத்துடன் நான் மெதுமெதுவாகச் சென்ற பொழுது அமர்ந்து ஓய்வெடுப்பதற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த சிமெண்டு ஆசனத்தில் அமர்ந்து கொண்டேன். உதேனியும், லலிதாவும் கொண்டு வந்திருந்த பந்தை அங்கும் இங்கும் வீசி விளையாடத் தொடங்கினர்.

நாங்கள் இருந்த இடத்துக்கு அப்பால் சில பெண்கள் அவர்களது சிறுபிள்ளை களை சுழல் ஊஞ்சலில் வைத்து சுழற்றி விடுவது எனக்குத் தெரிந்தது. அவர்களும் எம்மைப் போன்று அண்மையில்தான் குடி வந்திருக்க வேண்டும். அவர்கள் அணிந் திருந்த ஆடைகள் அப்பகுதி மக்கள் அணியும் ஆடைகளை விடச் சற்று அலங்காரம் கூடியதாகக் காணப்பட்டது. அவர்கள் எப்படிப்பட்டவர்களானால் எனக்கென்ன? எனக்கு எனது கற்பனாவுலகத்தில் அவர்களை விட முக்கியமானவர்களைக் கண்டு கொள்ள வேண்டியிருக்கிறது. அடிக்கடி அதிலிருந்து தூரப் போகும் எனக்கு என் முன்னிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய லோகத்தைக் காட்டியது.

சிறுவர்கள் உல்லாசமாக ஏறி விளையாடிக் கொண்டிருந்த ஊஞ்சல் வயது வந்தவர்கள் கைகளுக்கு மாறியது. ஏழு எட்டு முறை சுழன்று ஓய்ந்ததற்குப் பின்னால் அவர்களை இறக்கி விட்டு வேறு ஒரு கோஷ்டி அதில் ஏறி அவ்வாறே சுழன்றது. வாழ்க்கைச் சக்கரம் போல் சுழலும் ஊஞ்சலில் மாறி மாறி அவர்கள் ஏறிச் சுழல்வதை ஒரு பையன் பார்த்துக் கொண்டே இருந்தான். பின்பக்கம் நார் நாராய்க் கிழிந்து தொங்குகின்ற கறுப்பு நிறக் கட்டைக்கால்ச்சட்டை ஒன்றால் இடுப்புப் பகுதியை மாத்திரம் மறைத்துக் கொண்டிருந்த அந்தப் பையனுக்கு ஆறேழு வயதுதான் இருக்கும். பல நாட்கள் கழுவாததால் பீழை வடிந்த முகம். ஆனால் கண்களில் அப்பாவித்தனமான பார்வை காணப்பட்டது. பையன் மெதுமெதுவாக ஊஞ்சலின் பக்கம் நெருங்கினான். ஊஞ்சலில் அமர்ந்திருந்த பருத்த சரீரம் கொண்ட பெண்ணை மிகவும் ஆர்வத்துடன் பார்த்த வண்ணம் ஒரு கையை ஊஞ்சலின் பலகையில் வைத்தான். அவனும் ஊஞ்சலைச் சுழற்றி விடுவதற்கு அனுமதி கேட்பது போல் அது இருந்தது.

''தின்னப் பொறந்தவனே! நீ அங்கே என்ன செய்யிறே? போ அங்காலே. தரித்திரியம் புடிச்சவன் புள்ளைங்களுக்கிட்ட வார மாதரியப் பாரு!'' சொல்லிய வண்ணம் அவனது முகத்தில் பாய்ந்தாள் அந்த பருத்த சரீரத்தவள். பையன் நனைந்த நாய்க்குட்டியாட்டம் தயங்கித் தயங்கி சிறிது நேரம் அதைப் பார்த்துக் கொண்டு இருந்து விட்டு அவ்விடத்தை விட்டகன்றான்.

இவை எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த எனக்கு, அந்தப் பெண் மீது கடுங்கோபமும், அந்தப் பையன் மீது ஓர் அனுதாபத்தையும் ஏற்படுத்தியது. பொதுமக்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒரு பொதுஇடத்தில் ஏழ்மை காரணமாகப் பலஹீனப்பட்ட ஒரு ஜீவனைத் துரத்தியடிப்பது எவ்வளவு பெரிய கொடுமை? பொதுச் சொத்தை அனுபவிக்க அவர்களுக்கு உள்ள அதே உரிமை அந்தப் பையனுக்கும் உள்ளது. சம அந்தஸ்தில் உள்ள ஓர் உயிர், சமமற்ற ஓர் உருவத்தால் ஓரங்கட்டப்படுவதைப் பார்த்து எனக்கு வெறுப்புத்தான் ஏற்பட்டது. பலமானவர்கள் பல மற்றவர்களை அடிமைப்படுத்துவது இப்படித்தான்.

நான் வெகுதூரம் சிந்தித்தேன். சிந்திக்கச் சிந்திக்க எனது உள்ளத்துக்கு அதிகளவு துன்பந்தான் விளைந்தது. மறுவாரம் மருதானை சமூக சேவைகள் சங்கங்கத்தில் உரையாற்ற என்னை அழைத்திருந்தார்கள். இந்தப் புதிய அனுபவம் எனது பேச்சைக் கட்டி எழுப்ப மிகவும் நல்லதொரு அடிப்படையாக அமைந்தது. அதனால்தான் நான் இந்தச் சம்பவத்தைச் சுவைபடச் சொல்வதற்கு அவ்விடத்தில் இருந்து பேச்சை ஆரம்பித்தேன்.

''அரசாங்கமோ, பொது அமைப்புகளோ சமூக மேம்பாட்டுக்காக எத்தகைய நடவடிக்கைகளை எடுத்தாலும் அந்தச் சமூகப் பிரஜை ஒவ்வொருவரும் கல்வியில் முன்னேற்றம் அடையாத வரையில் முன்னேற்றம் காணாது. பொதுமக்கள் நலன் கருதி எப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், கல்வி முன்னேற்றமற்றவர்கள் இருக்கும்வரை அந்தச் சேவைகள் சாதாரண மக்கள் மத்தியில் பங்கிடப்படப் போவதுமில்லை.''

''இன்று சட்டத்தின் முன் எல்லோரும் சமம். நாங்கள் மேடைகளில் ஏறி நின்று அதுபற்றி உரக்கப் பேசுகிறோம். அப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான போதிலும், நடைமுறை வாழ்க்கையில் எவ்வளவு தூரத்துக்கு அது சமமானதாகச் செயற்படுகிறது? ஒருவருக்கு அன்றாட வாழ்க்கையில் உதவ முடியாத புத்தகத்துக்கு மாத்திரம் கட்டுப்பட்ட சட்ட திட்டங்களால் என்ன பிரயோசனம்?''

''சமுதாயத்தில் பலசாலி அடுத்தவரின் சொத்துக்களைக் கொள்ளையிடுகிறான். இந்தக் கொள்ளை பகிரங்கமானது. அதனால் எல்லோரும் அது பற்றிப் பேசுவார்கள். எனினும் இவ்வாறு பேசாது கொள்ளையடிப்பதுமுண்டு. அது பொதுமக்களுக்கு உள்ள உரிமையும், வரப்பிரசாதமுமாகும்.

இவ்வாறு பேச்சை ஆரம்பித்த நான், இவ்விடத்தில் நான் கண்ட சம்பவத்தை விளக்கினேன். அப்பொழுது அந்தப் பெண், சாதாரண சமுதாயத்தில் பொருத்தமான அளவு கல்வி முன்னேற்றம் அற்ற ஒருத்தி என இனம் காட்டினேன். இதனை உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகளை தம்மபதம், பைபிள், புனித திருக்குர் ஆன், திருக்குறள் போன்ற கிரந்தங்களில் கண்டு கொள்ளலாம்.

இவ்வாறு நான் பத்துப் பதினைந்து நிமிடங்களுக்கு மேல், வானில் சஞ்சரித்திருப்பேன். விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களில் இருவரின் சிரிப்பொலி கேட்டு நான் இருந்த உலகத்தை விட்டு விடுபட்டேன். அவர்கள் பக்கம் பார்த்த பொழுது அந்தப் பெண்ணால் விரட்டப்பட்ட பையன் எனது பிள்ளைகள் இருவருடனும் பந்து விளையாடிக் களிப்பதைக் கண்டேன். பிள்ளைகள் வீசும் பந்து தூரப்போய் விழும் போது அதனைப் பிடித்து வந்து கொடுப்பது அந்தப் பையன்தான். அவனது முழு உடம்பிலும் சொறிச்சலால் ஏற்பட்ட காயத் தழும்புகள் காணப்பட்டது. அந்தப் பையனுடன் விளையாடுவதால் எனது பிள்ளைகளுக்கும் குஷ்டரோகம் ஏற்படலாம். 'என்ன சனியனே!' சகலதையும் மறந்து எனது மனதில் கோபம் எழுந்தது.

''உதேனி... லலிதா...!'' நான் உரக்கக் கடிந்து கொண்டேன். பிள்ளைகள் இருவரும் பந்தைத் தூக்கிக்கொண்டு நான் இருந்த திசையை நோக்கி ஓடிவந்தனர்.

''யார் அவனுடன் உங்களை விளையாடச் சொன்னது? காணலியா, அவனது உடம்பு முழுக்கச் சொறி போட்டு இருப்பதை?''

''அந்தப் பெடியன் நல்ல பெடியன் அப்பா.''


''நல்லந்தான். சொறியைப் பரப்பிக் கொண்டு வைத்தியசாலையில் இருக்க வேண்டி வரும்.'' இவ்வாறு சொல்லிக் கொண்டு அந்தப் பையனின் முகத்தைப் பார்த்தேன். அவன் பயத்தினால் கூனிக் குறுகி நழுவப் பார்த்தான். எனது கோபத்தை வென்று மீண்டும் பரிதாப உணர்வு உள்ளத்தைப் பற்றிக் கொண்டது. நான் நினைத்துக் கொண்டிருந்தவையும் ஞாபகத்தில் வந்தது. எனக்கு என்னை நினைத்து வெட்கமாக இருந்தது. நான் பொக்கட்டில் கையை விட்டு ஐம்பது சத நாணயம் ஒன்றை எடுத்து ''இந்தா எடுத்துக் கொண்டு போய்விடு'' என அவன் பக்கமாக வீசினேன்.

மெலிந்த கம்புகளைப்போலக் காணப்பட்ட அவனது இரு கைகளாலும் அவன் ஐம்பது சதத்தைப் பிடிக்க முயன்றபோது அது விரல் இடுக்குகளுக்கு இடையால் நழுவிக் கீழே விழுந்தது. அவன் அதைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு தலையைத் திருப்பித் திருப்பிப் பார்த்தவண்ணம் சென்றான்.

அவனுக்கு ஐம்பது சதம் கொடுத்தது எனக்கு மனதுக்கு ஒரு பெரிய நிம்மதியை ஏற்படுத்தியது. அவன் இங்கு விளையாடிக் கொண்டிருந்தால் களைப்படைவதைத் தவிர, வேறு எதுவும் நடக்கப் போவதில்லை. இப்பொழுது அவன் ஐம்பது சதத்தையும் கொடுத்து பணிஸ் ஒன்றையும், தேநீர்க் கோப்பை ஒன்றையும் வாங்கிக் குடித்து வயிற்றை நிரப்பிக் கொண்டு சந்தோஷமாக இருப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நந்தினி சேவியரின் 'நெல்லிமரப் பள்ளிக்கூடம்' வாசக நோக்கில் சில குறிப்புகள்





– இதயராசன

சுரண்டல், இனபேதம், சமூக ஒடுக்கு முறை ஆகியவற்றினை சமூக வாழ்நிலை மாந்தர்கள் ஊடாட்டத்தின் மூலம் நெல்லி மரப் பள்ளிக்கூடம் சிறுகதைகளில் வெளிப் படுத்தியுள்ளார் மூத்த எழுத்தாளர் நந்தினி சேவியர்.

மேய்ப்பன், ஒற்றைத்தென்னை, கடலோரத்துக் குடிசைகள், மனிதம், நெல்லிமரப் பள்ளிக்கூடம், தவனம், எதிர்வு, விருட்சம் ஆகிய எட்டுக் கதைகளும் வறுமை, இனம், சாதி ஆகிய மூன்று சமூகப் பிரச்சினைகளையும் உயிர்ப்புடன் நம்முன் பேசுகின்றன.

அயல்கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்ற சிறுகதைத் தொகுதிக்கு அடுத்ததாக இச்சிறு கதைத் தொகுதி, கொடகே நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் கதையை நீட்டி முடக்காமல் தேவைக்கேற்ப அச்சொட்டாகச் சொல்வதில் வல்லவர். கூடவே எள்ளல் உணர்வுடன் வாசிக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டுகிறது. இக்கதைகள் எட்டினையும் விமர்சனம் என்றில்லாமல் ஒரு வாசக அனுபவத்துடன், ஏனைய வாசகர்களும் வாசிக்கவும் ஜோசிக்கவும் வைக்கும் நோக்கில் இரசனைக் குறிப்பாக எழுத முற்படுகின்றேன்.

## முதலாவது சிறுகதை - 'மேய்ப்பன்'

கடலோரத்துச் சிறு கிராமத்தில் தேவாலயம் அமைத்து, தொழிலும் தேவாலயமுமே உலகமாய் வாழ்கின்ற சங்கிலித் தாம் கிறகோரி என்னும் கிழவர், தனது மகன் காணாமல் போனபோது, மரு மகள் தெரேசாவை கந்தசாமிக்கு தவிர்க்க முடியாத காரணத்திற்காக மறுமணம் செய்து கொடுக்கின்றார். இதனை எதிர்த்த ஊர் மக்கள், உறவினர்கள் அவருடன் சேர்த்து தேவாலயத்தையும் ஒதுக்கி விடு கின்றனர். தேவாலயமும் கிழவர் மனதும் பாழ் பட்டுப்போகிறன. இறுதியில் சிதை வுறும் தேவாலயத்தைச் சீர்செய்வதற்காய் மீன் பிடிக்கக் கடலுக்குப் போய், புயலில் சிக்குண்டு உயிர் துறக்கின்றார்.

இங்கு மறுமணம், மதமாற்றம் என் னும் முரண்நிலை யதார்த்தம், தேவா லயத்துடன் பிணைக்கப்பட்ட வாழ்வின் ஊடாக, வாழைப்பழத்தில் ஊசியேற்றுவது போல் நெருடலின்றி சொல்லப்படுகின்றது. பிரதான பகை முரண்பாடு பின்தள்ளப் பட்டு, உள்முரண்பாடுகள் தோண்டி எடுக் கப்பட்டு மக்களை மோதவிடுவதன் மூலம் பகை முரண்பாடு நேசசக்தியாய்த் தோன் றும் மாயைமயக்கம் இக்கதை வாயிலாக ஆசிரியர் சொல்வது வாசகரைச் சிந்திக் கத் தூண்டுவனவாய் உள்ளது.

## இரண்டாவது கதை - 'ஒற்றைத் தென்னை'

அந்த மீனவக் கிராமத்தில் இரு கிழ வர்கள் வசிக்கின்றார்கள். இருவரும் சம வயதினர். அதிரியாரின் மகன் பாலை தீவு படகு விபத்தில் இறந்து போகின்றான். அச்சோகத்தினைத் தாங்க முடியாமல் தவிக்கும் போது, சந்தியாக் கிழவர் அவரைத் தேற்றுகிறார். இதில் உள்ள முரண் யாதெனில், சந்தியாக் கிழவர் தம் குடும்பமே அவ்விபத்தில் இறந்து போன சோகத்தை வைத்துக்கொண்டே தேற்று வதுதான். ஒரே வாழ்க்கை முறையில் ஒரு வரின் மனம் வைரித்துப் போகின்றது, மற்றது நொந்து போகின்றது.

கதை இவ்வாறு முற்றுப்பெறுகிறது.

குருநகரில் எதற்குமே அசையாத இரண்டு தென்னைகள்!

ஒன்று அது. மற்றது?

சந்தியாக் கிழவன்!

அவளுக்கு உடல் சிலிர்க்கிறது.

வாழிடமும் தொழில் முறையும் அத னூடு பெறுகின்ற பட்டறிவும் தனியாளுக் குத் தனியாள் வேறுபடுவது தவிர்க்க முடியாது. இறப்பு என்பது யதார்த்தமான போதிலும் ஜீவனையே உலுக்குகின்ற சாவு அவனைத் தும்பாக்கிப் போடுகின்ற சோகத்தினையும் அதனைத் தைரியத் துடன் எதிர்கொள்ளும் இன்னொருவரும் காட்டப்படுவதன் மூலம் சிறுசிறு ஏமாற்றங் களுக்காய்த் துவண்டுபோய், தற்கொலை செய்ய அலைபவர்களை விழிப்பூட்டுவ தாய் உள்ளது. இதனைக் கற்பனையில் காட்டாமல் அவர்களின் வாழ்வின் மூலமே காட்டுவது, கதாசிரியரின் கருத்தியல் தளத்தின் பலத்தினைக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாவது கதை - 'கடலோரத்துக் குடிசைகள்'

மீனவக் கிராமத்தில் பிறந்து வளர்ந்த இரு சகோதரர்கள் ஒருவர் மரியசேவியர், மற்றவர் எட்வேர்ட். மரியசேவியர், சுவாமி யார் படிப்புப் படிக்க வெளிநாடு சென்று, வெகுகாலத்தின் பின்னர் கிராமத்துத் தேவாலயத்திற்குப் பங்குத் தந்தையாக வருகின்றார். தம்பி தனது மச்சாளைத் திருமணம் புரிந்து, கடற்றொழிலாளியாக வறுமையில் வாடுகின்றான். தமது உழைப் பினைச் சுரண்டும் சம்மட்டியாருக்கு எதி ராகக் கலகம் செய்கின்றான். சுரண்டலை ஆதரிக்கும் அத்தனையையும் கேள்விக்கு உட்படுத்துகின்றான். கோவிலும் சுரண்டல் வர்க்கத்திற்குச் சார்பாக இருப்பதால் அப் பக்கமே போகாமல் விடுகின்றான். அண் ணன் பங்குத்தந்தை - தம்பி புரட்சிக்காரன், அண்ணனுக்கு வசதியான வாழ்க்கை, விதவிதமான உணவுகள் ஆனால் பசி யில்லை. தம்பியின் குடும்பம் பசியுடன் உணவில்லை. இதற்கான காரணத்தைத் தேடுவதாய்க் கதை இயல்பாக நகர்கிறது.

"நீங்கள் செத்தபிறகு வாற சொர்க்கத் தைப் பற்றிப் பேசிறியள். நாங்கள் இப்ப இருக்கிற நரகத்தைப் பற்றிப் பேசிறம். அதை மாத்தப் பார்க்கிறம்."

"உதுகளைப் பேசிறதாலைதான் உங்கட வீட்டிலை வறுமை பஞ்சம்." சுவாமியார் இடைமறித்தார். எட்வேட் சிரித்தான்.

"ஒவ்வொரு நாளும் கோவில்லையே பழி கிடக்கிற சந்தியா அண்ணை, பேதுறு அம்மான் எல்லோருக்கும் இதனாலையே வறுமையும் கஷ்டமும்?"

"மரங்களின் வேர்களினருகே கோடரி கள் போடப்படுகின்றன. நற்கனி கொடாத மரங்கள் அத்தனையும் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும்."

எட்டுக் கதைகளிலும் முதன்நிலை யில் வைத்துப் பேசப்பட வேண்டிய கதை இது. மதம், அரசியல், வறுமை, சுரண்டல் என்பன பற்றி வாசகரைக் கட்டுடைத்துச் சிந்திக்கத் தூண்டுகின்ற வகையில் முக்கி யத்துவம் பெறுகின்றது.

## நான்காவது கதை - 'மனிதம்'

இவரது கதைகளில் இக்கதை இரு பக்கங்களைக் கொண்டதாகும். ஷெல் வீச்சில் முத்தரும் மனைவியும் செத்துப் போயினர். அவர்களது கைக்குழந்தையும் அண்ணனும் மட்டுமே தப்பியுள்ளனர். ஊரே சிதைக்கப்பட்ட நிலையில் யார் யாரைப் பார்ப்பது. ஒரு வயோதிபர் வெளியே வந்து கைக்குழந்தையைக் கை யேற்கிறார். சிறுவன் தாய் தந்தையரின் உடலத்தை விட்டுச் செல்ல மனமின்றி அங்கேயே இருக்கின்றான்.

"எனக்குப் பசிக்குதுதான்... நானும் உங்களோட வந்துட்டா ஐயாவையும் அம்மாவையும் காகம் கொத்திப் போடும்... நீங்க தங்கச்சியைக் கொண்டு போங்க..."

யுத்தத்தின் கொடுமையினை சிறுகச் சொல்லி, பெருக உரைக்கும் கதை - மனிதம் மரிக்கவில்லை என்பதை சாட்சி பகரும் கதை.

## ஐந்தாவது கதை - 'நெல்லிமரப் பள்ளிக்கூடம்'

நெடுத்து வளர்ந்த நெல்லிமரத்தடி யில் உள்ள பள்ளிக்கூடம், அதில் கல்வி கற்ற சமூக ரீதியாக ஒடுக்கப்பட்ட சிறுவர் களுக்கு ஏனைய சிறுவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டன. கிணற்றில் தண்ணீர் அள்ளியதற்காக ஒரு சிறுவன் ஆசிரியரால் கடுமையாகத் தண்டிக்கப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறான். அதன் விளைவு அக்கிராமத்துச் சிறுவர்கள் பாடசாலை செல்லாமல், பின்னர் தங்கள் கிராமத்தில் பாடசாலையை நிறுவி பள்ளிக்குச் செல்வதே கதை.

''வாத்தியார்! இவன் கிணற்றுக் கட்டுல ஏறி துலாக்கயிற்றைப் பிடிச்சவன்''

ஜீவகாருண்யம் என்ற பெயரை மட்டுமே சூடியிருந்த மாணவன் முட்டுக்காய்த் தலையரிடம் போட்டுக் கொடுத்தமைதான் கதையின் முக்கிய திருப்புமுனையான அமைகிறது.

இக்கதையில் பொன்னையா வாத்தியார் எனும் அன்புள்ளங் கொண்ட, மாணவர்களால் நேசிக்கப்படுபவரும், முட்டுக்காயர் எனும் பட்டப்பெயர் கொண்ட பஞ்சாட்சரம் வாத்தியார், இவருக்கு நேர் விரோதமான சாதித் திமிர் கொண்டவராகச் சித்தரிக்கப்படுகின்றார். அமைதியான மாணவர் அநீதிக்கு எதிராக தமது எதிர்ப்பினைப் புலப்படுத்துவதும் அதன் மூலம் ஒடுக்கப்படும் கிராமம் ஒன்று விழிப்புறுவதும் இயல்பாகவே சொல்லப்படுகின்ற போதிலும், சொல்ல வேண்டியவை நிறையவேயுண்டு என்பதை கதையில் சொல்லப்படும் தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது. இது ஒரு நாவலுக்கான நகர்வைக் கொண்டுள்ளது எனலாம்.

## ஆறாவது கதை - 'தவனம்'

83 யூலைக் கலவரத்தின் போது புறக்கோட்டையில் இறால் ஏற்றுமதி செய்யும் நிறுவனத்தில் வேலை பார்க்கும் தமிழர். சக சிங்கள ஊழியர்களால் காப்பாற்றப் பட்டுப் போஷிக்கப்படுவதையும் கலவரத்தின் அவலமும் சொல்லப்படும் கதை இது. அந்தத் துன்பியல் நிகழ்வில் நாமும் அகப்பட்டது போன்ற உணர்வைத் தருகிறது.

## ஏழாவது கதை - 'எதிர்வு'

யாழ்ப்பாணத்தில் யுத்தச் சூழ்நிலையில் தமது மாமனாரின் மரணச் சடங்கினை திட்டமிட்டபடி சமயாசாரப்படி நடாத்த முடியாமல் சவுக்குத் தோப்பில் புதைத்தமையும், மரண வீட்டில் குண்டு வீச்சு நிகழ்ந்த போது தப்பிப் பிழைக்க ஓடிய உறவினர்கள் பின்பு நிஜத்தினை மறந்து,

''அவன் கொமியூனிஸ்காரன். அது தான் கோயில் சடங்கு செய்யாமல் மாமனைச் சவுக்குமரக் காட்டுக்குள்ள தாட்டுப்போட்டான்'' என்று கூறும் முரண் நிலை யதார்த்தத்தினை இலாவகமாக சிறப்பான கதை கூறல் மூலம் சொல்வது இக்கதையின் வெற்றியாகும்.

## எட்டாவது கதை - 'விருட்சம்'

இலங்கை இனப்பிரச்சினையின் வெளிப்பாடே மதங்கள் மோதிக் கொள்வது. சாதாரண மக்களின் உணர்வினைத் தூண்டுவதும், இதில் புத்தரும் - பிள்ளையாரும் அரச மரத்துக்கு உரிமை கோருவது இலங்கைக்கே உரித்தான பண்பாகும். இதனை மரங்களை நேசிக்கும் ஒரு உள்ளத்தின் மூலம் யதார்த்தத்துடன் இணைத்து, பண்பாட்டுத் தளத்தில் விபரிப்பது அற்புதமாக வாய்த்துள்ளது. இக்கதை நிச்சயமாக சிங்களத்திலும் பிற மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டியதாகும்.

''போர்க்காலத்துக்கு முன்னர் ஊரின் பெருவிருட்சங்கள் பல சிறு கோவில்களாக சூலங்களுடன் நின்ற நிலைமாறி ஆக்கிரமிப்பின் இன அடையாளங்களாக அரச மரங்களும் அதன் கீழ் புத்தர்களும் உருவாகி விட்டமையை இவன் அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருட்சங்களே இன அடையாளங் களா...?

பெரு விருட்சங்களின் கீழ் தெய்வங் களை வைத்துப் பூசிப்பதன் மூலம் விருட் சமும் அச்சூழலும் புனிதம் பெறுவதோடு சூழலும் பேணப்படுகிறது என்பது ஏதோ உண்மைதான். ஆனால் சகோதரர்கள் போல வாழவேண்டியவர்கள் அந்தத் தெய் வத்திற்காக ஒருவரை ஒருவர் வெட்டி வீழ்த்துவதுதான் அவலத்திலும் அவலம். இதனை நந்தினி சேவியர் சிறப்பாகவே பதிவுசெய்துள்ளார்.

முடிவுரை :

எனவே இச்சிறுகதைகள் எட்டும், எட்ட முற்படும் எல்லைகளை விட்டகலாத படியே எம்மையும் ஈர்க்கின்றன. அனைத்து விதமான அவலங்களிடையே யும் மனிதம் மரிக்காமல் இன்னும் உயிர்ப் புடன் உள்ளதையே இக்கதைகள் சொல் லாமல் சொல்லி நிற்கின்றன என்ற வகை யில் இச்சிறுகதைத் தொகுதிக்கு 'மனிதம்' என்ற தலைப்பிட்டிருப்பினும் பொருந்தும் என்று கூறி, நந்தினி சேவியரிடமிருந்து இன்னமும் துடிப்பான, துல்லியமான கதைகளை எதிர்பார்த்து, தளரா மனத் துடன் முதிர்ந்த கதைகளை இன்னும் இன்னும் வேண்டி நிற்கின்றோம்.


## புதிய சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா 1000/- (ஆண்டு மலர் உட்பட)

தனிப்பிரதி - 50/-

**ஓராண்டுச் சந்தாவுக்குக் குறைந்தது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

சந்தாவை நேரடியாகவோ, காசோலையாகவோ செலுத்தலாம்.

வங்கித் தொடர்புகளுக்கு

Dominic Jeeva - 072010004231,
Hatton National Bank, Sea Street, Colombo - 11

எனக் குறிப்பிடவும்.

காசோலையாக செலுத்துவதாயின் மேற்கூறிய வங்கிக் கணக்கு இலக்கத்திற்கு வைப்பிலிட்டு அதன் பற்றுச் சீட்டுப் பிரதியை மல்லிகைக்கு அனுப்பி வைக்கவும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13. தொலைபேசி : 2320721

mallikaijeeva@yahoo.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மல்லிகை வாழ்த்துகின்றது

கொடகே தேசிய சாகித்திய விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் பெற்ற



**பேராசியர் விமல். ஜீ.பலகல்லே**



**திரு.கே.எஸ்.சிவகுமாரன்**



**திருமதி. ஜீன் அரசநாயகம்**

**ஆகியோரை மல்லிகை வாழ்த்துகின்றது.**

# கொடகே தேசிய சாஹித்திய விழா - 2012

கடந்த 6.9.2012 அன்று மாலை 3.00 மணிக்கு கொழும்பு ஜோன்.டி.சில்வா அரங்கில் கொடகே தேசிய சாகித்திய விழா நடைபெற்றது.

பேராசிரியர் குணதாஸ அமரசேகர அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பேராசிரியர் வீனீ வாதார அவர்களும், திரு.தெளிவத்தை ஜோசப் அவர்களும் சிறப்புரைகள் ஆற்றினார்கள்.



இவ்விழாவில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நீண்ட காலமாக பணியாற்றிய மூவருக்கு கொடகே வாழ்நாள் சாதனை விருதுகள் வழங்கப் பட்டன.

மேலும், சிங்களம் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் 2011ஆம் ஆண்டு வெளிவந்த சிறந்த நாவல், சிறுகதை, கவிதை மற்றும் மொழிபெயர்ப்பு, இளைஞர்களுக்கு இலக்கியத் துறைகள் சார்ந்த சிறந்த நூல்களுக்கான விருதுகளும், சான்றிதழ்களும் பணப் பரிசில்களும் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்தோடு மும்மொழிகளிலும் 2011 ஆம் ஆண்டு முதல் நூல்களை வெளியிட்ட படைப்பாளிகளுக்கும் விருதுகளும், சான்றிதழ்களும் பணப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இம்முறை இவ்விழாவின் விசேட அம்சங்களாகச் சொல்வ தென்றால் சிங்கள, தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் 2011ஆம் ஆண்டு வெளிவந்த சிறந்த நாவல்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் பணப் பரிசு வழங்கப்பட்டது. மற்றும், 2011ஆம் ஆண்டு சிங்கள மொழியி லிருந்து தமிழுக்கும், தமிழிலிருந்து சிங் களத்திற்கும் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த நூல் ஒவ்வொன்றுக்கும் விருதுகளும், சான்றிதழ்களும் பணப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

ஆனாலும், 2011ஆம் ஆண்டு வெளி வந்த சிங்கள நாவல்களில் விருதுக்கு தகைமையான நாவல்கள் இல்லை என்ற நடுவர்களின் தீர்ப்பின் பிரகாரம் சிறந்த சிங்கள நாவலுக்கான விருதும், 2011ஆம் ஆண்டு தமிழ் மொழியிலிருந்து சிங்களத் திற்கு மொழிபெயர்த்த நூல்களில் கொடகே விருதுக்கு தகைமையான நூல் ஒன்றும் வெளிவரவில்லை என்ற நடுவர் களின் தீர்மானத்தின் பிரகாரமும் அவ் விருதும் வழங்கப்பட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கொடகே தேசிய சாஹித்திய விழா பற்றி முக நூலில் அறிவிப்பு வெளியிடப் பட்ட பொழுது அதனையிட்டு இலங்கையைச் சார்ந்தவர்களும், வெளி நாட்டில் வாழும் தமிழ் பேசும் சமூகத்தவர் எனப் பலர் தம் கருத்துக்களைப் பதிவு செய்திருந்தனர். அவற்றில் சிலவற்றை இங்கு பதிவு செய்கின்றோம்.

**நஜ்முல் ஹுசைன் - கொழும்பு**

நான்கு சகாப்த காலமாக தமிழ் இலக் கியத்துறையில் ஈடுபட்டு கே.எஸ்.சிவ குமாரன் அவர்களுக்கு இவ்வருட

## மல்லிகை வாழ்த்துகின்றது

### கொடகே தேசிய சாகித்திய விழாவில்



2011ஆம் ஆண்டு வெளி வந்த சிறந்த நாவலுக்கான விருதை தனது **'சொடுதா'** எனும் நாவலுக்காய்ப் பெற்ற **திரு. மன்னார் எஸ்.ஏ. உதயன்**



2011ஆம் ஆண்டு வெளி வந்த சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கான விருதை தனது **'நெல்லிமர பள்ளிக் கூடம்'** எனும் சிறுகதைத் தொகுப்புக்குப் பெற்ற **திரு. நந்தினி சேவியர்**



2011ஆம் ஆண்டு வெளி வந்த சிறந்த கவிதைத் தொகுப்புக்கான விருதை தனது **'தோட்டுப்பாய் மூத்தம்மா'** எனும் கவிதைத் தொகுப்புக்குப் பெற்ற **திரு. பாலமுனை பாரூக்**

ஆகியோரை **மல்லிகை** வாழ்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொடகே வாழ்நாள் சாதனையாளர் விருது கிடைத்தமை வரவேற் கத்தக்க அம்சமாகும்.

பேனா மனோகரன் - தமிழ்நாடு

சங்கத் தமிழ் வளர்ந்த வைகைநதிக் கரையோரத்தில் இருந்து கொடகே தேசிய சாஹித்திய விருதுகள் பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்.

மொஹமட் அசீஸ் கொழும்பு

## மல்லிகை வாழ்த்துகின்றது



கொடகே தேசிய சாகித்திய விழாவில் 2011ஆம் ஆண்டு வெளிவந்து சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த நூலுக்கான விருதை, 2011ஆம் ஆண்டு வெளிவந்த **குணசேகர குணசோம** அவர்களின் **'வனகத வீரயோ'** என்ற சிங்கள இளைஞரின் நாவலான **'காட்டுப்புர வீரர்கள்'** என்ற பெயரில் தமிழில் மொழிபெயர்த்த **திரு. திக்குவல்லை கமால்**



கொடகே தேசிய சாகித்திய விழாவில் 2011ஆம் ஆண்டுக்கான முதல் நூலை வெளியிட்ட தமிழ் படைப்பாளிக்கான விருதினை **'மீண்டு வந்த நாட்கள்'** எனும் தனது முதல் நூலுக்குப் பெற்ற **வதிரி சி.ரவீந்திரன்** ஆகியோரை **மல்லிகை** வாழ்த்துகின்றது.

சிங்கள நூல்களை வெளியிடும் கொடகே நிறுவனம் தமிழ் நூல்களை வெளியிடுவதும், தமிழ் இலக்கியத்தை ஊக்குவிக்கும் வகையில் இவ்வாறான விழாவில் அதற்கு விருதுகளும், பரிசில்களும் வழங்குவது பாராட்டக்கூடிய அம்சமாகும்.

அதே நேரத்தில் 2011ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்கள் எனத் தெரிவு செய்து கொடுக்கப்பட்ட விருதுகள் சரியானவை. ஆனால் இறுதிச் சுற்றுக்கு வந்த நூல்களின் தெரிவு திருப்தியளிக்கவில்லை.

தமிழ்ப் பேசும் சமூகம் இந்த வகையில் கொடகே நிறுவனத்திற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளது.

* * *

மேலும் கொழும்பிலிருந்து உடுவை தில்லை நடராஜா, மொஹமட் நௌஸர், வானொலி அறிவிப்பாளார் போல் அன்ரனி, யாழ்ப்பாணத்திலிருந்து கோகுலம் வாசகர் வட்டம், சின்னராஜா விமலன், திவாகரன், கை.சரவணன், துளசி ஆனந், தெல்லிப்பழையிலிருந்து கேசிணி கோணேஸ்வரன், தமிழ்நாட்டிலிருந்து யுகமாயினி ஆசிரியர் சித்தன், நாகபட்டினத்திலிருந்து சதீஸ் பிரபு, நியுசிலாந்திலிருந்து சுப்ரா எம்.சுப்ரமணியம் ஆகியோர் வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தினகரன் முன்னாள் பிரதம ஆசிரியர் 'கலாசூரி' ஆர்.சிவகுருநாதன் அவர்களின் நினைவுப் பேருரையும், கட்டுரைப் போட்டி பரிசளிப்பும்



கடந்த 9.9.2012 ஞாயிறு மாலை 4.45 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கம் மண்டபத்தில் பேராசிரியர் சபா ஜெயராசா தலையிலும், புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையிலும் தினகரன் முன்னாள் பிரதம ஆசிரியர் 'கலாசூரி' ஆர்.சிவகுருநாதன் அவர்களின் நினைவுப் பேருரையும், கட்டுரைப் போட்டி பரிசளிப்பும் விழா நடைபெற்றது.





'கலாசூரி' ஆர்.சிவகுருநாதன் அவர்களின் புகைப்படத்திற்கு மலரஞ்சலியினை இன்றைய தினகரன் வார மஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேல் செலுத்தினார். வரவேற்புரையை திரு. விசு கருணாநிதி அவர்களும், தொடக்கவுரையை திரு. அந்தனிஜீவா அவர்களும் நிகழ்த்தினார்கள்.





'கலாசூரி' ஆர்.சிவகுருநாதன் அவர்களின் நினைவுப் பேருரையை பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்கள் நிகழ்த்தினார். தேர்வுக் கட்டுரைகளுக்கான சில குறிப்புகளை தே.மது சூதனன் அவர்களும், கவிதாஞ்சலியை தமிழ்த் தென்றல் அலி அக்பர் அவர்களும் நிகழ்த்தினார். லேக் ஹவுஸ் ஆசிரி யப்பீட பணிப்பாளர் திரு. சீலரத்ன செனரத் இவ்விழாவில் தமிழில் உரையாற்றியது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.





கட்டுரைப் போட்டியில் முதலாவது பரிசை மூதூர் முகமது பௌசி அவர்களும், இரண்டாவது பரிசை வாழைச்சேனை கனகரட்னம் சிவதர்சன் அவர்களும், மூன்றாம் பரிசைப் பெற்ற கொழும்பு தர்சினி எட்வட் ரவீந்திரராஜா ஆகியோர் விருதுகளையும், பணப் பரிசில்களையும், சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆறுதல் பரிசு பெற்றவர்களில் கொழும்பு, எஸ்.வீ.ரட்னசிங்கம், தம்பிஐயா தேவதாஸ் ஆகியோர் சமூகமளித்து தமது பரிசில் களைப் பெற்றுக்கொண்டனர்.

இவ்விழாவில் சிறுவர்களுக்கான கட்டுரைப் போட்டிகளுக்கான விசேடப் பரிசில்களும் வழங்கப்பட்டன.



'கலாசூரி' ஆர்.சிவகுருநாதன் அவர்கள் எழுதிய 'இலங்கையில் தமிழ்ப் புதினப் பத்திரிகையின் வளர்ச்சி' எனும் நூலில் இடம்பெற்ற தினகரனும் தமிழ் இலக்கிய வளர்ச்சியும் எனும் பகுதி ஒரு சிறு நூலாக இவ்விழாவில் வெளியிடப்பட்டது.

'கலாசூரி' ஆர்.சிவகுருநாதன் ஞாபகார்த்த குழு ஏற்பாடு செய்திருந்த இவ்விழாவில் பரிசில்கள் பெற்றவர்கள் சார்பில் ஏ.எஸ்.எம்.பெளசி அவர்கள் ஏற்புரை நிகழ்த்தினார். ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்கள் நன்றியுரையை நிகழ்த்தினார். நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியவர் 'தமிழ்த் தென்றல்' தம்பு சிவா.



இவ்விழாவிற்கு வருகை தந்திருந்த பார்வையாளர் சிலரிடம் இவ்விழா பற்றி கேட்ட பொழுது :

**ப.ஆப்டீன் :** கலாசூரி இ.சிவகுருநாதன் அவர் கள் நினைவுகூர வேண்டிய ஒருவர் தான். இது வரவேற்கத்தக்கது. நமக்கு சேவை செய்து சென்றவர்களை நாம் மறந்து விடுகிறோம். சிவகுருநாதன் அவர்கள் என்னை போன்ற பல படைப் பாளிகளின் வளர்ச்சியில் எந்த விதமான ஆர்பாட்டமுமின்றி உதவியவர். அவரது எளிமை இதுவரை காலமும் எந்த வொரு பத்திரிகைத்துறை ஆளுமை களிடமும் நான் காணாதது. தொடர்ந்தும் அவர் நினைவுகூரபட வேண்டும்.

* * *

**எம்.சண்முகராஜா** : இந்த நாட்டு தேசிய பத்திரிகைகளின் வரலாறு கவனத்திற்குரியது. கனதியான இலக்கிய வளர்ச்சிக்கு இந்த நாட்டில் தோன்றிய தேசிய பத்திரிகைகள் பெரும் பங்காற்றி வந்துள்ளன. வருகின்றன. அந்தவகையில் தினகரன் ஈழத்து கலை இலக்கிய போக்கில் பெரும் மாற்றத்தை காண பணியாற்றி வந்துள்ளது. நீண்ட காலமாக அதன் ஆசிரியராக பணி யாற்றிய கலாசூரி இ.சிவகுருநாதன் அவர்கள் காலமும் தினகரன் வரலாற் றில் முக்கியத்துவம் வாய்ந்த கால கட்டம். அத்தகைய ஒரு மனிதரை ஞாபகப்படுத்திய இவ்விழா பாராட்டத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதை**

# நீ - அது

நீ எனை
தூசணை செய்தபோது
தென்றல் என் அன்பை
யாசித்தது
வேசியென ஏசி ஒதுக்க நீ
முயன்ற போது
தூறல்மழை புணரத் தொடங்கியிருந்தது
இதழ் நனைத்து உடைகளைந்த
மேனி கழுவிப் பின்
நறுமணங்கள் தெளித்துத்
தென்றலை அழைத்து
துவட்டி நன்றாய் மீண்டும்
புணர்ந்தது பெருமழையாய்
இப்பொழுது
உன் வார்த்தைகளை நான்
ஆமோதித்திருந்தேன்.



- ஈழவாணி



# அந்த ஆன்மா

கால்களோடு சில
காலங்களாய் பயணித்த
கதைகளை
ஒரு ராத்திரியும்
பல தாழ்களை அடக்கிய
ஒரு குறிப்பேடும்
முடித்துவைத்திடலாமென முற்றாய்
முயன்று முயன்று தோற்றுநிக்க
மோச வார்த்தை வீச்சுக்களோடு
சரசப்பட்டுக்கிடந்த பரந்த
மேகக்கூட்டங்களை
ஆற்றுப்படுத்தியவாளே மேலாய்
உயர்ந்துகொண்டிருந்தது
கால்களை இயக்கிவந்த
அந்த ஆன்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்திய
# அமரர் இலங்கையர்க்கோன்
# ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி முடிவுகள்

முதற்பரிசு ரூபா 15,000/= - 'தமிழ்ப் பௌத்தன்'
பரிசு பெறுபவர் - வேலாயுதம் சிவராஜா, மகாத்மா காந்தி வீதி, அளவெட்டி.

இரண்டாம் பரிசு ரூபா 10,000/= - 'மீளவும் வாழ்வேன்'
பரிசு பெறுபவர் - எஸ்.பி.கிருஷ்ணன், 244/4, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

மூன்றாம் பரிசு ரூபா 7,500/= - 'கனவுகள் கலைந்தபோது'
பரிசு பெறுபவர் - அனுராதா பாக்கியராஜா, 'ஜெய சதனம்', களுவாஞ்சிக்குடி.

## ஊக்குவிப்புப் பரிசு ரூபா 1,000/- பெறும் ஐந்து சிறுகதைகள்

01. 'ஒரு தாயின் கனவு' - திருமதி. சந்திரகாந்தா முருகானந்தன், 81, மெனிங் பிளேஸ், கொழும்பு 06.

02. 'இனியொரு புதிய விதி' - தம்பிராசா பரமலிங்கம், 17/22A, நாவலடி ஒழுங்கை, வண். வடமேற்கு, யாழ்ப்பாணம்.

03. 'காடு விளைஞ்சென்ன மச்சான்' - க.இராமநாதன் 'தங்க நிலா' அல்வாய் வடக்கு, அல்வாய்.

04. 'குடிபெயர் பறவைகள்' - இளவரசி மனோகரன், கலட்டி, கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

05. 'பெற்றது குற்றம்' - உ.நிசார், 70/3, புதிய கண்டி றோட், மாவனல்லை.

பரிசு பெற்றவர்களுக்கான பரிசுத் தொகையும், சான்றிதழும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் பரிசளிப்பு விழாவில் வழங்கப்படும். பரிசளிப்பு விழா பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

பொதுச் செயலாளர்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதை**

**ம**த்தும பண்டார!

எழுபத்தைந்து வயதைத் தாண்டியிருந்தாலும் உடம்பு இன்னமும் முதுமையின் கோரப் பிடியினில் சிக்கிக்கொள்ளவில்லை. என்னதான் நவீனமான 'ட்ரெக்டர்கள்' வந்துவிட்டாலும் இன்னும் கைகளினாலேயே கலப்பைப் பிடித்து வயல் உழுவதினால் எல்லோரும் பண்டார மாத்தையா என அழைக்கும் மத்தும பண்டாரவின் உடல் முறுக்கேறி, புஜங்கள் விம்மிப் பெருத்து முதுமையிலும் ஒரு இளமை எட்டிப்பார்க்கத்தான் செய்கிறது. இயந்திரங்களை நம்பி இயங்கிக் கொண்டிருக்கும் உலகில் பண்டார மாத்தையா எந்த நவீன சாதனங்களையும் பயன்படுத்துவதில்லை. இயந்திரங்கள் மனிதனின் ஆற்றலை மழுங்கடித்துவிடும் என்பது பண்டார மாத்தையாவின் வாதம். இன்னும் கூட பண்டார மாத்தையா பயணிப்பது மாட்டு வண்டியில்தான். அவ்வப்போது தூர பிரயாணங்களுக்கு இரயிலைப் பயன்படுத்தினாலும், மற்றப்படி ஊருக்குள்ளான அனைத்து இடம்பெயர்வுகளும் மாட்டு வண்டியில்தான். வீதியில் நச்சுப் புகையை உமிழ்ந்து செல்லும் இருசக்கர முச்சக்கர நாற்சக்கர வாகனங்களையும் அவை எழுப்புகின்ற ஒலியையும் எப்போதும் பண்டார மாத்தையா குறை கூறிக்கொண்டே இருப்பார். கால நிலை மாற்றத்திற்கும் புயல் சூறாவளி, வெள்ளம், நிலநடுக்கம் எல்லாவற்றிற்கும் இவைதான் காரணமென்பது பண்டார மாத்தையாவின் வாதம்.






பண்டார மாத்தையா மாட்டு வண்டியில் கம்பீரமாக உட்கார்ந்து கையில் கேட்டியுடன் மாடுகளின் கழுத்திலுள்ள சலங்கைமணி சத்தமெழுப்ப வீதியால் வருவது பார்ப்போர் மனதை கொள்ளை கொள்ளும். பண்டார மாத்தையாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டியில் பூட்டியிருக்கும் இரண்டு காளை மாடுகளும் வயது போயிருந் தாலும் பண்டார மாத்தையாவைப் போல கம்பீரமாக துடுக்குடனும் முறுக்குடனும் துள்ளிவரும் காட்சி பார்ப்போரை வியப் பில் ஆழ்த்தும். பண்டார மாத்தையாவின் வண்டில் மாட்டின் ஒன்றில் 'சண்முகம்' என்றும் மற்றயதில் 'காதர்' என்றும் குறி வைத்திருப்பது பார்ப்போரை கேள்வியில் ஆழ்த்தும்.

மத்திய மலைநாட்டின் எழில் கொஞ் சும் இயற்கை, பசுமைப் பாய் விரித்த இந்தக் கிராமத்தை அடைகின்றேன். 'கிரா மத்தின் முதிய குரல்' நிகழ்ச்சிக்காக வாரந் தோறும் ஒரு முதியவரை நேர்காணல் செய்வதற்காக 'உரிமைக்குரல்' வானொலி யின் பணிப்பாளர் என்னை இக்கிராமத் திற்கு அனுப்பியிருந்தார். மத்தும பண்டார வைப் பற்றி பணிப்பாளர் நிறைய விடயங் களைச் சொல்லியிருந்ததால் அவரைப் பார்ப்பதற்கான ஆர்வம் என்னை அவசரப் படுத்திற்று. வீதியில் இறங்கியதும் மலை நாட்டின் இயற்கை இரம்மியம் என் மனதை இளகச் செய்கிறது. குளிரின் மத்தியில் எகிறித் தெறிக்கும் இளந்தாரி வெயில் என் உடம்பு தழுவி உள்ளத்தி னுள்ளும் ஊடுருவுகின்றது. வீதியால் சென்ற ஒருவரை மறித்துக் கேட்கின்றேன்.

"இங்க மத்தும பண்டார வீடு எங்க இருக்கு?"

"ஓ நீங்க ஊருக்குப் புதிசா?"

"ஏன் கேட்கிறீங்க?"

"இல்ல நாங்களெல்லாம் பண்டார மாத்தையான்னுதான் கூப்பிடுவம். நீங்க அவங்க பேரச் சொன்னதுந்தான் நான் கேட்டன். எங்க ஊர்ல பண்டார மாத்தை யாட ஊட்ட கேக்குறது சூரியன் எங்க இருக்கெண்டு கேக்கிறாப் போல இருக்கு. அதோ அந்த சந்தியில இருந்து ஒரு ஒழுங்கை திரும்புதே, அந்த ஒழுங்கை பண்டார மாத்தையா வீட்லதான் போய் முடியுது."

"நன்றி அய்யா" என்று அவரை அனுப்பிவிட்டு பண்டார மாத்தையாவின் வீட்டை நோக்கி நடையை விரைவு படுத்துகின்றேன்.

சந்தியினால் திரும்பி ஒழுங்கையினால் நடந்து மத்தும பண்டாரவின் வீட்டினை அடைகின்றேன். இயற்கையான மரங்களினா லும், கொடி செடிகளினாலும் சுற்றிவர வேலி யமைத்து மரத்தினால் வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்ட கேற்றின் இரு மருங்கிலும் நடப்பட்ட மரத்தூணில் படர்ந்து கிடக்கும் கொடி மல்லிகையின் வாசம் நாசி வழியே மனதை வருடிச் செல்கிறது. கேற்றினைத் திறந்து உள்ளே நுழைகின்றேன். வழி நெடு கிலும் வகை வகையான பூமரங்கள் நடப் பட்டிருக்கின்றன. வீட்டைச் சுற்றி பெரும் பரப்பில் மரக்கறி வகைகள் செய்கை பண் ணப் பட்டிருக்கின்றன. வீட்டின் வலப்புறமாக சின்னச் சின்ன வைக்கோல் கொட்டில்களில் ஆடுகள், முயல்கள், பறவைகள் என... எனக்கு ஒரு இயற்கை சோலைக்குள் நுழைந்த அனுபவம் ஏற்படுகிறது. தோட்ட வேலையில் ஈடுபட்டிருந்த ஒருவர் என்னை ஏறிட்டு, விசாரித்து வைக்கோலினால் வேயப் பட்ட ஒரு கூடாரத்தினுள் காணப்பட்ட பிரம்புக் கதிரையில் என்னை அமர வைத்து விட்டு களிமண்ணினால் கட்டப்பட்டு தென்னை ஓலையினால் கூரை வேயப்பட்ட வீட்டினுள் நுழைகிறார்.

சுமார் ஆறடி உயரமிருக்கும். தலை முடி நரைத்து வெண்பஞ்சாக மாறியிருந் தாலும் முகத்தில் அவ்வளவாக சுருக்க மில்லை. அவருடைய தடித்த வெண்ணிற மீசை எனக்கு மறைந்த முன்னாள் அமைச்சர் றெஜி றணதுங்கவை ஞாபக மூட்டிற்று. வெள்ளைச் சாறன் அணிந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தார். உடம்பில் சட்டையில்லை. நெஞ்சில் வெண்பஞ்சு முடிகள் மண்டிக் கிடக்கிறது. பற்கள் இன்னும் வைரமாக. பார்வையில் ஒரு தெளிவு கூர்மை. எனக்கு முன்னால் வந்து அமர்ந்திருப்பது பண்டார மாத்தையாதான் என்பதை உறுதிப்படுத்திக் கொள்கின்றேன்.

“எந்த மொழியில் உங்களுடன் உரையாடுவது” என்பது போல பண்டார மாத்தையா என்னை கூர்ந்து நோக்குகிறார். அவருக்கு முன்பாகவே நான் முந்திக் கொண்டு,

“எனக்குச் சிங்களம் நல்லாத் தெரியும். நீங்க சிங்களத்திலேயே என்னோட உரையாடலாம்.”

“நானும் நல்லா தமிழ் கதைக்கிறது” என்று சொல்லி விட்டு அவர் சிங்களத்திலேயே தொடர்கிறார்.

“என்ன விசயமா வந்திருக்கீங்க?”

நான் வந்த விடயத்தைச் சொல்கின்றேன்.

“நல்லதாப் போச்சு. என்ட மனசுக்குள்ளேயும் நிறைய விசயங்கள் புதைஞ்சி கிடக்குது அதுகள யாருட்டயும் கொட்டினா என்ட மனம் ஆறுதல் அடையுமென்டு நினைக்கிறன். நீங்க கேளுங்க”

வந்த விடயம் இலேசாக முடிந்ததில் சந்தோசப்பட்டவாறே டேப் ரெக்கோடரை செயற்படுத்தி நேர்காணலை ஆரம்பிக்கின்றேன்.

“உங்கட பெயெரென்ன?”

“என் பேரு மத்தும பண்டார. சின்ன வயசில எல்லாரும் புஞ்சி பண்டா என்று தான் கூப்பிடுவாங்க. இப்பெல்லாம் பண்டார மாத்தையா எண்டுதான் கூப்பிடுறாங்க.”

“உங்க வயது?”

“எனக்கு எழுபத்தைந்து முடிஞ்சிட்டுது.”

“இத்தன வயசாகியும் எப்பிடி இளமையா இருக்கீங்க?”

“நான் இதுவரைக்கும் என் வீட்டுத் தோட்டத்தில உற்பத்தியாகிற மரக்கறியெத்தான் சாப்பிர்றது. தாவரங்களுக்கு சேதனப் பசள மட்டுந்தான் பாவிக்கிறது. பூச்சி நாசினியும் இயற்கை முறையில தான். நவீனத்த நான் விரும்புறதில்ல. இயந்திரங்கள பெரிசா பாவிக்கிறதில்ல. என்ட அறையில மின் விளக்கோ, மின் விசிறியோ கிடையாது. எண்ணெய் விளக்கும் பனை ஓலை விசிறியுந்தான்.”

“உங்கட குடும்பத்த பத்தி...”

“என் மனைவி பந்துலதா இறந்திட்டா. மூன்று மகன்க. எல்லாரும் கலியாணம் முடிச்சி வெவ்வேறு ஊருல இருக்காங்க. ஏழு பேரப்புள்ளங்க இருக்காங்க. மாசத்துக்கொருதடவ குடும்பத்தோட வந்து தங்கிட்டு போவாங்க.”

“நாட்ல இப்ப யுத்தம் முடிஞ்சி அமைதி நிலவுது. இதப்பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க?”

“இப்பதான் நான் நிம்மதியா மூச்சு விர்றன். ஒவ்வொரு நாளும் மரணச் செய்திகள் மனச உருக்கிக்கிட்டேயிருக்கும். செல் விழுந்து குடும்பத்தோட அப்பாவித் தமிழ் மக்கள் செத்திட்டதாயும், விமானத் தாக்குதல்ல பல அப்பாவிகள் உயிரிழந்திட்டதாயும், பஸ் குண்டு வெடிப்பில சிங்கள முஸ்லிம் மக்கள் செத்திட்டதாயும் செய்திகள இப்ப கேட்க முடியல. அந்த அளவில நான் சந்தோசப்பர்றன்.”

“உங்கட்ட ஒரு முக்கியமான விடயத்த கேட்கணும். இதுவரைக்கும் நீங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கும் சொன்னதில்ல என்று கேள்விப் பட்டன். உங்கட வண்டியில பூட்டியிருக்கிற ரெண்டு மாட்டுக்கும் சண்முகம், காதர் எண்டு குறி வெச்சிருக்கீங்களே, அது ஏன்?"

நான் கேட்டதும் அவரின் கண்கள் சிவந்து ஈரமாயிற்று. கம்பீரமாய் என் முன் வீற்றிருந்தவர் தலையைத் தொங்கவிட்ட வாறே ஏதோ ஓர் உணர்வு தூண்டப் பட்டவராய் பரிதவிக்கிறார். எனக்குள் பயம் பற்றிக்கொள்கிறது. ஏதோ கேட்கக் கூடா ததைக் கேட்டு விட்டோமோ என்ற அங்க லாய்ப்புடன் அவரை ஏறிடுகின்றேன்.

"சண்முகம், காதர் என்ற பெயரை என் மாடுகளில் மட்டுமல்ல, என் மனசில யும் பச்ச குத்தி வெச்சிருக்கன்."

"அவங்கள யாரென்று சொல்ல முடியுமா?"

"அப்ப எனக்கு நாற்பது வயசிருக்கும். கிளிநொச்சியிலதான் நான் கடை வெச்சிருந் தன். எனக்கு முன்னாடி எங்கப்பா வெச்சிருந் தாரு. நான் படிப்ப முடிச்சிட்டு அப்பாட மறைவுக்குப் பின்னாடி அந்தக் கடைய பார மெடுத்து நடாத்தி வந்தன். இஞ்ச மலை நாட்ல இருந்து தேயிலை, கறுவா, ஏலம், மிளகு, சாதிக்காய், கராம்பு, கோப்பி, கொக்கோ எல்லாம் கொண்டு போயி என் கடையில விப்பன். என் வலதுபக்க கடை சண்முகத்துக்குரியது. அவர்ற கடை, பனை உற்பத்தி பொருட்கள் விக்குற கடை. என் இடப்பக்க கடை காதருக்குரியது. அவர்ற சொந்த ஊரு மட்டக்களப்பு. அவர்ற கடை பிடவைக்கடை.

"இவங்களோட எப்பிடி உங்களுக்கு பழக்கம் ஏற்பட்டிச்சி?"

"பக்கத்து கடை என்கிறதால அண் ணன் தம்பியா பழகினம். ஓய்வு நேரங் களில எங்க கடைக்கு முன்னாடி நின்ட ஆலமரத்துக்குக் கீழ இருந்து கரம்போட் விளையார்றதுதான் எங்கட பொழுது போக்கு. நானும் காதரும் மாந்தோப்பில இருக்கிற சண்முகம் வீட்லதான் இரவில தங்குறது. மாசத்துக்கு ஒருதடவதான் ஊருக்குப் போவம்.

"எந்த மொழியில நீங்க பேசிக்கி வீங்க?"

"நான் அவங்க கூட எனக்கு தெரிஞ்ச தமிழ்ல கதைப்பன். அவங்க என்கூட அவங்களுக்கு தெரிஞ்ச சிங்களத்தில கதைப்பாங்க. கேக்கிறதுக்கு ஒரே வேடிக்கையா இருக்கும்."

"ஒரே வீட்ல நீங்க மூணு பேரும் எப்பிடி தங்கினீங்க?"

"சண்முகத்தின்ட மனைவி பாரதி தங்கமான புள்ள. என்ன அன்பா பண்டார அண்ணா எண்டுதான் கூப்பிடுவா. அவர காதர் காக்கான்னு கூப்பிடுவா. சண்முகத் தின்ட வீடு பெரிய வீடு. நிறைய அறை யிருக்கும். இருந்தாலும் நானும் காதரும் திண்ணையிலதான் படுத்துக்குவம். திண்ணையில காத்து புசுபுசுவென வரும். இரவுச் சாப்பாட்ட வாசல்ல நின்ற மா மரத்து அடியில இருந்துதான் சாப்பிடுவம். பாரதி எங்களுக்கு நண்டு, இறாள், கணவா, மீன் என விதவிதமா சமைச்சிப் போடுவா. அத இப்ப நினைச்சாலும் வாயூ றுது. மாமரத்தடியில அரிக்கன் லாம்பு வெளிச்சத்துல குடும்பமாயிருந்து சாப் பிட்டத இன்றைக்கும் மறக்கேலாது. சண் முகத்திற்கு ஒரேயொரு ஆண் பிள்ள. எப்பவுமே அவன் மாமா மாமான்னு எங்களத்தான் சுத்தி வருவான். இப்ப எங்க எப்பிடி இருக்கானோ தெரியாது."

பண்டார மாத்தையாவின் குரலில் கவலையின் கரகரப்புத் தெரிகிறது. தொண்டையில் ஏதோ சிக்கியது போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செருமுகிறார். முன்னாலிருந்த மண் கூசா விலிருந்து சீவிய சிரட்டைக் கோப்பை யினுள் நீரை ஊற்றி அவரிடம் கொடுத்து விட்டு எனது நேர்காணலை தொடர் கின்றேன்.

"உங்க மகன்மாரு எங்க திருமணம் முடிச்சிருக்காங்க?"

"நான் சொன்னா நீங்க ஆச்சரியப்படு வீங்க. எனது மூத்தமகன் மாவனெல்லை யில ஒரு முஸ்லிம் பெண்ண கட்டிட்டு அவங்க மதத்துக்கு போயிட்டான். என் ரெண்டாவது மகன் மாத்தளையில ஒரு தமிழ் பெண்ண கட்டிருக்கான். என் இளைய மகன் பொலன்னறுவையில ஒரு சிங்களப் பெண்ண முடிச்சிருக்கான்."

"உங்கட விருப்பத்தோடதான் அவங்க முடிச்சாங்களா?"

"ஆமா, அப்பிடி அவங்கள முடிக்கச் சொன்னதே நான்தான். என் நண்பர் களான காதர், சண்முகத்திண்ட உறவுகள் என்னை விட்டும் அந்நியமாகிடக் கூடா தென்டு அவங்கட்ட சொன்னன். அவங் களும் என் ஆசையை நிறைவேற்றிட டாங்க."

அவர்களின் நட்பின் ஆழத்தை நினைத்து என்னால் ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை. அவர்களின் கடந்த காலத்தை அறியும் ஆவல் என்னுள் அதிகரிக்கிறது.

"காதர்ற, ஊருக்கு நீங்க போயிருக் கீங்களா?"

"ஆமா என் குடும்பமும் சண்முகம் குடும்பமும் சேர்ந்து ஒரு தடவ காதரின் சொந்த ஊரான காத்தான்குடிக்குப் போயி ருந்தம். அங்க ரெண்டு நாட்கள் தங்கி யிருந்தம். அது தனி முஸ்லிம்கள் மட்டும் வாழ்ற ஊரு. அங்க நிறைய பள்ளிவாச லெல்லாம் இருந்திச்சி. அங்க உள்ள பெரிய பள்ளிவாசலான மெத்தப்பள்ளிக்கு எங்கள காதர் கூட்டிட்டுப் போனாரு. அங்க புகாரி மௌலூது ஓதுறதா சொன்னாரு. நாங்களும் நேர்ச்சையா கொண்டு போன ரெண்டு கோழிச்சாவல கொடுத்திட்டு நார்ஸா வாங்கித் திண்டது இன்டைக்கிப் போல இருக்கு."

"இப்ப காதர், சண்முகம் எங்கிருக் கிறாங்க?"

நான் கேட்டதும் பனித்திருந்த அவ ரின் கண்கள். கண்ணீர் மழையை சொரி யத் தொடங்கிற்று. முகத்தை கைகளி னால் பொத்திக் கொண்டு அவர் அழு வதை என்னால் தாங்க முடியவில்லை.

"மாத்தையா, அழாதீங்க எதுவாயிருந் தாலும் மனசத் திறந்து வெளியில சொல்லுங்க. உங்க மனப்பாரம் குறைஞ்சி போயிடும்"

"கிளிநொச்சியில குருவிக்கூடு போல நாங்க வாழ்ந்திட்டிருந்தப்போதான் இந்த யுத்தம் ஆரம்பமாச்சி. எங்க கூடு மொத் தமா கலைஞ்சே போச்சு. வெளியில கனமா வெடிச்சத்தம் கேட்டுது. திண்ணை யில படுத்துக் கிடந்த நானும் காதரும் பக்கத்தில நிண்ட மாமரத்திற்கு பின்னாடி போய் பயத்தோட ஒழிஞ்சிட்டிருந்தம். சண் முகம் அரிக்கன் லாம்பை அணைச்சிட்டு பாரதியை கூட்டிக்கொண்டு வெளியில வாறாரு. அப்போ பெடியன்கள் வந்து படலையைத் தட்டினாங்க. பாரதி போய் படலையைத் திறந்து அவர்களுடன் கதைப்பது எங்கள் காதுகளுக்குள் நுழை கிறது.

"இங்க ஒரு சிங்களவனும் சோனியும் இருக்கிறதா கேள்விப்பட்டம் இருக் கானுகளா?"

"இல்ல. அவங்க முதல்ல இருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்க. இப்ப அவங்கட ஊர்களுக்கு போயிட்டாங்க."

"உண்மையைச் சொல்லு. பொய் சொன்னா சுட்டுப்போடுவம்."

"என் சின்ன மகன் மேல சத்தியமாச் சொல்றன். அவங்க போயிட்டாங்க."

"பாரதி மட்டும் அன்னைக்கி தன்ட கைக்குழந்தை மேல சத்தியம் செய்யாட்டி நாங்க எப்பவோ போய்ச் சேர்ந்திருப்பம்."

"அப்புறம் என்ன நடந்திச்சி?"

"ஊருக்குள்ள இருந்த சிங்கள முஸ் லிம் யாவாரிமாரெல்லாம் போயிட்டாங்க. எங்கள சண்முகம் அவன்ட வேட்டி சட்டய உடுத்த வெச்சி, நெத்தியில திருநீற பூச வெச்சி ஒரு தமிழனா மாத்தி அனுப்பி வெச் சான். அந்த நிலமையில அவங்கள விட் டுட்டு எங்களால பிரிஞ்சிவர முடியல. நாங்க எவ்வளவோ கூப்பிட்டுப் பார்த்தம். சண்முகத் தையும் மனைவி குழந்தயையும் எங்க கூட வரும்படி. ஆனா அவன் மறுத்திட்டான். செத் தாலும் பிறந்த மண்ணிலதான் சாகனு மெண்டு சொல்லிட்டான். நாங்களும் அத ஏத்துக்கிட்டோம். அன்டெக்கித்தான் நாங்க கடைசியா பாத்துக்கிட்டது. அதுக்கப்புறம் இன்றைக்கு வரைக்கும் அவங்கள பார்த்த தேயில்ல."

"அவங்கள பத்தின செய்தி ஏதாவது உங்களுக்கு கிடச்சிதா?"

"ஆமா நாங்க கிளிநொச்சியில இருந்து ஊருக்கு வந்து ரெண்டு மாசத்துக்குப் பிறகு ஒரு தந்தி வந்திச்சி. அதில காதர் கடத்தப் பட்டுக் கொல்லப்பட்டதா எழுதியிருந்தாங்க அன்டைக்கே என்ட பாதி உசிரு போன மாதிரி இருந்திச்சி."

"இப்ப யுத்தமெல்லாம் முடிஞ்சி அமைதி ஏற்பட்டிருக்கு. இந்த நிலைமையில நீங்க என்ன செய்யிறதா உத்தேசிச்சிருக் கீங்க?"

"என் மகன்மார வரச்சொல்லியிருக்கன். எப்பிடியாவது என் நண்பர்களின்ட குடும் பத்த தேடிக் கண்டுபிடிக்க வேணுமென்டது தான் என்ட இலட்சியம். என் சண்முகம் என்னைப் போல எங்கோ ஒரு மூலையில எனக்காக காத்துக் கிடப்பான் என்கிறது என்னோட அசையாத நம்பிக்க."

"இந்த யுத்தம் முடிஞ்சதன் பிற்பாடு நாடு எப்பிடி இருக்கணுமெண்டு நீங்க எதிர்பாக்குறீங்க?"

"என்ன பொறுத்தவரைக்கும் மதத்தி னாலோ, இனத்தினாலோ, மொழியினாலோ, எண்ணிக்கையினாலோ யாரும் உயர்ந்த வங்க கிடையாது. மனிசன் எங்கிற முறை யில எல்லாரும் சமந்தான். எல்லார்ற உடம் பிலயும் ஓடுறது ஒருநிறக் குருதிதான். அத னால நாட்டுல யாருக்குமே சிறப்புச் சலுகை யில்லாம சட்டம் எல்லாருக்கும் சமனானது என்கிற அடிப்படையிலதான் நாடு இயங் கணும். இதுதான் என்னோட எதிர்பார்ப்பு."

"கடைசியா உங்கள ஒண்ணு கேட் கணும். உங்கட நட்புக்கு சாட்சியா எதிர் காலத்துல ஏதாவது செய்ய விரும்பு றீங்களா?"

"ஆமா என் உள்ளத்தில ஒரு ஆசை வெச்சிருக்கன். என் மூத்த மகனுக்கு ஒரு பெண்பிள்ள இருக்கா. அவ முஸ்லிம் எங் கிறதால காத்தான்குடியிலிருக்கும் காதர்ற குடும்பத்து பையன் ஒருத்தனுக்கும், என்ட ரெண்டாவது மகனுக்கு ஒரு பையன் இருக் கான். அவன் தமிழ் பையன் என்கிறதால அவன கிளிநொச்சியில இருக்கிற சண் முகம் குடும்பத்து பெண்ணொருத்திக்கும் திருமணம் செஞ்சி வைக்கணும் என்கிறது தான் என்னோட ஆசை. அதை நிறைவேற் றின பின்னாடிதான் என்னோட உசிரு இந்த கூட்ட விட்டும் பிரியணும்."

பண்டார மாத்தையாவின் ஆசை நிறை வேற வேண்டுமென்று இறைவனை பிரார்த் தித்துக்கொண்டு எனது நேர்காணலை நிறைவு செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ்.ஏ.உதயனின்

**'சொடுதா'**

நாவல்

'கலையருவி' வெளியீடு



சமரபாகு சீனா உதயகுமாரின்

**'பகிர்வு'**

கட்டுரைத் தொகுப்பு

மீரா பதிப்பகம்




தாஸிம் அகமதின்

**'கண் திறவாய்'**

கவிதைத் தொகுப்பு

S.J. வெளியீட்டகம்






ஈழவாணியின்

**'பூவரசி'**

இணைய அரையாண்டிதழ்

ஜனவரி 2012

சூரியன் பப்ளிகேசன்



திரு.ஞானசேகரன்

**'ஞானம்'**

கலை இலக்கியச் சஞ்சிகை




ஏ.ஏ.ஹெச்.கே. கோரியின்

**'மாம்பழச் சாலை'**

சிறுகதைத் தொகுப்பு

இருவாட்சி
(இலக்கியத் துறைமுகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதை**




– எம்.கே.முருகானந்தன்

இலை சுருட்டிக்
குழல் ஊதி மகிழ்கிறாய்
தாய் மடியில் கிலேசமறக்
கைசூப்பிக் கிடப்பதுபோல்
உள்ளரங்கின் கணகணப்பில்
குரலோங்க இசைபரப்பும்
தீரம் கிட்டியதா
உனக்கு.
குரலெழுப்ப வாய் திறக்க
கணப்பொழுதும் கிட்டாது
கருகினர்.
காற்றில் கலந்தனர்.
அவர்தம் வேதனை மூச்சு
நெடுவெளியெங்கும் அலைந்து
உன் குழல்வழி காற்றாய்க் கலக்கிறதே
அது கலந்தும்
உன் உமிழ்நீர்
வெடுக்கடித்த தில்லையா?.

வனங்கள் கருகி
வனாந்திரமாயின
சுடுகாடாய் எரிந்தது மண்
வனம் தழுவிய குளிர் காற்று
அனல் கக்கியது.
உறைந்த அவர் மூச்சு
உன் குழல்வழி பாய்கிறதே
குழலூதும் உதடுகள்
வேகித் தகிக்கவில்லையா?
இறைவனுக்கு யாகம் வளர்க்க
மென் மலர்களை
தீயினில் சுட்டெரிக்கும்
அந்தணர் போல்
ஆண்டவன் பெயர் பதிக்க
யாக மலர்களாக
ஆகுதியாயினர்
உலுப்பாதா மனச்சாட்சி.
இலை சுருட்டிக்
குழல் ஊதி மகிழ்கிறாய்
உள்ளரங்கின் கணகணப்பில் ....
இன்னுமா!!
குழல் ஊதி மகிழ்கிறாய்?


## இன்னுமா!! குழல் ஊதி மகிழ்கிறாய்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வினை



செப்ரெம்பர் மாத மல்லிகையில் 'ஆவணம்' பகுதியில் அ.செ.முருகானந்தம் மொழிபெயர்த்து 'மறுமலர்ச்சி' இதழில் வெளிவந்த 'மெனிக்காவின் ஜாதகம்' சிறுகதை படித்தேன். முன்னதாக செங்கை ஆழியான் தொகுத்த 'மறுமலர்ச்சிக் கதைகள்' தொகுப்பில் அ.செ.முருகானந்தம் எழுதிய 'பழையதும் புதியதும்', 'மாடு சிரித்தது' ஆகிய இரண்டு சிறுகதைகளே இடம்பெற்றி ருந்தன. மறுமலர்ச்சி இதழில் வெளியான 52 சிறுகதைகளில் 25 சிறுகதைகள் தெரிவு செய் யப்பட்டே இத்தொகுப்பு உருவாக்கப்பட்டி ருந்தது.

இவ்வாறான தொகுப்பு முயற்சிகளின் போது பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளி வந்த அனைத்து சிறுகதைகளையும் தனித் தனியே தொகுப்பதென்பது ஒரு பகீரதப் பிரயத்தன முயற்சியே என்றாலும் தேர்ந்தெடுத்து தொகுக் கப்படும் சிறுகதை தொகுப்புகளில் குறைந்த பட்சம் அவற்றில் வெளிவந்த எல்லா சிறுகதை களும் யாரால், எப்போது, எத்தனையாவது இதழில் எழுதப்பட்டது போன்ற விபரங்களை யாவது பின்னிணைப்பாக வெளியிடுதல் அவை குறித்து எதிர்காலத்தில் ஆய்வு செய்வோருக்கு பெருந்துணையாக அமையும். உதாரணத்திற்கு செ.சுதர்சனால் தொகுக்கப்பட்ட 'மறுமலர்ச்சி கவிதைகள்' நூலின் இறுதியில் பின்னிணைப் பாக மறுமலர்ச்சி இதழில் வெளிவந்த எல்லா கவிதை களினதும் மேற்கூறப்பட்ட விபரங்கள் பட்டியலாக இடப் பட்டுள்ளமையை சுட்டிக் காட்டலாம்.

ஆனால் செங்கை ஆழியானால் தொகுக்கப்பட்ட 'மறு மலர்ச்சிக் கதைகள்' தொகுப்பில் இவ்வாறானதொரு பின் னிணைப்பு பட்டியல் இல்லாததால் அதில் அடங்கியுள்ள 25 சிறுகதைகளைத் தவிர ஏனைய சிறுகதைகள் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள முடியாதிருப்பது ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குறைபாடாகவே இருக்கிறது. எனவேதான் ஆவணம் பகுதியில் தாங்கள் வெளியிட்ட அ.செ.முருகானந்தனின் சிறுகதை தரத்திற்கும் அப்பால் அரிய முயற்சி யோடு முக்கியத்துவத்தையும் பெறுவதாக உள்ளது.

அதேசமயம் மேற்படி 'மறுமலர்ச்சிக் கதைகள்' முன்னுரையில் செங்கை ஆழியான் "1946ஆம் ஆண்டு பங்குனி மாதம் தொடக்கம் வெளியான மறுமலர்ச்சி இதழின் ஆசிரியர்களாக அ.செ.முருகானந் தனும், தி.ச.வரதராசனும் பொறுப்பேற்றிருந்தனர். 1948ஆம் ஆண்டு தை மாதத்தில் இருந்து வெளிவந்த பதினெட்டாவது இதழில் இருந்து இருபத்து நான்காவது இதழ் வரை அ.செ.முருகானந்தனுக்குப் பதிலாக திரு. ச.பஞ்சாட்சரசர்மா வரதரோடு ஆசிரியராக விளங்கி உள்ளார்"—என்று குறிப்பிடுவதையும் இவ்விடத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**அல்வாய்** **சி.விமலன்**

நமது நாட்டுச் சிற்றிதழ்கள், எழுத்தாளன், வாசகன் என்ற இரு தரப்பினருக்கும் உந்துசக்தியாகத் திகழ்வன. அவர்தம் சிந்தனை விரிவு, தேடல், புதிய முயற்சிகள், கருத்தாடல்கள் யாவற்றுக்கும் களம் அமைத்துக் கொடுப்பன. அவ்வகையில் 'மல்லிகை'யின் பங்களிப்புக் குறித்து நாம் புதிதாகச் சொல்ல வேண்டியதில்லை.

செப்டெம்பர் மாத 'மல்லிகை' நம்பிக்கையூட்டும் பல விடயங் களைக் கொண்டு வந்துள்ளது. மல்லிகையின் எதிர்காலப் போக்குகள் காத்திரமானதாக அமையவுள்ளன என்பதற்கான அறிகுறிகள் மன மகிழ்வைத் தருகின்றன. வடிவமைப்பு, உள்ளடக்கம் என்பவற்றில் காணப்படும் புதிய செதுக்கல்களும் நகாசு வேலைகளும் தொடரட்டும். அவ்வாறே, 'மல்லிகை' இதழின் அளவிலும் விரிவு தேவை.



இலங்கையில் எழுத்தாளர் பரம்பரையொன்றை உருவாக்கி, அவர்தம் இயங்குதளத்தைக் கட்டமைத்து, தீர்மானித்து வழிநடத்தி யதில் 'மல்லிகை'யின் பங்கு என்றும் பேசப்படும். அந்தப் பாரம்பரியம் எளிமையானது. அந்த எளிமையின் பின்னே சக்தி வாய்ந்த, வீறு கொண்ட எழுத்துக்கள் உருவாகின. இனிமேலும் அதன் தரமும் மணமும் செழுமை பெற்றுத் துலங்கும் என்ற நம்பிக்கை துளிர்த் துள்ளது. நம்பிக்கைதானே நம்மையெல்லாம் இயக்குகிறது!

சமூகம் நோக்கிய பார்வைகள் கூர்மை பெறுவது, தடைகளைக் களையும் உத்வேகம் பெறுவது, எல்லாமே நல்ல சமிக்ஞைகள். முயற்சிகள் தொய்ந்து விடாதபடி தோள் கொடுப்பது நம் கடமை.

**கொழும்பு** **வசந்தி தயாபரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# மீண்டும் ஒரு பிறப்பு



– ஸ்ரீரஞ்சனி

எனக்கென்று தயாரிக்கப்பட்ட ஒரு பொய்க்கை, இன்று என்னுடையதாகப் போகின்றது.

எழும்பின நேரம் முதல் வீடு ஒரே பரபரப்பாக இருக்கிறது. "பிளீஸ் அம்மா, பிளீஸ்... நானும் உங்க ளோடை ஹொஸ்பிற்றலுக்கு வரட்டே?" என்று 'அம்மா'விடம் கெஞ்சினது பலனளிக்காமல் போய் விட, முகத்தைத் தூக்கிக் கொண்டு தன்னுடைய பள்ளிக்கூட பஸ்சுக்கு ஓடுகிறாள், தங்கைச்சி.



அவளைப் பின்தொடர்ந்து போன அப்பா, "பிள்ளை, நீ வீட்டை வந்தாப்போலை அக்கான்ரை கையைப் பாக்கலாம்தானே. இப்ப அழாமல் போட்டு வா... என்ன?" என்று முதுகைத் தடவி, அவளின்ரை நெற்றியிலை கொஞ்சி விடுகிறார்.

இப்படித்தான் என்ரை அம்மாவும்! கட்டிப்பிடித்து, கொஞ்சி, தடவி, எதையாவது சொல்லிச் சமாதானப் படுத்தித்தான் என்னைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவா. 'மனம் சந்தோஷமாக இருந்தால்தான் பள்ளிக்கூடத்திலை படிப்பிக்கிறது விளங்கும்' என்று அவ அடிக்கடி சொல்வதை நினைத்தபோது என் கண்கள் கசிகின்றன.

"சுமிக் குஞ்சு, கவனமாய்ப் போட்டு வாம்மா, பொம்பர் சுத்தத் தொடங்கினால் உடனை பங்கருக் குள்ளை ஓடிப்போயிட வேணும் என்ன? தற் செயலா, அப்பிடி ஓட ஏலாமல் போயிட்டால், உடனை நிலத்திலை விழுந்து படுத்திடு ராசாத்தி! ரீச்சர்மார் எத்தனை பேரை எண்டு பாக்கிறது? நீதான் உன்னிலை கவனமா யிருக்க வேணும், என்ன?" அந்தப் போர்ச் சூழலில் வாழ்ந்தபோது, என் நாடியை உயர்த்தி, என் கண்களைப் பார்த்து அம்மா எனக்குத் தினம் தினம் சொன்ன வாசகங்கள், இவை.

அண்டைக்கும் அப்படித்தான் சொல்லிப் போட்டு போனவ. போன கையோடை, திரும்பி ஓடி வாறா. "உந்தா சுத்தத் தொடங்கியிட்டாங்கள். ஒண்டுக்குப் பின்னாலை ஒண்டாக நாலைஞ்சு வருகுது. இண்டைக்கு பள்ளிக்கூடம் வேண்டாம்." என்று என்னையும் தம்பியையும் கையிலை பிடித்துக்கொண்டு வீட்டை நோக்கி ஓடுகிறா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுமி, ரெடிதானே? வா, அப்பா கீழை காருக்குப் போயிட்டார்." அம்மாவின் குரல் என் நினைவைக் குழப்புகிறது.

அந்த ஆஸ்பத்திரி வழமை மாதிரி வலு சுத்தமாக, எந்தச் சத்தமும் இன்றி, இன்றும் மிகவும் அமைதியாக இருக்கிறது.

எங்களைக் கண்டதும் அப்பாவிடம் 'அவர்கள்' ஆங்கிலத்தில் ஏதோ சொல் கிறார்கள். பிறகு அந்தப் பொய்க்கையைக் கொண்டு வந்து எனக்குப் போட்டு விடு கிறார், ஒருவர். என் பெருவிரல் மட்டும் வெளியில் தெரியக்கூடியதாய், மீதி நான்கு பொய் விரல்களுடனும் இருந்த அந்த உறை எனது புதுக்கை ஆகி விடுகின்றது.

என் நிறத்திலிருந்து பெரிதும் வேறு படாமல், எனது உடலின் ஒரு பகுதியாகி விட்ட என் அந்த வலக்கையைத் தொட்டுப் பார்த்த 'அப்பா' என்னைப் பார்த்து ஒருவித ஆறுதலுடன் சிரிக கின்றார்.

"ஹப்பி?" எனக் கேட்ட அவர்களுக் குப் பதிலாக என் தலையைக் கொஞ்சம் மேலும் கீழுமாய் ஆட்டுகிறேன், நான். "சிரிச்சுக் கொண்டெல்லோ சொல்ல வேணும்! என்ன, பிள்ளை? ஹப்பி தானே?" என்கிறா அம்மா.

அந்த உறையைக் கழட்டுவது எப்படி? பிறகு எப்படித் திருப்பிப் போடு வது? என்றெல்லாம் 'அவர்கள்' விளங்கப் படுத்துறதை தமிழிலை எனக்கு விளங் கக் கூடியதாய் அப்பா திருப்பிச் சொல் கிறார். "ஊத்தையாய்ப் போனால் சவுக் காரம் போட்டுக் கழுவலாமாம். இது ஊத்தையாய்ப் போயிடும் எண்டு நீ பயப் படத் தேவையில்லை. சரியே?" எனச் சொன்ன அப்பாவைப் பார்த்து, 'சரி' எனத் தலையாட்டுகிறேன், நான்.

"உனக்கு, கை சும்மாயிருக்காது. இந தச் செம்பாட்டு மண் முழுக்க உன்ரை உடம்பிலைதான். மண்ணிலை விளை யாடுறதிலை உனக்கு என்னதான் புளு கமோ! சரி, எழும்பு. போய்க் கையைக் கழுவிப்போட்டு, சாப்பிட வா." அம்மா பக்கத்திலை வந்து நிண்டு நச்சரிக்கிறது காதிலை வந்து போகிறது.

"இந்தக் கையாலை, இப்ப கொஞ்சம் சின்னச் சின்ன வேலைகள் செய்து பார்ப போம், சரியா?, இந்தப் பந்தை உங்கடை இரண்டு கைகளாலையும் வடிவாய்ப் பிடித்து எனக்கு எறியுங்கோ."

"குட்."

"இப்ப, இந்தக் கரண்டியை வலக்கை யாலை இறுக்கிப் பிடியுங்கோ, பாப்பம்..."

அவர்கள் சொன்ன எல்லாத்தையும் தமிழிலை எனக்கு மீளச் சொல்லி, என்னைக் கொண்டு அவற்றைச் செய் வித்த பிறகு, "என்ன இருந்தாலும் அந்தக் கையாலை கஷ்டமான வேலைகள் செய் யக் கூடாதாம்" என்று அப்பா எனக்கு எச்சரிக்கையும் செய்கிறார்.

"சுமி, இனி இந்தக் கையை ஒளிக் கத் தேவையில்லை! வெட்கப்படாமல் வடிவாய்க் காட்டாலாம்" என்று அம்மா மகிழ்வுடன் சிரிக்கின்றா.

"இந்தக் கை, சுமியின்ரை கை யோடை சேருற இடத்தை மறைக் கிறதுக்கு காப்பு மாதிரி ஏதாவது வாங்கிப் போடலாமாம்" அம்மாவுக்குச் சொல்லு கிறார், அப்பா.

"ஓம், பிள்ளைக்கு நான் வடிவான காப்பு வாங்கித் தாறன்" சொன்ன 'அம்மா' என் தலையைக் கோதிவிடுகிறா.

"சரி, அவ்வளவும்தானாம். சுமி இப்ப,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைக்கு உன்ரை கையைக் கொடுத்து தாங்ஸ் சொல்லு பாப்பம்... உந்தக் கை யாலை இல்லை. மற்றக் கையாலை. உன்ரை வலது கையாலை... கெட்டிக் காரி!" சொன்ன அப்பா தொடர்கிறார், "இனிப் பிள்ளை சந்தோஷமாக இருக்க வேணும், என்ன?"

வீட்டுக்குப் போனதும் என்ரை புதுக் கையைப் பார்க்க என்று வந்த பக்கத்து வீட்டு மாமி, "செயற்கைக் கை எண்டே சொல்லேலாது. அந்த மாதிரி நல்லா யிருக்குது!" என்று அதன் அச்சொட்டான நிறத்தைப் பார்த்து மிகவும் ஆச்சரியப் பட்டுப் போகிறா.

"அங்கை நேரத்துக்கு வைத்தியம் செய்திருந்தால் மற்ற விரலுகளையும் பாது காத்திருக்கலாம். என்ன செய்யிறது? என்ரை சினேகிதன் இன்ஸ்பெக்டர் பெரேரா இருந்ததாலை இப்படியாவது பிள்ளையைக் காப்பாத்த முடிஞ்சுது." பெருமூச்சு விட்டுக் கொள்கிறார், அப்பா.

"செல் அடிபட்டதாலை, பிஞ்சுபோன துடையையும் பிளாஸ்ரிக் சேஜரியாலை திருத்தலாமாம். அதையும் செய்ய வேணும்" என்ற 'அப்பா'வை "எத்தனை பேர் அங்கை இருந்து கஷ்டப்படுதுகள். என்னவோ, சுமியின்ரை நல்ல காலம், இங்கை வரக் கூடியதாய் இருந்திட்டுது. அதை விட உங்களுக்கு நல்ல மனசிருக் குது... இப்படி எல்லாரும் உதவி செய்யா யினம்!" என வாயாராப் பாராட்டுகிறா, பக்கத்து வீட்டு மாமி.

"கடவுளே, தலைக்கு மேலை பொம் மர் சுத்துது!... சுமி, சுமன் விழுந்து படுங்கோ... படுங்...கோ!" அவசரப் படுத்தின அம்மா நாங்கள் படுக்க முதல், எங்களைக் கீழே விழுத்திப்போட்டு எங்களுக்கு மேலே படுத்துக் கொள்கிறா.

நிலத்திலை பரவிக் கிடந்திருந்த கூரான அந்தச் சல்லிக்கற்கள் உடம்பை விறாண்டுகின்றன.

"குஞ்சு, பயப்பிடாதை அப்பன், அம்மா இருக்கிறனெல்லே." வீரிட்டலறும் தம்பியைச் சமாதானப்படுத்தும் அம்மா வின் குரல் நடுங்குகிறது. அவன் நிலை மையை விளங்காமல் திமிறிக் கொண்டி ருக்கிறான். எனக்கு அழுகை அழுகை யாய் வருகுது. உடம்பு நடுங்குது. செத்துப் போகப் போறம் மாதிரி பயமாகக் கிடக்குது!

வட்டமிடுகிற பருந்திடமிருந்து குஞ்சு களைக் காப்பாற்ற, தன் செட்டைகளை விரித்து, அவற்றை மூடும் ஒரு தாய்க் கோழி மாதிரி... எங்களைத் தன்னால் மூட அம்மா முயற்சிக்கின்றா. ஆனால் அவ விட்டை செட்டை இருந்தால் தானே...

திடீரென்று காது வெடித்துவிடும் போல் பலத்த சத்தம் கேட்கிறது. என்னில் ஏதோ ஒன்று பட்டுச் சிதறுகிறது. வலக் கையின் நாலு கை விரல்களும் கீழே தொங்க, இரத்தம் பாய்ந்து ஓடுகிறது. அந்த வலி... தாங்க முடியாத அந்த வலி யில், "அம்மா!" என ஓலமிட்டுக் கத்து கிறேன், நான்.

ஆனால் இருந்த இடத்திலிருந்து நான் மிகவும் தூரத்தில் வீசப்பட்டு இருப் பது அந்தக் கரிய புகைக்குள்ளும் மெலி தாகத் தெரிகிறது. கண்ணுக்குத் தெரிந்த இடமெல்லாம் இரத்தம். காது நிறைந்த முனகல்களும், கூக்குரல்களும் வேறு மனதைப் பிளக்கின்றன. மெல்ல எழும்ப முயன்றபோது, தலைக்கு மேலை வந்த இன்னொரு பொம்பர் பிறகும் ஒரு குண்டைப் போட்டு விட்டுச் செல்ல... பக்கத்திலிருந்த வேப்ப மரம் பெருத்த ஒலி யுடன் சடாரென விழுகிறது. தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய இரண்டு கால்களுக்கும் இடையில் ஏதோ ஒன்று விழுந்து காலை எரிக்கிறது.

ஆஸ்பத்திரியில் கண் முழித்தபோது 'அம்மா வேறை வாட்டிலை, தம்பி வேறை வாட்டிலை இருக்கினம். இப்ப ஒருத்தரும் ஒருத்தரையும் பார்க்கேலாது. சுகம் வரப் பார்க்கலாம்' என்றார்கள்.

தலையிடி, காய்ச்சல் எண்டாலே, 'வைரவரே பிள்ளையைக் காப்பாத்து' எண்டு ஒரு பழந்துணியிலை 25 சதம் காசும், திருநீறும் கொஞ்சம் போட்டுக் கை யிலை கட்டிவிட்டு, அடிக்கடி நெற்றி யிலை பச்சைத் தண்ணிச்சீலை போட்டு விட்டபடி, பக்கத்திலை இருந்து தடவிக் கொண்டிருக்கிற என்ரை அம்மா, இந்த வலியின்போது எனக்குப் பக்கத்தில் இல்லையே என மனசு பலமாக வலிச் சது. எங்களுக்கு மேலே படுத்த அம்மா வின்ரை முதுகிலை செல் விழுந்திருக் குமோ அல்லது அவவின்ரை தலை யிலை விழுந்துதோ என்னவோ என்று ஒரே யோசனையாகவும் மிகுந்த பயமாக வும் வேறு இருந்தது.

என்னுடைய வாட் நேர்ஸ் என்னைப் பார்க்க வரும் போதெல்லாம் அழுதா. ஆஸ்பத்திரியில் துண்டு வெட்டி, என்னை முகாமுக்கு அனுப்பின போதுதான் அம்மா வும் தம்பியும் என்னை விட்டுப் போய் விட்டதை நான் அறிகிறேன். எனக்கு கை இல்லாமல் போனதை விட, நான் தனிச் சுப் போட்டன் என்ற இரக்கத்திலைதான் அந்த நேர்ஸ் அப்படி அழுதிருப்பா என்ப தும் அப்போதுதான் புரிகிறது.

கடைசியிலை, அப்பாவின்ரை அக்கா, எனக்கு 'அம்மா'வாகினதில், இப்ப இப்படி இங்கு வந்து நிற்கிறன், நான்.

பள்ளிக்கூடத்தாலை வந்த 'தங்கச்சி' என்ரை புதுக்கையைப் பார்க்க ஆர்வத் துடன் ஓடி வாறாள்.

"சுமி, என்ன யோசனை? இனிச் சந் தோஷமாக இருக்க வேணும். கை வந்திட டுது தானே. பிறகென்ன? எங்கை, சிரி பாப்பம்!" பக்கத்து வீட்டு மாமி சொல்லுறா.

நான், என் இரண்டு கைகளையும் பார்க்கிறேன். இது என்ரை அதிஷ்டமா?

## 48ஆவது ஆண்டு மலர்

2013ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளிவர இருக்கும் 48ஆவது ஆண்டு மலருக்கு படைப்பாளிகளிடம் இருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம். இவ் ஆண்டு மலரில் சிறப்புப் பகுதியாக மொழிபெயர்ப்பு அம்சங்கள் இடம்பெறவுள்ளன. அதற்கு உலக மொழிகளில் இருந்து நேரடியாகவும் ஆங்கில மொழி மூலமாகவும் மொழிபெயர்க்கப்பட்ட ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. இவ்வாக்கங்களை 2012.12.01ஆம் திகதிக்கு முன்னதாக மல்லிகைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

\- ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை இலக்கியப் பேரவையின் 2011ஆம் ஆண்டிற்கான இலக்கிய நூல்கள் தெரிவு

# விருதுபெறும் நூல்களும், சான்றிதழ் பெறும் நூல்களும்

1. ஆய்வு : 'தென்னிலங்கையின் புரதான கோயில்கள்' - என்.கே.எஸ்.திருச்செல்வம்.
   சான்றிதழ் : 'எகிப்து முதல் இலங்கை வரை இஸ்லாமியர்களின் இசை ஞானம்' 'கலாஜோதி' மௌலவி காத்தான்குடி பௌஸ்.

2. காவியம் : 'வாத்தியார் மாப்பிள்ளை' - காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிப்புத்தீன், கொழும்பு.
   சான்றிதழ் : 'தோட்டுப்பாய் மூத்தம்மா' - பாலமுனை பாறூக்.

3. கவிதை : 'துயரக் கடல்' - கி.பி.நிதுன், முல்லைத்தீவு.
   சான்றிதழ் : 'கறுப்பு மழை' - பெரிய ஐங்கரன், திருமலை.

4. நாவல் : 'சொடுதா' - எஸ்.ஏ.உதயன், பேசாலை, மன்னார்.
   சான்றிதழ் : 'அலைக் குமிழ்' - அகளங்கன், வவுனியா.

5. சிறுகதை : 'அனுசுயாவின் கரடி பொம்மை' - சந்திரகாந்தா முருகானந்தன், கொழும்பு.
   சான்றிதழ் : 'அங்கயங்கன்னியும் அவள் அழகிய உலகமும்' - தாட்சாயணி, சாவகச்சேரி.

6. சிறுவர் இலக்கியம் : 'சந்திரன் கதை' - கலாபூசணம் கேணிப்பித்தன், திருமலை.
   சான்றிதழ் : 'படைப்புகள் மூலம் அல்லாஹ்வை அறிவோம்' - எம்.எஸ்.எம்.நுஸைர், காத்தான்குடி.

7. சமயம் : 'முன்னோர் சொன்ன கதைகள்' - யோகேஸ்வரி சிவப்பிரகாசம், கோப்பாய்.
   சான்றிதழ் : 'ஸ்ரீ மத் பகவத்கீதை சுலோகம், உரை, விளக்கம், கதைகள்' - தமிழறிஞர் கே.வி.குணசேகரன், கோப்பாய்.

8. மொழிபெயர்ப்பு : "முல்லைத்தீவு தாத்தா' - திக்குவல்லை கமால்.
   சான்றிதழ் : 'இந்த நிலம் எனது' - கெகிறாவ ஸுலைஹா.

9. அறிவியல் : 'எண்ணங்களும் வண்ணங்களும்' - கலாநிதி. பண்டிதர் செ.திருநாவுக்கரசு, நல்லூர்.

10. பல்துறை : 'நேற்றுப்போல இருக்கிறது' - தெஹிவளை கே.எஸ்.பாலச்சந்திரன்.

11. நாடகம் : 'குறுங் கூத்துக்கள்' (ஐந்து தென்மோடிக் கூத்துக்கள்) - கலையார்வான் (கு.இராயப்பு) யாழ்ப்பாணம்.

**விருதுகள், சான்றிதழ்கள் வழங்கும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.**

செயலாளர், சி.சிவதாசன்,
இலங்கை இலக்கியப் பேரவை.

தொலைபேசி : 0759011248



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

# விழுந்து கிடக்கிறார் மாமா

தள்ளாடித் தள்ளாடித்
தடுமாறித் தடுமாறித்
வந்து விழுந்தார் மாமா
வாந்தியோடு.

எல்லோருக்கும் ஏச்சு,
எதிர்பட்டோரிடமெல்லாம்
ஏதேதோ பேச்சு.

சந்தியிலிருந்து ஒரே சத்தம்,
"வீரப்பிரதாப மயிலேறி
வருகடவுள் நீ"
என்றொரு பாட்டு.

இது சந்தோச வெளிப்பாடா...
அல்லது சலிப்பின் முறைப்பாடா...

என்னவென்று புரிந்துகொள்ள முடியாது
எல்லோரும்
ஆளை ஆள் முகம் பார்த்து
நிலம் பார்க்கும் மௌனம்.

என்ன நடந்தது இவருக்கு...?

அள்ளியள்ளிக் கொடுத்து
அப்படியே மாமாவைக்
கவிழ்த்து விட்டதோ அரசியல்...?

உப்புப் புளியோடு
உறைப்போடு...
மதுவையும் ஊற்றிக்கொடுத்து,
..............
மப்பேற்றி
மாமாவை வாந்தியெடுக்க வைத்ததோ
நடப்பியல்...?


"நல்லா இருந்த மனுசனை
விழுத்தாட்டிப் போட்டார்கள்"
என்று முணுமுணுத்தார்கள்
சில வயசாளிகள்.

வீழ்ந்து கிடக்கிறது மனிதம்.

விசயம் தெரியாமல்...
விபரம் புரியாமல்...
அங்கிங்கென்று
அப்படியப்படியே
வீழ்ந்து கிடக்கிறது மனிதம்.

எப்பவாவது
மாமா எழும்பினாற்றான்
தார்ப்பரியம் விளங்கும்.

எப்ப எழும்புவார் மாமா?





– நீலாபாலன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு 'பௌருஷம்'கள்



ஜெயகாந்தன்



ராஜகோபாலன்



– மேமன்கவி –

இக்கட்டுரை குறிப்புக்காக நான் தேர்தெடுத்திருக்கும் இரு சிறுகதைகளுக்கான முதல் ஒற்றுமை இவ்விரு கதைகளின் தலைப்பு.

1972ஆம் ஆண்டு மல்லிகையில் வெளிவந்த எஸ்.ராஜகோபாலின் பௌருஷம் என்ற சிறுகதையை சமீபத்தில் படித்த பொழுது, அதே தலைப்பில் ஜெயகாந்தன் அவர்களும் ஒரு சிறுகதையை எழுதியிருந்தமை நினைவுக்கு வந்தது. அக்கதை தமிழகத்திலிருந்து வெளிவந்த சரஸ்வதியில் 1957ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்டு, அவரது சிறுகதைத் தொகுப்பான **சுமைதாங்கி** எனும் தொகுப்பில் சேர்க்கப்பட்ட சிறுகதை அது.

அவ்விரு கதைகளின் தலைப்புகளில் இருந்த ஒற்றுமையை கடந்து அக்கதைகளில் வெளிப்பட்ட அடுத்த ஒற்றுமை என்று பார்த்தோமானால், ஏதோ விதத்தில் பாலியல் தொழில் புரியும் பெண்களைப் பற்றி அவ்விரு கதைகளும் பேசி இருக்கின்றன என்பதுதான்.

மேற்குறித்த ஒற்றுமைகள் இவ்விரு கதைகளையும் ஒப்பிட்டு பேசுவதற்கு பலமான காரணிகள் அல்ல என்ற கருத்து வாசக உலகுக்கு ஏற்படக்கூடும். அக்கருத்து நியாயமானதுதான். ஏனெனில் ஒரே தலைப்பில் வெவ்வேறு படைப்பாளிகள் கதைகள் எழுதலாம். ஒரே விடயத்தைப் பற்றி அக்கதைகள் பேசலாம். ஆனால் இவ்விரு கதைகளை ஒப்பிட்டுப் பேச வரும் என்னை போன்றவர்களின் கேள்வியும் பார்வையும் என்னவென்றால் இவ்விரு கதைகள் ஏதோ வகையில் பாலியல் தொழில் புரியும் பெண்களைப் பற்றி பேசுகின்ற அதேவேளை, பாலியல் தொழில் பெண்களைப் பற்றி இவ்விரு படைப்பாளிகளும் தம் படைப்புகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி ரீதியாக (பெண்ணிய மொழி, ஆணிய மொழி என்ற மாதிரி) எவ்வாறு முன்வைத் துள்ளார்கள்? அதாவது எத்தகைய தொனி யில் அக்கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது என்பதை ஆராய்வதும், இவ்விரு கதை களின் தலைப்பான பௌருஷம் என்ற சொல்லாடல் அப்படைப்புகளில் எவ்வாறு வெளிப்பட்டுள்ளது என்பதைத் தேடுவதுமே இக்கட்டுரைக் குறிப்பின் இலக்காக இருக்கிறது.

இவ்விரு கதைகளையும் ஒப்பிட்டுப் பேசுவதற்கு முன்னதாக இவ்விரு கதை களின் படைப்பாளிகளைப் பற்றிச் சிறிது பார்ப்போம்.

ஜெயகாந்தன் அவர்களைப் பற்றி அறி முகம் தேவையில்லை. ஒரு காலத்து நவீன தமிழ் இலக்கிய உலகின் ஜாம்பவான். புதுமைப்பித்தனுக்கு பிறகான தமிழ் சிறு கதைப் போக்கின் மாற்றத்தின் முன்னோடி.

எஸ்.ராஜகோபாலன் 70களில் மல்லிகை, அலை போன்ற சிறுசஞ்சிகைகளில் படைப்பு களைத் தந்தவர். இலங்கை தமிழர் சட்டத் தரணி. தற்பொழுது கனடாவில் வசித்து வருகிறார்.

## 2

முதலில் ஜெயகாந்தனின் பௌருஷத் தைப் பற்றிப் பார்போம்.

கிராமத்து பெண் ஒருத்தி சென்னையில் வாழும் தன் முறைமாப்பிள்ளையை திரு மணம் முடித்து போகிறாள். அங்கு அவள் தன் கணவனால் பாலியல் தொழில் புரிய வற்புறுத்தபட, அதை வெறுத்து, தன் கிரா மத்திற்குத் திரும்பி வந்து, தான் முன்பு காதலித்தவனுடன் சேர்ந்து வாழ்கிறாள்.

அடுத்து எஸ்.ராஜகோபலனின் பௌரு ஷத்தைப் பற்றிப் பார்ப்போம்.

கொழும்பு வெள்ளவத்தை ரயில் நிலை யத்தில் வந்து இறங்கும் ஒர் இளைஞன் அந்த ரயில் நிலையத்தில் வாடிக்கையாளர் களுக்காகக் காத்திருக்கும் தாயும் மகளுக் குரிய வயது ஒத்த இரு பாலியல் தொழி லாளிகளைச் சந்திக்கிறான். அவர்களுடன் அறிமுகமாகி, தனியாக வீடு திருப்பும் மகள் வயது ஒத்த பெண்ணுக்குத் துணையாகப் போகிறான். அந்தச் சிறிது நேரத்தில் அவர் கள் இருவர்களிடையே எழும் உணர்ச்சிப் போராட்டத்தை சித்திரிக்கிறது அக்கதை.

ஜெயகாந்தனின் கதைப் பிரதியை அன்று வாசித்தபொழுது எழாத கேள்விகள் இன்று வாசிக்கும் பொழுது எழுகின்றன. அதற்குக் காரணம் ஆணியமொழி, பெண் ணியமொழி பற்றிய அறிதல் - பரிச்சயம் நமக்கு இல்லாமல் இருந்தமை, அடுத்து அன்றைய காலம் வரை யாரும் சித்திரிக் காத அளவுக்கு விளிம்பு நிலை மக்களை அவர் சித்திரித்த முறைமை தந்த வியப்பு (அந்தக்காலம் வரை ஜீ.நாகராஜனின் படைப் புலகத்தைப் பற்றிய பரவலான அறிதல் இருந்திருந்தால் இந்த வியப்பு ஏற்பட வாய்ப் பில்லை) ஆனால், இன்று ஆணிய - பெண்ணிய மொழியைப் பற்றிய அறிதல் பரவலாகிவிட்ட காலகட்டம். அடுத்து நவீன தமிழ் இலக்கியத்தில் விளிம்பு நிலை பற்றிய சித்திரிப்பு என்பது தலித்திய சிந்தனை போன்ற கருத்து நிலைகள் மூலம் பரவலாக அறியபட்டதும், ஜீ.நாகராஜனின் இலக்கியப் போக்கைப் பற்றி ஆழ்ந்து படிக்கப்பட்டதும், ஜெயகாந்தனின் விளிம்பு நிலை மக்களைப் பற்றிய சித்திரிப்பு மறுவாசிப்புக்கு உட்பட்ட காலகட்டம் இது. அதன் காரணமாக ஜெய காந்தனின் பௌருஷம கதைப் பிரிதி சில பல கேள்விகளை எழுப்புகிறது.

அக்கதைப் பிரதியின் மூலம் கதாசிரியர் என்ன சொல்ல முயற்சிக்கிறார்? எனப் பார்போம்.

உடற்கூறால் ஆண் என்றாலும் மனைவியை விபசாரத்திற்கு ஈடுபடுத்த விரும்புகின்றவன் ஆண் அல்ல என்பதை அழுத்தமாக அக்கதைப் பிரதி பேசுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு, அதன் காரணமாக அவனை விட்டுச் சென்ற மனைவி கிராமத்தில் தான் முன் காதலித்தவனுடன் சேர்ந்து வாழ தொடங்குவது என்பது, கணவனுக்கு எதிரான ஒரு கலகச் செயலாக கதாசிரியர் வெளிப்படுத்துகிறார். அந்த அளவில் அன்றும் சரி, இன்றும் சரி ஒரு வியப்பை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் ஒரு பிரதி என்பது மறுப்பதற்கில்லை. அதேவேளை ஜெயகாந்தனின் பௌருஷம் கதைப் பிரதியில் பாலியல் தொழில் புரியும் பெண்களை அவர் பார்த்த விதம் கேள்வியை எழுப்புகிறது. அக்கதையில் ஓரிடத்தில் இப்படி வருகிறது.

**"பிஸினஸுக்கு தயாராகும் பட்டணத்து பொறுக்கிப் பெண்கள். அவர்களுடன் சிரித்துச் சிரித்துப் பேசி வம்பளக்கிறார்கள். ஆபாசமான வார்த்தைப் பிரயோகங்கள்! இலக்கிய ரசிகர்களுக்குப் பிடிக்காத ஹாஸ்யச் சுவைகள்... அந்த மக்களுக்கு அவையே மகிழ்ச்சி தரும் 'கலா நிகழ்ச்சிகள்!"**

இந்தச் சொல்லாடல்களில் பாலியல் தொழில் புரியும் பெண்களை வெறுத்து ஒதுக்குகின்ற ஒரு மனோபாவம் வெளிப்படுகிறது.

அடுத்து ராஜகோபலனின் பிரதி என்ன சொல்ல முயற்சிக்கிறது? என்று பார்த்தோமானால், பாலியல் தொழில் புரியும் பெண்களுக்கும் இதயம் என்ற ஒன்று இருக்கிறது. அவர்களுக்கும் உணர்ச்சிகள், உணர்வுகள் இருக்கின்றன என்பதை எந்தவிதமான ஆர்ப்பாட்டத் தொனியுமின்றி சொல்கிறார். அதே வேளை பாலியல் தொழில் புரியும் பெண்களின் உடல் வெளிமீது ஆணினம் செலுத்தும் வன்முறை வற்புறுத்தல் என்பதைப் பற்றியும் கதை நகர்ந்து போகும் போக்கில் பின்வருமாறும் பேசியும் செல்கிறார்.

**நேற்றுவரை அரங்கேறிய காட்சிகளிலெல்லாம், திடீரெனத் தோன்றி உறவு கொண்டாடும் ஒரு அந்நியனுடன், ஒரு வார்த்தையே இனிமையாகப் பேசத் தெரியாத, அப்படிப் பேசும் அவகாசத்தை விரும்பாத, அப்பொழுதைய தாழாத தற்குறியுடன், அவன் இழுத்த திசையெல்லாம் ஓடி, இருளில் மறைந்தும் மறைவில் நுழைந்தும், இரு என இருந்து, நில்லென நின்று, மிக்க நெருக்கத்தில் அவனின் உடல் வெக்கையில் தவித்து, அவன் மூச்சின் நெருப்பைச் சகிக்க முடியாமல் திணறி, அவனின் வியர்வை மணத்தை முகர முடியாமல் தவித்து, அவனின் ஒரு நிமிட வெறி அடங்குவதற்குள் ஆறு கடந்து வந்தது போன்ற சலிப்பை அடைந்து... 'ஓ! அந்த வேதனைதான் என்ன...!) அப்போதெல்லாம் வெறும் கட்டளையை நிறைவேற்றுகின்ற பொம்மை போல் இயங்கிய தன் மனம், இப்போது மாத்திரம் ஏனோ தெறித்துக் கொண்டு திரும்பிவிட முயல்வதும், ஓய்வதும் மீண்டும் போராடுவதுமாக அலைக்கழிவதை உணர்ந்தாள்.**

இரு கதைகளிலிருந்தும் எடுத்துக் காட்டியிருக்கும் மேற்குறித்த சந்தர்ப்பங்கள் மூலம், ஜெயகாந்தன் பாலியல் தொழில் புரியும் பெண்களை வெறுப்புணர்ச்சியுடன் பார்க்க, ராஜகோபாலனோ அப்பெண்களின் உணர்சசிகளை, அவர்கள் படும் மௌன வதையை மிக மனிதநேயத்துடன் எடுத்துச் சொல்கிறார் எனத் தெரிகிறது. அடுத்து பௌருஷம் என்ற சொல் இவ்விரு கதைகளில் எவ்வாறு பயன்பட்டுள்ளது எனப் பார்ப்பதற்கு முன்னதாக பௌருஷம் என்ற சொல்லின் விரிவான அர்த்தத்தைப் பார்த்தோமானால், ஆண்மை, புருஷ இலட்சணம் என்பதாக அமையும். ஜெயகாந்தன் கதையில் அச்சொல், மனைவியை விபசாரத்தில் ஈடுபடுத்துவது பௌருஷம் அல்ல என்றும், ராஜகோபாலன் கதையில் தான் சந்தித்த பெண் பாலியல் தொழிலாளி என்று தெரிந்திருந்தும் அவளுடன் கௌரவத்துடனும் மனித நேயத்துடனும் சிநேகபூர்வமான உணர்வுடன் அவளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பதே பௌருஷம் என்று விவரிக்கப் படுகிறது.

ஜெயகாந்தனின் அக்கதை பின்வந்த காலத்தில் ராஜகோபாலனின் கதை எழுதப்பட்டமையால் அத்தலைப்பை ஜெயகாந்தனிடமிருந்தே அவர் பெற்றிருக் கக்கூடும்.

ராஜகோபாலன் ஜெயகாந்தனின் பௌருஷத்தைப் படித்து, பௌருஷம் எனும் சொல்லுக்கு இன்னொரு வகையான வியாக்கியானமும் இருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட இக்கதையினை எழுதி யிருப்பாரோ என்ற ஐயமும் எனக்கு ஏற் படுகிறது.

அத்தோடு இவ்விரு கதைகளின் நடையைப் பொறுத்தவரை ஜெயகாந்தனின் கதையின் நடை அவரது தனித்துவ நடை. அத்தோடு உள்ளடக்கத்தை விவரிக்கும் நடையில் ஒரு எள்ளல் தன்மையும் கோபத் தன்மைமையும் வெளிப்படும் நடை. இந்த எள்ளலும் கோபமும் பாலியல் தொழில் புரியும் பெண்கள் மீதான அனுதாபம் சார்ந்தது அல்ல என்பது தெரிகிறது. அதே வேளை ராஜகோபாலனின் நடையோ எனக்கு மௌனியின் நடையை ஞாபகப் படுத்தியது. ஆனாலும் மௌனியின் நடை யிலும் சரி, உள்ளடக்கத்திலும் சரி தனி மனித விசாரம் என்பது விரவி இருக்கும். ஆனால் ராஜகோபாலனின் நடையிலும் சரி, உள்ளடக்கத்திலும் சரி, சமூகப் பிரக்ஞை (குறிப்பாகப் பெண்ணை பற்றிய பார்வை யில்) மேலோங்கி நிற்பதைக் காணலாம். இருவரது இந்த நடை சார்ந்த, உள்ளடக்கம் சார்ந்த மேற்குறித்தத் தன்மைகளுக்கு உதாரணமாக மேலே நாம் எடுத்துக்காட்டிய அவ்விருவரது கதைகளின் பகுதிகளைச் சொல்லலாம்.

ஜெயகாந்தனின் 'பௌருஷம்' எஸ்.ராஜகோபாலனின் 'பௌருஷம்' ஆகிய இருகதைகளும் வெவ்வேறு காலகட்டத்தில் எழுதப்பட்டாலும், இன்றைய வாசிப்பில் அவ்விரு கதைகளையும் ஒரு சேரப் பயிலும் பொழுது, 50களில் தமிழகச் சூழல் சார்ந்த ஒரு படைப்பாளியாலும், 70களில் ஈழத்துச் சூழல் சார்ந்த ஒரு படைப் பாளியாலும், சமூகம் சார்ந்த முக்கிய ஒரு பிரச்சினையான பெண்ணினம் சார்ந்த பிரச்சினை, பெண்ணியச் சிந்தனை ஒரு பலமான பரவலான இயக்கம் வடிவம் - அதாவது பெண் மொழி சார்ந்த அறிதல் பரவலாகாத காலகட்டத்தில், 50களில் யாரும் பேசாத பொருளை (ஆணாதிக் கத்தை ஒரு பெண் உதறிச் செல்லும் நடத்தை, பாலியல் தொழிலாளி பற்றிய பிரஸ்தாபிப்பு போன்றவை பற்றிப் பேசிய ஒரு படைப்பு என்ற வகையில் ஜெய காந்தனின் பிரதி வியப்பு தர, ராஜ கோபாலின் பிரதியோ தமிழ்ச் சூழலில் பெண்ணியச் சிந்தனை - அதன் அடிப் படையிலான பெண் மொழியை பற்றிய அறிதல் பரவலாக ஆகாத ஒரு கால கட்டத்தில் பெண் பாலியல் தொழிலாளி பற்றி மிக நிதானத்துடன் எந்த விதத்திலும் அவளை அவமதிக்காத நிலையில் வெளிப்பட்ட ஒரு பிரதி என்ற வகையிலும் வியப்பை ஏற்படுத்துகிறது.

மொத்தத்தில் ஜெயகாந்தனின் 'பௌருஷம்', எஸ்.ராஜகோபலனின் 'பௌருஷம்' ஆகிய இரு கதைப் பிரதி களும் வெவ்வேறு வகையான பார்வை யுடன், ஒரே வகையான சமூக இருப்பு வகை சார்ந்த மாந்தர்களின் வெவ்வேறான உணர்ச்சி நிலைகளை, உள்வாங்கிக் கொள்ளும் அனுபவத்தைத் தருகின்ற பிரதிகளாக வெளிப்பட்டுள்ளன எனத் தெரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூண்டில்



– டொமினிக் ஜீவா

**ஈழத்துப் பெண் கவிஞர்களின் ஆக்கங்கள் ஓலங்களாகவே எஞ்சு கின்றன என்ற பொதுவான கருத்தே தமிழகப் பெண் கவிஞர்கள் பலரிடமும் நிலவுகிறது. இது குறித்து உங்கள் கருத்தை அறிய விரும்புகிறேன்.**

யாழ்ப்பாணம். ரோஜினி

நமது நாட்டுப் பெண் கவிஞர்களிடம் அநுபவ வீச்சுக் கிடையாது. தமக்குத் தமக்கான கவி ஆற்றலைப் பெருக்கிக் கொள்ளவோ, மெரு கேற்றிக் கொள்ளவோ இவர்களில் பலர் மெய்யான ஆர்வம் காட்டுவ தில்லை. இலக்கியக் கூட்டங்களில் கலந்துகொள்வது ரொம்ப ரொம்பக் குறைவு. நல்ல படைப்புக்களைத் தேடித் தேடிப் படிப்பதில் அசிரத்தை. ஒரு படைப்பாளி எந்த நேரத்திலும், எந்தக் கட்டத்திலும் தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ள முனைந்து செயற்பட வேண்டும். இத்தகைய பின்னணியில்தான் பெண் கவிஞர்களை மாத்திரமல்ல, சகல படைப்பாளி களையும் நாம் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும்.

**மல்லிகையின் ஆரம்ப காலகட்டத்தில் இருந்து இன்றுவரை மல்லிகையின் வளர்ச்சியில் பெரும்பங்கு வகித்து, தோள் கொடுத்து உதவி செய்தவர்கள் பற்றிய தகவல்களைச் சற்று விரிவாகச் சொல்ல முடியுமா?**

கிளிநொச்சி க.இரத்தினசிங்கம்

மல்லிகையின் ஆரம்ப காலகட்டம் ரொம்பவும் முக்கியமான கால கட்டமாகும். பொருளாதார நெருடிக்கடி மாத்திரமல்ல, நமது இலக்கிய நேர்மையையும், இதய சுத்தியான இலக்கிய அர்ப்பணிப்பு உணர்வுகளையும் எதிர்ப் பிரசாரம் செய்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இந்தக் கெட்டித்தனம் எத்தனை நாளைக்கு?' எனக் காலக்கெடு வகுத்த வர்களினது மன உணர்வுகளும் எனக்கு ஏற்கனவே நன்கு தெரியும்.

இத்தனைக்கும் நெஞ்சார என்னையும் எனது ஆழமான இலக்கிய நேசிப்பையும் துல்லியமாகப் புரிந்துகொண்ட பலர் மனப்பூர்வமாக உதவிகள் பல செய்தார்கள். இவர்களில் பலர் இன்று உயிருடன் இல்லை. அந்த மகத்தான இலக்கிய நெஞ்சங்களையும் இந்தக் கட்டத்தில் நினைத்துப் பார்க்கிறேன்.

தொடர்ந்து ஆண்டுக் கணக்காக மல்லிகையைப் படித்து வருபவர் களுக்கு கடந்த காலத்தில் மெய்யாகவே மல்லிகைக்கு ஆக்கமும் ஊக்கமும் ஊட்டியவர்களின் நாமங்கள் துல்லியமாக நன்கு தெரியும்.

**இன்றைய தமிழ் சினிமாப் போக்கைப் பற்றிய தங்களின் பார்வை எப்படியிருக்கிறது?**

**கொழும்பு. எஸ்.சர்மிளா**

நான் சிறுவனாக இருந்த அந்தக் காலத்தில் இருந்தே சினிமாப் படங்களைப் பார்த்து வந்துள்ளேன். எனது அப்பா ஒரு சினிமா ரசிகர். தான் ரசிக்கும் படங்களைப் பார்த்து ரசிக்கக் கைச்செலவுக்குப் பணம் தந்து, இளம் வயதிலேயே என்னை ஊக்குவித்தவர், அவர். ஜே.பி. ராஜலச்சுமி, சுந்தராம்பாள், எம்.எஸ்.சுப்புலச்சுமி, பாகவதர், சின்னப்பா, ராதா, கொக்கோ, பாலையா, கிருஸ்ணன், மதுரம் போன்றோரினது அந்தக் காலத்துப் புகழ் பெற்ற அத்தனை சினிமாக்களையும் பார்த்து ரசித்துப் பழக்கப்பட்டவன். அதே சமயம் சினிமா மோகம் கொண்டவனு மல்ல.

பல சினிமாப் படங்கள் இசை ஒன்றை நம்பியே படமாக்கப்பட்டு வெளிவந்தன. சங்கீதத்திற்காகவே பல படங்கள் மாதக் கணக்கில் தியேட்டரில் காண்பிக்கப்பட்டு பிரபலமடைந்ததுமுண்டு.

இன்று சர்வதேசத் தரத்திற்கு நமது சினிமாத்துறை வளர்ந்திருந்த போதிலும் கூட, தமிழ் சினிமாவினால் இன்னமும் சர்வதேசத் தரத்துக் குரியதான தொழில்நுட்பம் வாய்ந்த எந்தவொரு சினிமாப் படத்தையுமே தபாரிக்க முடியவில்லை. இது நமது கவனத்திற்குரியது. பல திறமை வாய்ந்த, படித்த இளைஞர்களும், யுவதிகளும் சினிமாத்துறைக்கு வந்துள்ளது மகிழ்ச்சிக்குரியதே.

இருந்தும் சினிமா உலகம் அங்கீகரிக்கத்தக்கதான தமிழ்ச் சினிமாப் படத்தைத் தயாரிக்கமால் இருப்பது தமிழின் துரதிர்ஸ்டமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகை சிறுகதைகள் ஓர் ஆய்வு

# (2001-2010)

## தொகுப்பும் மதிப்பீடும்

கிழக்குப் பல்கலைக்கழகத்தில்
தமிழ் பி.ஏ. சிறப்புப் பாடநெறிக்காக
மேற்கொள்ளப்பட்ட ஆய்வு





- பிரியதர்ஷினி

## தொகுப்பு

தமிழ் இலக்கிய சஞ்சிகை வரலாற்றில் டொமினிக் ஜீவாவினை ஆசிரியராகக் கொண்டு, ஈழத்திலிருந்து வெளி வரும் ஒரு தனித்துவம் மிக்க கலை இலக்கிய சஞ்சிகை யாக மல்லிகை சிற்றேடு காணப்படுகின்றது. தமிழ் இலக்கிய உலகிற்கு ஆற்றி வரும் பணிகளுள் சிறுகதைகளுக்கு முக்கிய இடம் வழங்கப்படுகின்றது. குறிப்பாக 2001 - 2010 வரையான காலப்பகுதியில் வெளிவந்த மல்லிகை சிறு கதைகள் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல், தமிழ் சிறுகதை வளர்ச்சிக்கும் வரலாற்றிக்கும் கூட வலு சேர்ப்பனவாய் உள்ளன.

இவ்வகையில், இக்காலப்பகுதியில் வெளிவந்த இம் மல்லிகை சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டு, ஆய்வு, அறிமுகம், ஆய்வின் நோக்கம், ஆய்வின் மூலங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றினைக் கூறுவதாக முதலாவது அத்தியாயம் காணப்படுகின்றது. ஆய்வு அறிமுகத்தில் மல்லிகை, அதன் ஆசிரியர் பற்றிய விபரமும், சிறுகதையின் முக்கியத்துவம், இதுவரை வெளிவந்த மல்லிகை சிறுகதைகளின் எண்ணிக்கையும் பற்றிக் கூறப்படுகின்றது. ஆய்வின் நோக்கத்திலே 2001 - 2010 வரையான காலப்பகுதியில், வெளிவந்த மல்லிகை சிறுகதைகளினை ஆய்வு செய்வதனை நோக்கமாகக் கொண்டதுடன் ஆய்வு செய்வதற்கான காரணங்கள் யாவை என்பதனையும் கூறுகின்றது. ஆய்வின் மூலங்களின் இந்த ஆய்விற்குத் தேவையான முதலாம் நிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.

அத்தியாயம் இரண்டிலே, சிறுகதையென்றால் என்ன? அதன் பண்புகள், சிறப்பியல்புகள் யாவை? என்பவற்றினையும் ஈழத்திலே சிறுகதை தோன்றிய காலம் முதல் தற்போது வரைக்குமான சிறுகதை வளர்ச்சியும், மாற்றங்களும், சஞ்சிகை என்றால் என்ன? அதன் இயல்புகள் யாவை என்பதும், இறுதியாக ஈழத்து சஞ்சிகைகளின் இலக்கிய வளர்ச்சி தற்போது வரை எவ்வாறு காணப்படுகின்றது என்பதையும் ஆய்வு செய்கின்றது.

அத்தியாயம் மூன்றானது, மல்லிகை இதழாசிரியர் டொமினிக் ஜீவாவின் வாழ்க்கைப் பின்புலம் பற்றி முதலில் கூறுகின்றது. இதிலே அவருடைய வரலாறு, அவரின் பின்னணி, அவர் இலக்கியத்துக்கு வரத் துணையாக நின்ற காரணங்கள், அவரின் திறமைகள் என்பவை பற்றிக் கூறுவதுடன் ஆசிரியர் பற்றிய கவிதை ஒன்றினையும் தந்துள்ளது. அடுத்து, மல்லிகை ஆசிரியரின் இலக்கிய பணிகள் பற்றிக் கூறப்படுகின்றது. இவருடைய இலக்கிய முயற்சிகள், படைப்பாக்கங்கள், நூல்கள், பணிகள் போன்ற பலவற்றினையும் கூறுகின்றது. இறுதியாக மல்லிகையின் தோற்றமும் வளர்ச்சியும் கூறப்படுகின்றது. இதிலே அதன் வெளியீடு, அதன் வளர்ச்சி, வெளிவரும் ஆக்கங்கள் என்பன பற்றியும் சற்று விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

அத்தியாயம் நான்கிலே, இலங்கையின் சமகால அரசியல் பொருளாதார சமூக நிலைகள் என்பவற்றினை கூறி மல்லிகை சிறுகதைகளின் பொருளடக்கத்தினை ஆய்வு செய்யப்பட்டுள்ளது. உள்ளடக்கமாக மல்லிகை சிறுகதைகளினூடாக வெளிவரும் சமுதாயப் பிரச்சினைகள், அரசியல் பிரச்சினைகள், இலங்கைப் போர் அவலங்கள் என்பவற்றினைக் கூறலாம். சமுதாயப் பிரச்சினைகளுள், பொருளாதாரச் சிக்கல், மனித நேயம், பெண்ணியம், மனிதாபிமானமற்றவை, காதல், பாசம், சுனாமி அனர்த்தங்கள், வெளிநாட்டு வாழ்க்கையின் அவலங்கள், மலையகத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினைகள், மேலும் பல பிரச்சினைகள், சம்பவங்கள் என்பவற்றினை ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இலங்கைப் போர் அவலங்களில் யுத்த சம்பவங்கள், இடப்பெயர்வு, புலப்பெயர்வு, அகதி வாழ்க்கைப் போன்ற அம்சங்களினைக் காணலாம்.

அத்தியாயம் ஐந்தானது, இக்காலப் பகுதியில் வெளிவந்த மல்லிகை சிறுகதைகளின் கலைத்துவத்தினை ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதில் பாத்திர வார்ப்புக்கள், கதைப் பின்னல், நோக்கு நிலை, நடை, கதைக்கரு, தொடக்க - முடிவுகள், கதாசிரியர் கூறும் செய்தி, சூழ்நிலைச் சித்தரிப்பு, அளவு போன்ற கலைத்துவ அம்சங்கள் முக்கியத்துவப் படுத்தப்பட்டதுடன், அவற்றினை உதாரணமாகவும் காணக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, மேற்கூறிய அத்தியாயங்களினைக் கொண்டு தொகுத்து நோக்கின், 2001 - 2010 வரையான காலப்பகுதியில் வெளிவந்த மல்லிகை சிறுகதைகள், ஈழத்து சிறுகதை இலக்கியத்தை வளர்த்தெடுப்பதிலும், முன்னெடுத்துச் செல்வதிலும் முனைப்புடன் செயற்பட்டுள்ளன. இவற்றில் ஈழத்து மண் வாசைன யதார்த்த பூர்வமாகக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளதுடன் சிறுகதைகளுக்கேயுரிய தனித்துவமான அம்சங்களும் காத்திரமான முறையில் பேணப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## மதிப்பீடு

டொமினிக் ஜீவாவினால் வெளியிடப்படும் தமிழ் இலக்கிய சஞ்சிகையான மல்லிகை இதழானது, இடைவிடாத பெருமையுடன் 46ஆவது ஆண்டு இதழினையும் தாங்கி வெளிவந்துள்ளது. தனி ஒருவரின் அயராத உழைப்பினாலும் பல இடையூறுகளையும் எதிர்கொண்டு 85 ஆவது வயதினை எட்டிய நியையிலும் சற்றும் சலிக்காது மல்லிகையினை தமிழ் இலக்கிய உலகிற்கு தவழ விடுகின்றார் என்றால் அது மிகையாகாது எனலாம். மல்லிகையானது ஈழத்திலே மட்டும் பிரசுரம் ஆகாமல் தமிழ் இலக்கிய உலகு முழுவதும் கடந்து செல்கின்றது.

இவ்வாறான சிறப்பு மிக்க மல்லிகை இதழானது பல அம்சங்களினை தாங்கியுள்ளது. அவற்றில் ஒன்றுதான் சிறுகதையாகும். ஈழத்திலே 19ம் நூற்றாண்டில் தோற்றம் கண்ட ஓர் இலக்கிய வடிவமாயினும், இன்று இவ்விலக்கிய வடிவம் ஒரு நிறைவான வளர்ச்சிக் கட்டத்தை அடைந்துள்ளது எனலாம். காலத்துக்குக் காலம் சிறுகதை எழுத்து முயற்சிகளுக்கு பல தரப்பினரும் காட்டிவரும் ஆர்வம் விதந்துரைக்கத்தக்கதாகும். அவ்வகையில், ஈழத்துச் சிறுகதை இலக்கிய வடிவங்களும் தமிழ் இலக்கிய வரலாற்றில் மிக முக்கிய இடம்பெறுகின்றன. தமிழ் நாட்டைப் பின்பற்றியே ஈழத்துச் சிறுகதை இலக்கியம் தோற்றம் பெற்றாலும் இன்று இதன் வளர்ச்சி தமிழ்நாட்டுச் சிறுகதை இலக்கிய வளர்ச்சியைக் காட்டிலும் பன்மடங்கு உயர்வானது எனப் பலராலும் கருத்துக்கள் கூறப்படுகின்றன. அதற்குக் காரணம், ஈழத்துச் சிறுகதைகளின் நுணுக்கமான யதார்த்தப் பார்வையேயாகும்.

எனவே, இவ்வாறான யதார்த்தப் பார்வையினை நாம் மல்லிகை சிறுகதைகளில் காணலாம். 2001 - 2010 வரையான 10வருட காலப்பகுதியில் வெளிவந்த மல்லிகை சிறுகதைகளில் பெருமளவில் யதார்த்தத் தன்மையினையே நாம் காணலாம். வெறுமனே வர்ணனைகள், கற்பனை உலகு என்பவற்றினை பிரதிபலிக்காமல் யதார்த்த உலகினைக் காணலாம். மல்லிகை ஆசிரியர் யதார்த்தப் போக்கான சிறுகதைகளுக்கு முதன்மையளிப்பதனை அதன் மூலம் விளங்கிக் கொள்ளலாம். சமூகத்தினை ஆழமாக அறிந்து யதார்த்த நோக்கோடு துல்லியமாக சித்தரித்துக் காட்டியுள்ளார். சமூகத்திலே அன்றாடம் நாம் எதிர்கொள்ளும் பொருளாதாரச் சிக்கல்கள், வறுமைக் கொடுமைகள், குடும்ப வாழ்க்கைச் சிக்கல்கள், மலையக மக்களின் பிரச்சினைகள், பெண்ணடிமை, மனிதநேயம் அற்ற ஏமாற்றுக்காரர்கள், தமிழ், சிங்கள, முஸ்லிம் மதக் கலாசாரப் பண்பாட்டு அம்சங்கள், வெளிநாட்டு வாழ்க்கை அவலங்கள், போன்ற பல அம்சங்களினையும் அப்படியே படம் பிடித்துக் காட்டுவனவாக சிறுகதைகள் காணப்படுகின்றன.

இவ்வாறு சமுதாயப் பிரச்சினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை யதார்த்தப்பூர்வமாகக் கூறினும், இக் காலகட்டத்துக்குரிய முக்கியமான விடயங் களையும் சிறுகதைகளாகக் காணலாம். அதாவது 2004இல் இடம்பெற்ற பாரிய சுனாமி அனர்த்தம், மற்றும் இக்கால கட்டத்திலும் தொண்ணூறுகளிலும் இடம் பெற்ற யுத்தங்கள் பற்றியும் சிறுகதைகளி னூடாக விளங்கிக் கொள்ளலாம். ஈழத்தில் இடம்பெற்ற யுத்த காலத்தின் போது மக்கள் பட்ட அவஸ்தைகளினையும், செல் தாக்குதலால் உயிர் இழப்புகளும் சொத்துடமைகளின் இழப்புகளும், இடப் பெயர்வின் போது மக்கள் அனுபவித்த கொடுமைகளினையும் சிறுகதையாசிரியர் கள் அப்படியே இலக்கிய உலகிற்கு மட்டு மல்லாமல் தமிழ் உலகிற்கே எடுத்துக் காட்டுகின்றனர்.

சுனாமியால் ஏற்பட்ட பாரிய இழப்புக் களினை 2004, 2005 காலங்களில் வெளி யாகிய மல்லிகை சிறுகதைகளில் காணக் கூடியுதாக உள்ளது. சுனாமியிலே தாய் தந்தையினை இழந்த சிறுவர்களின் நிலை பற்றியும், அகதிகளாக வாழ்ந்த போது மக்கள் உணவிற்காகவும் உடமைகளுக் காகவும் பட்ட கஷ்டங்களினையும், சுனாமி யின் பேரில் அமைச்சர்களின் ஊழல் களினையும் நாம் அறிந்தது உண்மையே. இதனையே சிறுகதையாசிரியர்கள் கூறு கின்றனர். மேலும் 83ல் ஏற்பட்ட கறுப்பு யூலைக் கலவரத்தினை நினைவுபடுத்துவ தான சிறுகதையினையும் இக்கதைகளில் காணக்கூடியதாக உள்ளது. அது மாத்திரம் இன்றி இனவெறி, இனவொற்றுமை, மதம் பற்றியவை, கலாச்சாரப் பண்பாட்டு அம் சங்கள் என்பவற்றினையும் குறிப்பிடத் தவறவில்லை. மொத்தத்தில் சமூகத்தில் நடைபெறும் விடயங்கள் யாவற்றினையும் இக்காலகட்ட மல்லிகைச் சிறுகதைளில் காணலாம்.

இவ்வாறு மல்லிகை சிறுகதைகளின் உள்ளடக்கங்களினை நாம் சமூகம் சார்ந் தவை, அரசியல் சார்ந்தவை, இலங்கைப் போர் அவலங்கள் என்ற ரீதியில் பார்க்கக் கூடியதாக உள்ளது. சமூகம் சார்பான சிறுகதைகளே அதிகமாக எழுதப்பட்டுள் ளன. அரசியல் சார்பான சிறுகதைகள் மிகவும் குறைவு. காரணம் அரசியல் சார் பாக எழுதுவதற்குரிய சுதந்திரம் இல்லாது இருப்பதேயாகும். யுத்தம் சம்பந்தமான சிறுகதைகள் சற்று கூடுதலாகக் காணப் படுகின்றன. சமூகம் சார்ந்த சிறுகதைகளி லும் அதிகமான சிறுகதைகள் பொருளா தாரச் சிக்கல்கள், குடும்ப வாழ்க்கை அவ லங்கள், வறுமைகள் போன்றனவேயாகும்.

மல்லிகை சிறுகதைகளின் உள்ளடக் கங்கள் மட்டுமல்லாது சிறுகதை உத்தி களும் யதார்த்தப் போக்குடையவையாக காணப்படுகின்றன. பாத்திர வார்ப்புக்கள், கதைப்பின்னல், நோக்கு நிலை, அவற் றின் தொடக்கங்களும் முடிவுகளும், கருப் பொருள், நடை சூழ்நிலைச் சித்தரிப்பு, காதாசிரியர் கூறும் செய்தி, அளவு, முரண் என்பவற்றினை இந்த சிறுகதைகளில் காணலாம். தமிழ்நாட்டுச் சிறுகதைகளில் அணி அலங்கார நடைகள் அதிகம் இடம் பெறுவன. ஆனால் ஈழத்துச் சிறுகதை களில் இவற்றினை விடுத்து யதார்த்த நிலைகளை பொறுப்புணர்வுடனும், நுணுக்கமான பார்வையுடனும் மாத்திரமே சித்திரிக்க முனைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில், பாத்திர வார்ப் பினை எடுத்துக் கொண்டால் ஓரிரு பாத்தி ரங்களினைத் தவிர ஏனைய யாவும் யதார்த்தத்தினை வெளிப்படுத்துவனவாக உள்ளன. பாத்திர வர்ணனை என்பது மிகவும் குறைவாக உள்ளது. 10வருட மல்லிகை சிறுகதைகளிலும் ஒரேயொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதையில் மட்டும் பாத்திர வார்ப்பு வித்தியாசமானதாக உள்ளது.

**'நிறைகுடம்'** எனும் சிறுகதையில் மட்டும் உயிரற்ற சடப்பொருள்களினை பாத்திரங்களாகக் கொண்டுள்ளார் செங் கதிரோன். பென்சில், பேனா, தட்டச்சு, கணணி என்பன பாத்திரக் கூற்றுக்களாக உள்ளன. இவை குறியீடுகளாகவும் இருக்கலாம்.

கதைப்பின்னலினை நோக்குகையில், அகப்போராட்ட சிறுகதைகளும், புறப் போராட்ட சிறுகதைகளும் இடம்பெற்றுள் ளன. புறப்போராட்டமே அதிகளவில் காணப்படுகின்றது. நோக்கு நிலையினை எடுத்துக் கொண்டால், தன்மைக்கூற்று நிலையே அதிகமாகக் காணப்படுகின்றது. சிறுகதையின் அளவினைப் பார்த்தால் 1-8 வரையான அளவினைக் கொண்ட சிறு கதைகளே அதிகமாகக் காணப்படு கின்றன. 9, 10, 11 என்பவற்றினை விட பக்கங்களின் எண்ணிக்கை அதிகரிக்க வில்லை. சிங்கள மொழிபெயர்ப்பு சிறு கதைகளின் பக்கங்களின் எண்ணிக்கை அதிகளவில் காணப்படுகின்றது. 17 பக்கங்களினைக் கொண்ட சிறுகதை மட்டும் ஒன்று 2001ல் வெளிவந்துள்ளது.

இக்காலப்பகுதியில், இச்சிறுகதை எழுத்து முயற்சிகளுக்கு ஈழத்தின் பல் வேறு பிரதேச எழுத்தாளர்களது பங்களிப் புக்களும் காத்திரமான முறையில் வழங் கப்பட்டுள்ளன. முஸ்லிம் எழுத்தாளர்கள் தமிழ் எழுத்தாளர்கள் சிறுகதைகளினை எழுதியுள்ளனர். முதுபெரும் எழுத்தாளர் கள், முன்னோடி எழுத்தாளர்கள், இளம் எழுத்தாளர்கள் என பல சிறந்த சிறுகதை எழுத்தாளர்களின் கதைகளினை நாம் காணலாம். ஆண், பெண் இருபாலாரும் சிறுகதைகளினை எழுதியுள்ளதனை அவ தானிக்கலாம். இதன் அடிப்படையில் மல் லிகை சிறுகதை ஆசிரியர்களின், தமிழ் எழுத்தாளர்களாக சட்டநாதன், நல்லை. க.குமாரசாமி, பொ.கருணாகரமூர்த்தி பேர்லின், சி.சுதந்திரராஜா, முல்லையூரான், பாலமனோகரன், தில்லை சிவன். யுக தர்மன், செங்கையாழியான், மு.முருகா னந்தன், வே.சாரங்கன், ஒலுவில் அமுதன், முருகபூபதி, இணுவையூர் உத்திரன், ஆசி.கந்தராஜா, சூசன், ஏ.ரவிவர்மா, என். நடேசன், அனாதரட்சகன், திருநகர் நட ராசன், கே.ஆர்.டேவிட், நி.பி. அருளா னந்தம், மருதமைந்தன், செ.யோகநாதன், சி.கதிர்காமநாதன், மா.பாலசிங்கம், வல்லையூரான், கார்த்திக், டொமினிக் ஜீவா, சீனா.உதயகுமார், என்.எஸ்.மாத வன், பதுளை சேனாதிராஜா, சி.சிவாகர், ந.வினோதரன், பாலா. சங்குப்பிள்ளை, சூசை எட்வேட், புலோலியூர். ஆ. இரத் தினவேலோன், கொற்றை. பி.கிருஷ்ணா ணந்தன், ப.பரணீதரன், வேல் அமுதன், அகில் போன்றோரினைக் குறிப்பிடலாம்.

முஸ்லிம் எழுத்தாளர்களாக மு.பஷீர், ஆப்டீன், ஜின்னாஹ், திக்குவல்லை கமால், முத்துமீரான், சாரணா கையூம், திக்குவல்ல ஸப்பான், இப்னு அஸுமத், வெலிபன்னை அத்தாஸ், இளைய அப்துல்லாஹ், எம்.எஸ். அமானுல்லா, ஏ.எஸ்.எம் நவாஸ், எஸ்.ஏ.சி. எம்.கராமத், எம்.எம்.மன்சூர் போன்றோரினைக் குறிப்பிடலாம்.

பெண் எழுத்தாளர்களாக தாட்சாயணி, பத்மா சோமகாந்தன், வசந்தி, யோகேஸ்வரி, பிரமிளா பிரதீபன், சந்திரகாந்தா முருகானந் தன், அ.விஷ்ணுவர்த்தினி, ஸ்ரீரஞ்சனி (கனடா), வசந்தி தயாபரன், உசா நவாகர் போன்றோரும் முஸ்லிம் பெண் எழுத்தாள ராக கெக்கிராவ ஸஹானாவும் சிறுகதை களினை எழுதியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே முஸ்லிம் எழுத்தாளர்களது பங்களிப்பு காணப்படினும் பெண் எழுத்தாளர்களின் ஆர்வம் மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. ஸஹானா என்பவர் மாத்திரம் இடைவிடாது எழுதி வருவது பெருமைக்குரிய விடயமாகும். பொருளாதாரச் சிக்கலினை தமிழ் எழுத்தாளர்களுள் கே.ஆர்.டேவிட், மா.பாலசிங்கம், ச.முருகானந்தன், கொற்றை.பி.கிருஷ்ணானந்தன், பாலா சங்குப்பிள்ளை போன்றவர்களினையும், யோகேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி போன்ற பெண் எழுத்தாளர்களையும் குறிப்பிடலாம். வெலிப்பன்னை அத்தாஸும் எழுதியவராகக் காணப்படுகின்றார். அதிகமாக சிறுகதை எழுத்தாளர்கள் வறுமையின் கொடூரம் பற்றியே எழுதியுள்ளனர்.

மலையகப் பிரச்சினைகள் பற்றி எழுதியவர்களாக யுகதர்மன், இரா. சடகோபன் போன்றோரும் பிரமிளா பிரதீபனும் காணக்கூடியவர்களாக உள்ளனர். சுனாமி அனர்த்தங்களினை சிறுகதைகளாக எழுதியவருள் முஸ்லிம் எழுத்தாளர்களே காணப்படுகின்றனர். வெலிப்பன்னை அத்தாஸ், எஸ்.முத்துமீரான் போன்றோர் எழுதியுள்ளனர். பெண்ணடிமை தொடர்பாக ஆனந்தி, ஸ்ரீரஞ்சனி, சந்திரகாந்தா முருகானந்தன் போன்ற பெண் எழுத்தாளர்களும் வெலிப்பன்னை அத்தாஸ், நி.பி.அருளானந்தம், மருதமைந்தன், தெணியான் போன்ற ஆண் எழுத்தாளர்களையும் குறிப்பிடலாம்.

யுத்தம் தொடர்பான சிறுகதைகளினை எழுதியவர்களாக, ச.முருகானந்தன், ஆனந்தி, யோகேஸ்வரி சிவசுப்பிரமணியம், சந்திரகாந்தா முருகானந்தன், ராணி சீதரன், வே.சாரங்கன், செ.யோகநாதன் போன்றோரினைக் குறிப்பிடலாம். இதிலே, ச.முருகானந்தன், ஆனந்தி, யோகேஸ்வரி சிவசுப்பிரமணியம், போன்றோர் யுத்தம் பற்றிய சிறுகதைகளினை ஏனையோரினை விட அதிகமாக எழுதியுள்ளனர்.

அரசியல் தொடர்பாக, சஹானா, என். நஜ்முல் ஹுசைன் உடன் மொழிபெயர்ப்பு எழுத்தாளர்களான திக்குவல்லை ஸப்வான், மற்றும் வல்லையூரான் போன்ற நால்வருமே சிறுகதைகளினை எழுதியுள்ளனர். 10 வருட காலத்திலும் நான்கே நான்கு சிறுகதைகள்தான் எழுதப்பட்டுள்ளன என்பது விமர்சனத்திற்குரியதாகும்.

மொழிபெயர்ப்புச் சிறுகதைகளும் மல்லிகை சிறுகதைகளில் இடம்பெற்றுள்ளன. சிங்கள சிறுகதைகள், தாய்லாந்து சிறுகதை, பிரான்ஸ் சிறுகதை என்பன மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. சிங்கள சிறுகதைகள் 11 இக்காலப்பகுதியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. சிங்கள எழுத்தாளர்களான பிரியந்த சுஜித் அத்தநாயக்க, தக்ஷனா சம்மி விஜேய திலக, ஆரிய தில பீரிஸ், லீலீ குணசேகர, தரங்க ஜெயசேன, நந்தசேன ஹேரத், நிஸ்ஸங்க ரணவக, உபாலி வணிகசூரிய, கமல்பெரேரா, வசந்த ஸ்ரீவட்டுக்கொட போன்றோரின் சிறுகதைகளை இப்னுஅஸுமத், திக்குவல்லை ஸப்வான், வல்லையூரான், எஸ்.ஏ.சி.எம்.கராமத் போன்றோர் மொழிபெயர்ப்பு செய்துள்ளனர். இவர்களிலேயே திக்குவல்லை ஸப்வான், இப்னு அஸுமத் போன்றோர் அதிகமான சிறுகதைகளினை மொழிபெயர்ப்புச் செய்துள்ளனர். இவர்களின் கதைகள் இன ஒற்றுமை, வறுமை, அரசியல் போன்ற அம்சங்களினைக் கூறுகின்றன.

அடுத்து, மலையாள மூலத்தில் உள்ள சிறுகதையினை 'அழுகை' எனும் தலைப்பில் எஸ்.எஸ்.மாதவன் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். செக்கோஸ்லா வகியாவின் சிறுகதையான 'தனுஷகா'வினை பெஸீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெஸி கோவா எழுதியுள்ளார். இதனை, எம்.எம்.மன்சூர் மொழிபெயர்த்துள்ளார். தாய் லாந்தினைச் சேர்ந்த 'மாயோ' எனும் சிறு கதையினை, நோர்மோ மோஸ் எழுதியுள் ளார். இதனையும் மன்சூர்தான் மொழிபெயர்த் துள்ளார். இவையும் யதார்த்தத்தினை பிரதி பலிப்பவையாக உள்ளன. இவ்வாறு மொத்த மாக 14 சிறுகதைகளினை மொழிபெயர்த் துள்ளனர் மொழிபெயர்ப்பாளர்கள்.

90களில் மொழிபெயர்ப்பாளர்களாகக் காணப்பட்ட எஸ்.எம்.கமால்தீன், கே.கணேஸ், இப்னு அஸுமத் போன்றோர் களில் இப்னு அஸுமத் தொடர்ந்தும் எழுதி வருகின்றார். மற்றைய இரண்டு பேரி னுடைய ஆக்கங்களும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் மொழிபெயர்ப்பு சிறு கதைகளின் பங்களிப்பும் முக்கியமான தாகும்.

90களில் சிறுகதை படைத்தவர்களான வரதர், நந்தி, மாத்தளை வடிவேலன், நீர் கொழும்பு முத்துலிங்கம், த.கலாமணி, செ. பொ.சிவநேசன், ஜெயமோகன், கே.சிவராஜா, கே.விஜயன், அழகு சந்தோஸ், பா.ரத்னசபா பதி, போன்றோர்களும் தாமரைச்செல்வி, பாலரஞ்சனி, சிவாணி போன்றோர்களும் சிறுகதைகள் எழுதவில்லை. இந்தக் கால கட்டத்தில் அவர்களின் சிறுகதைகளினைக் காணமுடியவில்லை. ஏனையோர் தொடர்ந் தும் எழுதுகின்றனர். செங்கையாழியான், தெணியான், தெளிவத்தை ஜோசப், டொமினிக் ஜீவா, ப.ஆப்டீன், மு.அனாத ரட்சகன், ச.முருகானந்தன் தில்லைச்சிவன், செ.யோகநாதன், எஸ்.முத்துமீரான் போன் றோருடன் புதிய பல எழுத்தாளர்களும் சிறு கதைகளினை இக்காலப்பகுதியில் எழுதி யுள்ளனர். உதாரணமாக, யுகதர்மகன், இணு வையூர் உத்திரன், ஒலுவில் அமுதன், ஆசி. கந்தராஜா, ரவிவர்மா, மருதமைந்தன், கதிர் காமநாதன், சீனா.உதயகுமார், பதுளை சேனாதிராஜா, ந.வினோதரன், ஆ.இரத்தின வேலோன் போன்ற புதிய இளைஞர்களும், இன்னும் பலரும் சிறுகதைகளினைப் படைத்துள்ளனர்.

எனினும் கடந்த காலங்களில் அதாவது 2001இற்கு முற்பட்ட காலங்களில் எழுதி வந்த சிறுகதை எழுத்தாளர்கள் பலர் சிறு கதைகளினை இக்காலப்பகுதியில் எழுதாது விட்டது விமர்சனத்துக்குரியதாக காணப்படு கின்றதுடன் குறைபாடாகவும் காணப்படு கின்றது.

மேற்குறிப்பிட்ட எழுத்தாளர்கள் பிரதேச மண் கமழும் சிறுகதைகளினை எழுதியுள்ள னர். மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மலையகம் போன்ற இடங்களில் பிரதேச மண் வாச னையை சிறுகதைகளில் காணக்கூடியதாக உள்ளது. இந்த எல்லைக்குள் மாத்திரம் நின்று விடாது பதுளை, கெக்கிராவ, ஒலு வில், திக்கு வல்லை, இணுவையூர், திரு நகர், வெலிப்பன்னை, கந்தர்மடம், புலோலி யூர் போன்ற பிரதேச ரீதியான எழுத்தாளர் களின் சிறுகதைகளினை காணக்கூடியதாக உள்ளது. முந்திய காலத்தினை விட இந்தக் காலப் பகுதியில் பிரதேச ரீதியான எழுத் தாளர்களின் தாக்கத்தினை அதிகளவில் காணக்கூடியதாக உள்ளது. எனவே ஈழத்து சிறுகதை வளர்ச்சிக்கு மல்லிகையின் பங் களிப்பினை நாம் காணலாம். இவ்வாறு பிர தேச ரீதியான எழுத்தாளர்களுடன் புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் சிறுகதைகளை யும் நாம் அவதானிக்கலாம். உதாரணமாக, லண்டன், சீனா, அவுஸ்திரேலியா, கனடா, ஜேர்மனி போன்ற வெளிநாடுகளில் இருந் தும் சிறுகதைகள் எழுதி வருகின்றனர். சீனா. உதயகுமார், ஸ்ரீரஞ்சனி (கனடா) உஷா ஜவாகர் (அவுஸ்திரேலியா), பொ.கருணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரமூர்த்தி (ஜேர்மனி) போன்றோரினையும் குறிப்பிடலாம். எனவே மல்லிகையானது ஈழத்தில் மட்டும் முடங்கி விடாது கடல் கடந்து பல நாடுகளிலும் சிறுகதை வளர்ச்சிக்கு துணை நிற்கின்றது எனலாம்.

எனவே, 2001-2010 வரையான காலப் பகுதிகளில் வெளிவந்த மல்லிகை சிறு கதைகளில் பொருளடக்கம், சிறுகதை யுத்தி கள், எழுத்தாளர்களது பங்களிப்பு என்பன பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளதுடன் புதுமையான விடயங்களினைக் காலத்துக் குக் காலம் டொமினிக் ஜீவா அவர்கள் உள் வாங்குவதனை அவதானிக்கக் கூடியவை யாகக் காணப்படுகின்றன. மல்லிகை ஆசிரி யர் பெரும்பாலும் தரமான சிறுகதைகளி னையே உள்வாங்கியதனை சிறுகதையாசிரி யர்களின் சிறுகதைகளினை வைத்து கூறக் கூடியதாக உள்ளது. இருப்பினும் யாவும் தரமானவை என்று கூறிவிட முடியாது.

2001ல் சிறுகதைகள் மிகவும் குறை வாகவே வெளிவந்தன. 8 சிறுகதைகள்தான் வெளிவந்துள்ளன. சிறுகதைகளின் எண் ணிக்கை படிப்படியாக அதிகரித்துள்ளதை அவதானிக்கலாம். 2010ல் 51 சிறுகதைகள் வெளிவந்துள்ளன. எனவே 8 ஆகக் காணப் பட்ட சிறுகதைகள் 51ஆக வளர்ச்சியடைந் துள்ளதன் மூலம் ஈழத்து சிறுகதையில் வளர்ச்சியினை அவதானிக்கலாம். ஆண்டு மலர்களில் வெளிவந்த சிறுகதைகளின் எண்ணிக்கையைத் தவிர மேற்குறிப்பிட்ட சிறுகதைகள் வெளிவந்துள்ளன. அதாவது எமக்குக் கிடைக்கப் பெற்ற மல்லிகை சிறு கதைகளினைக் கொண்டு 2001 - 8, 2002 - 20, 2003 - 25, 2004 - 18, 2005 - 33, 2006 - 21, 2007 - 18, 2009 - 34, 2010 - 51 என சிறுகதைகளின் வளர்ச்சி வீதத்தி னைக் காணலாம். இவ்வாறு 10 வருட காலத்திலும் மொத்தமாக ஏறத்தாழ 254 சிறு கதைகள் வெளிவந்துள்ளன.

2001 ஏப்ரல் மாத இதழ் 272ஆவது மாத இதழுடன் தொடங்கி 2010 டிசம்பர் 379ஆவது இதழிலே முடிவடைகின்றது. இடையிலே உள்ள 97 இதழ்களில் 5 இதழ்கள் கிடைக்கப் பெறவில்லை. ஏனைய 92 இதழ்களிலும் உள்ள சிறுகதைகளான 254 சிறுகதைகள் ஆய்வுக்கு எடுக்கப்பட் டுள்ளன. இவற்றினைக் கொண்டு இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ் வாறான இந்த சிறுகதைகளில் அதிகூடிய சிறுகதைகளினை எழுதிய ஆண் எழுத் தாளர்களுள் ச.முருகானந்தனும், பெண் எழுத்தாளர்களுள் ஆனந்தியும் காணப்படு கின்றனர். இவர்கள் இருவரினதும் சிறு கதைகள் மிகவும் காத்திரமானதும் யதார்த்த மானதாகவும் காணப்படுகின்றன. ச.முருகா னந்தன் யுத்தம் பற்றி எழுதிய சிறுகதைகள் மிகவும் சிறந்தவையாகக் காணப்படுகின்றன. ஆனந்தி அவர்கள் பெண்களின் பிரச்சினை கள் பற்றி பெருமளவில் எழுதியுள்ளார்.

மல்லிகை சிறுகதைகளில் சுடலை ஞானம், கணவன் ஒரு கயவன், இன்னொரு விடியலுக்காய், உண்மை வலி, மண்ணின் மைந்தர்கள், மனித சாதி போன்ற கதைகள் சிறந்த கதைகளாகவும் யதார்த்தத்தினை வெளிப்படுத்துவனாகவும் உள்ளன. எருமைக்கு ஒப்பரேசன், அம்மம்மா, ஜேர்மன் தாத்தா போன்ற கதைகள் தனிமனித உணர் வினை மட்டுமே காட்டுகின்றனவேயன்றி உண்மையின் பிரதிபலிப்பினை காண வில்லை. இருப்பினும் பெரும்பாலும் யதார்த் தினை வெளிப்படுத்துவதனால் மல்லிகை சிறுகதைகள் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுகின்றன.

201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13 முகவரியில் வசிப்பவரும், மல்லிகை ஆசிரியரும், வெளியீட்டாளருமான டொமினிக் ஜீவா அவர்களுக்காக, கொழும்பு விவேகானந்த மேடு, 103A, இலக்கத்திலுள்ள Promac Printers அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நீங்கள் தரமான இலக்கியச் சுவைஞரா?


'மல்லிகைப் பந்தல்' வெளியீடுகளைத்
தொடர்ந்து படியுங்கள்.

கடந்த 47 ஆண்டுகளுக்கு மேலாக நமது மண்ணைச் சார்ந்த படைப்பாளிகளின் பல் துறைப்பட்ட நூல்களை வெளியிட்டு வருகின்றது, மல்லிகைப் பந்தல் நிறுவனம்.

மல்லிகைப் பந்தல் வெளியீடுகளை நீங்கள் வாங்கும் போது, அதனது பொருளாதார ஆதரவு மல்லிகை மாத இதழுக்கும் சுவறுகிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

மல்லிகைப் பந்தல்
தொலைபேசி : 2320721
201/4, புதிய கதிரேசன் வீதி.கொழும்பு 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org